குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 14] மன்மத ஆண்டு புரட்டாசித்திங்கள் 10—10—55 [இதழ் 1




'கலைப்பால் அமுதம் தெளிக்கும் வெள்ளோதிமம்'

ஆசிரியர் வித்துவான் சோமசுந்தரத் தம்பிரான்

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

## உட்பொருள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | 'சிவ சிவ' என்னும் விளக்கேற்றம் ... | க |
| 2. | இராமேசுவர யாத்திரை ... | சு |
| 3. | உண்மை விளக்கம் ... | 1 |
| 4. | சேக்கிழார் கண்ட இசைத்தமிழ் (4) ... | 6 |
| 5. | அரனும் ஐந்தொழிலும் ... | 11 |
| 6. | கண்ணகி ... | 13 |
| 7. | விருத்த வகை ... | 17 |
| 8. | பூலோக விமர்சனம் ... | 22 |
| 9. | வேலூரில் சென்று பார் ... | 25 |
| 10. | தமிழரே முதலோர் தமிழே முதன்மொழி ... | 34 |
| 11. | மணையில் மணமக்கள் ... | 43 |
| 12. | காலப்போக்கு ... | 48 |
| 13. | மாசில் வீணை ... | 50 |
| 14. | சுற்றம் தழால் ... | 57 |
| 15. | ஐயோ பாவம் பூனையே! ... | 59 |
| 16. | கடவுள் அருளிய கொய்யாப்பழம் ... | 63 |
| 17. | செய்திகள் ... | 65 |
| 18. | வருங்காலம் ... | 73 |
| 19. | திருக்கேதார யாத்திரை (அநுபந்தம்) ... | 57-64 |
| 20. | மதிப்புரைகள் | கo, 72, அட்டை |


---

### திருமதி. சரஸ்வதி துரைசாமி அவர்கள் வருகை

26—9—'55 தருமையாதீனக் கல்வி நிலையங்களைத் தஞ்சைமாவட்ட கல்வித்துறை ஆய்வாளர் திருமதி சரஸ்வதி துரைசாமி அவர்கள் வந்து கண்டு இன்புற்றார்கள். கீழைக்கலைக் கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகத்தில் வரவேற்கப்பெற்றார்கள், மாணவர்கட்கு, காரைக்குடி அழகப்பா கல்லூரிப் பேராசிரியர் திரு. துரைசாமி அவர்களும், ஷ அம்மையாரும் மிக மதிக்கத்தக்க அறிவுரை வழங்கினார்கள்.

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

820.

மலர் 14 } மன்மத௵ புரட்டாசி௴ 10—10—55 { இதழ் 11

உ
திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## 'சிவ சிவ' என்னும் விளக்கேற்றம்

'சிவ சிவ' என்று இடைவிடாமல் சொல்லப் பழகுங்கள். அதிலே முற்றியநிலை கைவரவேண்டும். வந்ததற்கு அறிகுறி என்ன? இன்பத்துன்பம் வந்தபோதெல்லாம் உங்களை அறியாமல் உங்கள் நாவே 'சிவ சிவா' என்று சொல்லுவதுதான். அதன் முடிவு யாது? உள்ளம் எதை நினைத்தாலும் முதலில் சிவனை நினைத்துக்கொள்வதாகும். அதன் முடிவு எங்கேபோய்நிற்கும்? அறிவிற்குப் பொருளாக வேறு ஒன்றும் தோன்றுமல் சிவமே தோன்றும் நிலையில், பார்க்கும் இடம் எங்கும் நீக்கம் அற நிறைந்து நிற்கும் பொருள் சிவமேயாக விளங்குதல் வேண்டும். அதுதான் 'சிவ சிவ' என்று சொல்லிப் பழகிய பழக்கத்தின் முடிந்த பயன். அப்பயனை அடைய, அப்பழக்கத்தால் சிவமாக வேண்டும். சிவமானூர்க்கே எங்கும் எல்லாம் சிவம் ஆகத் தோன்றும். "சிவாயநம என்று சிந்தித்து இருப்பார்க்கு

உ

அவாயம் ஒருநாளும் இல்லை " இது தமிழ்ப்பெரும் பாட்டியின் பொய்யாமொழி.

'சிவ சிவ' என்னும் இரண்டெழுத்தைமட்டும் ஓதியும், உன்னியும், நோக்கியும் வரும் பெரியோர்க்கு அளவில்லா நன்மைகள் உளவாகும். அதில் அநுபவம் இல்லாதவர்களை 'ஊமர்' என்றது திருமந்திரம். அதனால் அநுபவம் உடையவர் மொழியே அதற்குச்சான்ருகும். ஆதலின், பெரியோர் மொழியே இங்குக் கொள்ளத்தக்கன.

'வசி' என மாற்றியோதலும் உண்டு. அதற்குரிய நிலையும் பயனும் தகுதியும் வேறு. 'சிவ சிவ' என ஓதுவது வேறு. சிவ நிலையில் நிற்பது முற்றும் வேறு. வசி என்னும் நிலைக்கு மேலானது தனிச் சிகாரமாத்திரமாய் நிற்கும் நிலை. சாத்திர முறையில் அதனை இங்கு விளக்குதல் பொருத்தம் அன்று. முடிந்தநிலை பெறுதற்கு உரிய வழிநிலைகளை மேற்கொண்டு பழகுவதே சிறந்தது. பல பிறவியிலே தொடர்ந்துவரும் பழக்கம் எளிதில் தொலையாது. அது தொலையவே அத்தகைய பழக்கம் வேண்டும்.

"பழக்கம் தவிரப் பழகுவது அன்றி
உழப்புவது என்பெணே உந்தீபற
ஒருபொரு ளாலேஎன்று உந்தீபற." (திருவுந்தியார் 2)

'நான் மறந்தாலும் என் நாவே நமச்சிவாய எனச் சொல்லும்' என்றருளினர் நாவலாரூரர். 'நற்றவா உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே'. இத் திருமுறைத் திருவடியை எத்தனையோ முறை நான் சொல்லிக்கொண்டுவந்தும், அத் தகைய அருட்பழக்கத்தை மேற்கொள்ளாத என் தீவினைக்கு நான் என்னதான் செய்வேன்?

திருநாவுக்கரசுநாயனர், 'என் வாயிலோ தூய்மையில்லை. ஐம்பொறி வேடர்க்குள் அகப்பட்டும் அவரால் ஆட்டுண்டும் அவரொடும் உடம்பின் ஒழியாமல் இருக்கின்ற நானே தூய்மை யில்லாத–தகுதியில்லாத நிலையில் 'சிவ சிவ' எனச் சொல்லக் கூடாது என்றுதான் எண்ணியிருக்கின்றேன். இருந்தும், என் நாவோ அதைச் சொல்லாதிருப்பதில்லை' என்றருள்கின்ருர்.

"தொடலிடை வைத்து நாவிற் சுழல்கின்றேன் தூய்மையின்றி
உடலிடை நின்றும் பேராஜவர் ஆட்டுண்டு நானே."

என்பது அவர் அருள்மொழி.

"சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே."

இத் திருமந்திரத்தால் அறியப்படுவது :- தீவினை 'சிவ சிவ' என ஓட்டாது. 'சிவ சிவ' என்ற அந்நொடியிலேயே தீவினை தீர்ந்தொழியும். 'தேவகதியும் முடிவான சிவகதியும்பெறலாம்' என்பதாகும்.

'சிவகதியே கதி. மற்றுள்ள எல்லாம் பவகதி' (ஷை 1536) 'சிவம் அல்லது இல்லை அறையோ' என்று ஆணையிட்டுக் கூறிய அவரே, 'சிவனே சிவஞானி' என்றருளியதால், சிவமும் சிவஞானியும் சிவ என்பதன் பொருளாவர். சிவஞானிகள், ஊரும் பேரும் பிறவும் வேண்டாதவரே ஆயினும், உலகோர்க்கு அவை உள்ளவர்போலத் தோன்றுவர். அவர் திருப்பெயர்க்கும் காலமும் இடமும் வேண்டும்.

சிவம் உயிர்கட்கு அருளும் பொருட்டே ஆண் உருவம் பெண் உருவம் அலியுருவம் கொண்டதாக இசைகின்றார்கள். 'கண்டன எலாம் மோனவுருவெளி அது ஆகவும் கருதி அஞ்சலி செய்குவாம்' என்பது எல்லோர்க்கும் விளங்குமோ? ஆணும் பெண்ணும் அலியும் பிறவும் ஆகித் தோன்றச் சிவத்தைக் கண்டவர் அருளிய திருப்பாடல்கள் பல இருக்கின்றன.

"பெண் ஆண் அலிஆகும் பித்தா பிறைசூடீ"

"பெண்ணானை ஆணானைப் பேடியானை"

"பெண்ணவனை ஆணவனைப் பேடானானை"

"பெண்ணொடுஆண் அலியாய்ப் பிறவாவுரு வானவனே"

என மூவர்பாடலிலும் வருதல் காணலாம். ஆகவே, சிவபிரானை அம் மூன்று வடிவிலும் கண்டு வழிபடக் கற்றுக்கொள்ளவும்

வேண்டும். அவ்வடிவுகளுள் சிவஞானிகள் திருவடிவம் சாலச் சிறந்தது. அவர்கள் அச்சிறப்பை எதனுல் அடைகின்ருர்கள்? ‘சிவ சிவ’ என்னும் திருவைந்தெழுத்து ஓதிய பழக்கத்தால் தான். அந்த நற்பழக்கம் வரவேண்டும். அதற்குப் பல வழிகள் இருக்கலாம். கண்வழியாகக் கருத்தைத் திருத்தும் வழி மிகச் சிறந்தது. இதைத் தம் அநுபவத்தால் கண்டுணர்ந்தார்கள் சிவஞானிகள். அவர்களுள் ஒருவராய் இக்காலத்தில் நம் கண் காண வீற்றிருப்பவர்கள் - தருமைக் கண்மணிகளுள் சிறந்த நன்மணியாகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி **அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**, தருமையில் வீற்றிருந்தருளும் தங்கள் அருமைக் குருமணியைத் தரிசித்தற்கு எழுந்தருளினுர்கள். அன்று ஞாயிறு (சூரியன்). சிவ சூரியன் அச்சூரியனுக்குஉயிர். ‘அருக்கன் ஆவான் அரன் உரு அல்லனே’.

‘சிவ சிவ’ என்பது தென்னுட்டிலும் வடநாட்டிலும் விளக்கம் புரிவது யாரால்? எந்நாள் முதல்? இக்கேள்விகட்கு விடை சொல்ல எல்லார்க்கும் முடியும்! தருமையாதீனத்தில் – திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில்ஸ்ரீகாசிமடம். வித்துவான், ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சிவப்பிர காசத்தைக் காட்டியருளினுர்கள். திருமடாலயத்தின் உள்ளே பூசை மடத்திலே சிவ சூரியன் ‘சிவ சிவ’ என விளக்கம் செய்யத் தொடக்கம் ஆயிற்று. அந்த அருள்விளக்கம் பொய்யா விளக்கமாகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருக்கைச் சிறப்பிற்கு உரியதாயிற்று. ‘எல்லா விளக்கும் விளக்கல்ல சான்ருேர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு’. சம்பிரதாயத்தை அன்று அங்குக்கண்டவர் தாம் அறியவல்லவர். அடியேன் அதைச் சொல்லவோ எழு தவோ வல்லேன் அல்லேன். சைவசம்பிரதாயங்களைக் காத்தல் வேண்டும். அதற்காகவும் மடாலயங்கள் என்றும் விளங்கி எல்லோர்க்கும் அவற்றைக் காட்டி நிலவுதல் வேண்டும். சம்பிரதாயத்தை அறிய வழியில்லாமையால், சைவசாத்திரங் களில், வல்லவரும் சொல்லற்கரிய பல அரும்பெருங் கருத்துக் கள் விளங்காமல் உள்ளன. சைவசித்தாந்தம் பலர்க்கு விளங்க வில்லை என்று அதன்மேல் குறைகூறுகின்றனர். சம்பிரதாய ஞானமும் பெற்றவர்க்குச் சாத்திரம் எளிதில் விளங்கும். நிற்க, உண்மை யன்பொடு பொருளறிந்து ‘சிவ சிவ’ என்று ஒரு முறை சொல்லிவிட்டுப் பின், சிவனை இகழ்ந்தாலும், அவ்

இகழ்ச்சியை அவன் புகழ்ச்சியாகவே கொண்டுவிடுவான் என்று சிவப்பிரகாச சுவாமிகள் பாடினார்கள். அது வெறும் பாட்டாகாது. உண்மைப்பாட்டு. அதனைச் சுந்தரர்பெருமான் அவையில் இகழ்ந்ததைப் பொறுத்த சிவனது புராணம் மெய்ப்பிக்கும். அந்த இகழ்ச்சியும் பழமொழியில் இருத்தல்வேண்டும். நிந்தாஸ்துதி என்றிருப்பதை அறிஞர் அறிவர்.

"முந்தையோர் சொல் மொழிந்து சிவனென
நிந்தைதான் அச் சிவனை நிகழ்த்தினும்
வந்த தீவினை மாற்றுவான் ஆதலால்
சிந்தை யோடு சிவசிவ என்மினே."

வேதம் ஆகமம் முதலிய பலவற்றை ஓதி இளைத்து உள்ளம் தடுமாறுதல் ஏன்! கதிரவன் முன் இருள்போல எல்லாத் தீங்கும் நில்லாதோடும், சொல்லாய் 'சிவசிவ' தொடங்கி இன்றே. சிவசிவ என்பதற்கு யாவரும் உரியர். வாய்ப்பொறியால் சிவசிவ என்றால் மற்றை நாற்பொறியால் வந்த தீவினையும் தீரும். சிவசிவ என்பவர்க்கு எந்த விரதமும் வேண்டா. அதுவே எவரையும் என்றும் எங்கும் காப்பது. சிவனடியைக் காட்டும் கல்வியும் சிவஞானச் செல்வமும் முதலிய நலமெலாம் நல்குவது அது. அதன் நினைவால், நாளும் கோளும் நலியா. நோய் நொடி அணுகா. ஆயுளும் பல்கும். அறமெல்லாம் அகலாமல் வளரும். பயிரைக் காக்கும் வயலான் போல, சிவசிவ என்பவரை அவர் பின்னே திரிந்துகொண்டு காப்பான் சிவபிரான். சிவசிவ என்னாதவர் விண்ணீசர் எனினும் நீசரே. சிவசிவ என்பவர் நீசர் எனினும் ஈசரே. அவரைக்கிட்டி வணங்கவும் நடுங்குவன் கூற்றுவன்.

"பாரெலாம் இகழும் இகழ்ச்சியும் புகழ்ச்சிப்
பயன்என உணர்ந்துநாள் தொறும் ஆ
ரூரனார் அவையின் இகழ்ந்துசொல் துதியின்
உவக்கும்நின் பதம்தொழ அருளாய்
ஏருலாம் அண்டச் சுவர்மதில் மிசைப்பா
விலங்குறும் அண்டகோ ளகையாச்
சாரும்ஆ லயத்தில் இலிங்கமாம் சோண
சைலனே கைலைநா யகனே."

வாழ்க திருவருள்.

825

# இராமேசுவர யாத்திரை

**திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர் அவர்கள்**

ஆதீனத் திருக்கோயில் மேற்பார்வையாளர், தருமபுரம்.

அண்மையில் ஆதீன மடாலயத்திற்குத் தென்னாட்டுப் பெரியார் ஒருவர் வருகைபுரிந்தார். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்துப்பேசிக்கொண்டிருந்தார். அங்குப் பண்டாரக் கட்டிலே இராமர் சிவலிங்கத்துக்குப் பாலபிஷேகம் செய்து வழிபடுவதாயுள்ள ஒருபடம் வைக்கப்பட்டிருந்தது. வந்தபெரியார் கம்ப ராமாயணம், வால்மீகி ராமாயணம், இதிகாசங்கள், புராணங்கள், வேதம், உபநிஷத்துக்கள், தமிழிலக்கியங்கள், திருமுறைகள், திவ்யப்பிரபந்தங்கள் முதலிய எல்லாம் கற்ற பெரியார். பலமொழி வல்லுநர். பல பெரிய சிறிய நூல்களுக்கு ஆசிரியர். உலகம் போற்றும் உத்தமர். காந்தியடிகளின் பிரதம சீடர். அரசியல்வாதி. இவ்வளவிலும் உலகியல் தருமம் நிலைக்க வேண்டுமானால் இராமாயண நீதி உறுதியாக மக்கள் மனத்தே ஊன்ற வேண்டுமென்ற பெரு நோக்குடையார். இந்தப் பெரியாரின் பார்வை அந்த இராமர் படத்தின் காட்சியில் இலயித்தது. நினைத்ததை உடனே அப்படியே சொல்லும் அஞ்சா நெஞ்சினராகையினால் "இராமநாதர், இராமநாதர்" என்றனர். என்னைப்போன்ற பலரும் வியப்போடு அங்குள்ள பல படங்களையும் பார்த்துப் பொருள் விளங்காத நிலையில் நின்றோம். சொன்னார்கள் "நான்காம் வேற்றுமை உருபேற்றி இராமனுக்கு நாதன் என்று சொல்ல வேண்டும். விஷ்ணுவின் அம்சமாக அவதார - புருஷராகத் தோன்றி உலகுகாத்த இராமனது வழிபடு தெய்வமாகிய இராமலிங்கம், இராமனுக்கு நாதனாகிய இராமநாதர்" என்று விரித்துப் பொருள் சொல்லி மகிழ்ந்தார்கள், மகிழ்வித்தார்கள்.

இராமநாதர் என்றதுமே இராமேசுவரம்தான் நமக்கு நினைவு வருகிறது. இராமபிரானால் ' பிரதிஷ்டை செய்யப் பெற்று விளங்குகின்ற இராமநாதசுவாமியும் தனுஷ்கோடியும் தான் நம் மனக்கண்ணில் வந்து நிற்கின்றன. இராமநாதர் எழுந்தருளியிருந்து அருள் வழங்கும் பெருந்தலம் இராமேசுவரமாயிற்று.

இராமேசுவரம் தென்னிந்திய சிற்பக் கலாசாரத்துக்கு உறைவிடம். கட்டிடக் கலைக்கும், கடல் மறித்து மடை கட்டித் தேக்கி வைக்கும் கலைக்கும் நிலைக்களனாக இருந்து விளங்குவது. இங்கிருந்து இராமரது காலத்திலும், பிறகும் பல பல அரசர்கள் கடலில் அணைகட்டி இலங்கை மீது படையெடுத்துச் சென்றிருக்கிறார்கள். இது சரித்திரம். அக்காலத்திலேயே தென்னாட்டார் இக்கலையிலும் வல்லவர்கள் என்பதற்கு ஒரு நற்சான்று. பொறியியற்கலை பெரிதும் விரிந்திருப்பதாகக் கருதக்கூடியதாக இக்காலத்திலும் சாதிக்க முடியாத ஒன்றை அக்காலத்தில் நம் முன்னோர்கள் செய்து முடித்தார்கள் என்ற பெருமை அங்குச் செல்பவர் மனத்தில் நீங்காது நிற்கும். இவ்விதமாக நம் நாட்டின் அறிவு நுட்பத்திற்கு அளவு கோலாக உள்ள இந்தத் தீவும் அதில் உள்ள இராமநாதர் ஆலயமும் தனுஷ்கோடியும் தென்னாட்டு வட நாட்டு மக்களின் உணர்வில் கலந்து கலாசாரத்தாலும் பண்பாட்டாலும் இருதிறத்தாரும் ஒன்றுபட்டவர்கள் என்ற உண்மையை உலகுக்கு எடுத்துக் காட்டிவரும் பெரும் பாலமாக, அணையாக, அரணாக நிற்பன. ஒரு நாட்டின் கலாசார மேன்மை, பண்பாட்டின் மேன்மை, இவைகளுக்கு அளவு கோல் அந்த நாட்டின் மெய்ஞ்ஞான மேன்மை என்று அறிஞர் கூறுவர். அந்த மெய்ஞ்ஞானம் பல நாள் பயிற்சியால் வருவது. அந்தப் பயிற்சிக்கு முதற்படி கடவுள் வழிபாடு.

இவ்விதமாக மெய்ஞ்ஞானத்தின் அடிப்படையாகிய கடவுள் வழிபாட்டினால் உயர்ந்தோர் நம் நாட்டில் பலர். அவர்களைத்தான் அடியார்கள், பெரியார்கள், சமய வழிகாட்டிகள், ஆசாரியப் பெருமக்கள் என்றெல்லாம் நாம் பேசுகிறோம். அவர்கள் வழியிலே நின்று அவர்கள் பெற்ற இன்பத்தை நாமும் பெற்று உய்தி யடைகிறோம். இவ்விதமாக நமக்கு ஆசாரியப் பெருமக்களாகப் பலரும் அவ்வப்பொழுது நம் நாட்டில் பரத கண்டத்தில் பலப்பல இடங்களிலும் அவதரித்து மக்களுக்கு நன்னெறி போதித்து வந்தனர், வருகின்றனர் என்பதை நாம் அறிவோம். மற்றெந்த நிலையில் வடநாட்டாருக்கும் தென்னாட்டாருக்கும் வேற்றுமை காண முடியுமானாலும் இந்த வழியிலே வேற்றுமை காண முடியாது. சமய கலாசார நிலையிலே, வழிபாட்டு நிலையிலே, பக்தி நிலையிலே ஒற்றுமையைத்தான் காணமுடியும். தென்னாட்டார் வடநாட்டிலுள்ள ஸ்ரீ காசி,

கேதாரம் முதலிய பெருந்தலங்களுக்கு யாத்திரை சென்று வழிபட்டுப் புண்ணிய நதியிலே நீராடிக் கங்கை எடுத்துவந்து இராமநாதனுக்கு அபிஷேகித்துக் கடலாடி யாத்திரையின் முக்கிய பலனை அடைகிறார்கள் அதேபோல வடநாட்டாரும் அந்த நாட்டிலுள்ள பலதலங்களையும் வழிபட்டுக் கங்கை எடுத்து வந்து இராமநாதருக்கு அபிஷேகித்துக் கடலாடித் தீர்த்தமெடுத்துச்சென்று ஸ்ரீ காசியில் உள்ள விஸ்வநாதருக்கு அபிஷேகித்து உய்வடைகிறார்கள். இந்த உய்வு மனத்தின் நிறைவு. இதனை வேறெவ்விதத்திலும் காணமுடியாது. பயனை நுகரமுடியும், சொல்லால் சொல்ல முடியாது; எழுத்துமில்லை. இவ்விதமாக இந்தப் பரதகண்டத்திலே உள்ள மக்கள் அனைவரையும் வேற்றுமையின்றி ஒருமையில் பிணைக்கும் சக்தி இந்தத் தலத்துக்கே உரிய தனி மகிமையாகும்.

இவ்வளவு பெருமையும் உள்ள பெருந்தலம் தமிழ் நாட்டின் ஒரு கோடியில் அதுவும் நாற்புறமும் கடலால் சூழப்பட்ட ஒரு சிறு தீவில் அமைந்து விளங்குகிறது. அந்தத் தீவில் உள்ள ஒவ்வொரு மணலும் சிவலிங்க ஸ்வரூபம் என்ற தலப் பெருமையும் இதற்கு உண்டு. இதனை அணுக அணுக நம் உள்ளத்திலே விவரிக்க முடியாத ஓர் இன்பம், பார்க்கப் பார்க்கக் காட்சியிலே தெவிட்டாத ஓர்இன்பம், வாழ்க்கையிலே ஒரு பெரிய இன்பம். கடவுள் மாட்சியைக் காட்டும் இன்பம். ஆம் அது மாட்சிமைதான். இந்த இன்பம் நம்மை வெகுவாக இழுப்பதுபோன்ற ஓர் உணர்வு ஏற்படுகிறது. எந்த நிலையில்லாதவர்களானாலும் இதனை இவ்விதமாக உணராமலிருக்க முடியாது.

இத்தகைய பெரிய சக்தி வாய்ந்த இத்தலம் வேதகாலத்திலேயே சிறப்புற்றிருந்தது. சேதுவாக - தனுஷ்கோடியாக விளங்கியது. இராவண சம்ஹாரம் செய்துவந்த இராமன் தன் மனம் நிறைவுறாது ஏதோ ஒரு சக்தி தன்னை அலைக்கழிப்பதை உணர்ந்தான். கந்தமாதன பர்வதம் சேர்ந்தான். அங்குள்ள முனிவர்கள் அவனை வரவேற்று ஆசியருளினார்கள். இராமனது வாட்டங் கண்டார்கள். உண்மை உணர்ந்தார்கள். புலஸ்திய வம்சத்திலே வந்த இராவணனனைச் சம்ஹரித்த தோஷம் பிரமகத்தியாக இராமனைப் பற்றியிருப்பதைத் தெரிந்தார்கள். எந்த வினையும் தீர்க்க மருந்தொன்று உண்டு. அந்த

மருந்து சிவவழிபாடெனும் அருமருந்து என்பதை அனுபவத்தால் கண்ட பெரியார்கள் அவர்கள். ஆகவே இராமனது பெரும்பழி தீர்க்கவல்லது அதுவொன்றே என்று கண்டார்கள். அதன்படியே செய்து உய்தி பெறும்படி இராமனுக்கும் உபதேசித்தார்கள். நாளும் நாழிகையும் குறித்தார்கள். ஆனால் நல்லதொரு சிவலிங்கத்திருமேனி வேண்டுமே என்ற கவலை வந்தது. அனுமன் காசியிலிருந்து தான் கொண்டுவருவதாகச் சொல்லிப் புறப்பட்டான். நாழிகையும் வந்தது. அனுமன் வரவில்லை. எல்லோரும் ஏங்கினர். உண்மை யுணர்ந்த பெரியோர்கள் கடற்கரை மணலே சிவலிங்கமாகப் பிடிக்கலாமென்றனர். சீதை சிலைபிடிக்க இராமன் குறித்த காலத்திலே சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து விதியினால் வழிபாடாற்றினான். அனுமான் வந்து நடந்தது கண்டான். சொன்னபடியே நல்லதொரு சிவலிங்கத்திருமேனி கொண்டு வந்திருந்தான். ஆனால் காலத்தில் தான் வராததன் குற்றம் உணர்ந்தானில்லை. குரங்கினத்தின் குணமும் அவனை முடுக்கிற்று. "அளவிலும் உருவிலும் நல்ல மூர்த்தமாக நான் எழுந்தருளிக் கொண்டு வந்திருக்கிறேனே. அப்படியிருக்க மணலிலே பிடித்த சிலை நிலைநில்லாதே. அதனை எடுத்துவிட்டு நான் கொண்டு வந்திருப்பதைப் பிரதிஷ்டை செய்து வழிபாடுகளைச் செய்யலாமே" என்றான் பணிவோடு. காலத்தாற் செய்ததன் பெருமையை அனுமனுக்கு உணர்த்த வேண்டி அப்படியானால் உன்னால் முடிந்தால் இந்த மணல் இலிங்கத்தை அகற்றிவிடு; விருப்பப்படியே செய்யலாம்" என்றனர் முனிபுங்கவர்களும். "வெறும் மணலால் ஆக்கப்பட்டதொன்றைப் பெயர்த்தெடுக்க என் வலிமையும் வேண்டுமோ என்று, அகந்தை அவனுக்கு ஏற்பட்டது. கைவைத்து அசைத்தான். வலிதாக இருந்தது. தனது முழுப்பலமும் கொண்டாலும் முடியாததுபோலத் தோன்றிற்று அவனுக்கு. இருந்தாலும் தன் தோல்வியை அப்பொழுதே ஒப்புக்கொள்ள அவன் மனம் இடங்கொடுக்கவில்லை. உடனே எண்ணினான் தன் வாலின் பெருமையை. வாலினால் கட்டினான். தன்பலம் கொண்டமட்டும் ஆகாயத்தில் எகிறி எழுந்தான். வாலறுந்தது. வீழ்ந்தான் மண்மேலே. கண்டான் அதன் பெருமையை. நாணினான். உய்தி தேடினான் பெரியோர்களிடம் இரக்கத்தால் அப்பெரியோர்களும் "இந்தச் சிவாபசாரம் தீரவேண்டுமானால் அந்தப் பரம்பொருளை வழிபட்டுத்தான் தீர்த்துக்கொள்ளவேண்டும். நீ கொண்டு

829



வந்து இலிங்கத் திருமேனியைப் பக்கத்திலே பிரதிஷ்டை செய்து வழிபடுவாயாக; உன் வினை தீரும்'' என்றனர். அவ்விதமே செய்து சிவானுக்ரகம் பெற்றான். பெருமை உணர்ந்தான். இவ்விதமாக இராமனும் அனுமனும் பிரதிஷ்டை செய்து தத்தம் பழிபோக்கிக்கொண்டார்கள் இங்கே இந்த இரண்டு பெருமானையும் வழிபட்டால் தான் முழுப்பலனும் கிட்டும். இது சேது புராண வரலாறு.

இந்தப் பெருந்தலத்தில் சமயாசாரியப் பெருமக்களுள் திருஞானசம்பந்தப் பெருமானும் வாகீசப் பெருந்தகையும் எழுந்தருளியிருந்து பதிகம் பாடி யருளினார்கள். திருஞான சம்பந்தப் பெருமானோடு சௌந்தர பாண்டியனும் மங்கையர்க் கரசியாரும் குலச்சிறையாரும் உடன் வந்து வழிபட்டார்கள்; அடியார் வழிபாடு செய்தார்கள் என்று தெரிகிறது. இந்த இரண்டு பெரியார்களும் இந்தத் தலத்தில் சிலகாலம் தங்கி யிருந்து தொண்டு செய்தார்கள் என்பதும் தெரியவருகிறது. வந்த சம்பந்தப் பெருமான் பொங்கி எழுந்த காதலோடு ஊர் வந்தடைந்ததும் உடனே திருக்கோயில் சென்று வழிபட்டார்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிப் பட்ட செய்தி இனிவரும்.

---

மதிப்புரை

## மயிலத்தந்தாதி

இயற்றியவர் : திரு. P. N. இராசமாணிக்கம் பிள்ளை அவர்கள் புதுவை. பக்கங்கள் 16. பிள்ளை அவர்கள் முன்பே 'அன்புவிடுதூது' பாடிப் புகழ்பெற்ற பாவலர். மயிலத்தில் எழுந்தருளியிருக்கும் மயிலேறும் கடவுள், குன்றுதோறுடும் குமரன், குறிஞ்சிக்கிழவன் முருகன் மீது பாடப்பெற்றது. இனிய எளிய தமிழில் பொருளாழமும் நுட்பக் கருத்துக் களும் செறிந்துள்ளது. ஒரு பாடலின் இறுதிச்சொல்லோ எழுத்தோ அடியோ அடுத்த பாடலுக்கு முதலாக வந்து மாலைபோல அமைவது அந்தாதியாகும். இவ்விலக்கணத்தை அடிபொற்றிய இந்நூல் நூறு பாடல் களைக் கொண்டது. இதுபோன்ற பிரபந்தங்கள் தமிழில் நாளும் பெருகித் தமிழின் நலம் வளர்க்க !

வி. சா. குருசாமி.

சாத்திரப் பகுதி

மன வாசகங் கடந்தார் அருளிய

# உண்மை விளக்கம்

தருமபுர ஆதீனப் புலவர், சித்தாந்த ரத்நாகரம், மதுரகவி,

திரு, முத்து, சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்

கச நன்றாக நீர்இடமா நாஇரதம் தான்அறியும்
பொன்று மணம்மூக்குப் பூஇடமா — நின்றுஅறியும்
என்று ஓதும் அன்றே இறைஆ கமம்இதனை
வென்றார்சென் றார்இன்ப வீடு.

குறிப்பு :- நீர் - அப்பு. இரதம் - ரஸம். பொன்றா - அழியாத. பூ - பிருதிவி. இறையாகமம் - சிவாகமம். இதனை வென்றார் - இப்புலனைந்தும் வென்றவர்; பொறிவாயில் ஐந்தவித்தவர்.

## செயற்பொறிகள் (கன்மேந்திரியம்) பூதங்களை இடமாகக்கொண்டு செயலாற்றும் இயல்பு

நீர் - அப்புத் தத்துவம். மலாதி - மலஜலம் முதலியன. குதம் நீர் இடம் ஆக (நின்று) மலாதிவிடும் என்றும், உபத்தம் பார் (பிருதிவிதத்துவம்) இடம் (ஆக நின்று) விந்து (விடும்) என்றும், சொல்வகை (அந்நுவயம்) செய்துகொள்க. வாக்கு வசனிக்கும்; கால் போக்கு ஆரும்; கை ஏற்கும் இடும்; குதம் மலாதி விடும்; உபத்தம் விந்து விடும் என்று எழுவாய் பயனிலை கொண்ட தனித்தொடர்களாகப் பிரித்துணர்க.

வாக்கு என்னும் தத்துவம் வாயைத் திறந்தால், ஆகாய தத்துவத்தை இடமாகக்கொண்டு பேச்சு ஆகிய காரியத்துக்குக் காரணமாக இருப்பதால் பேசுதல் நிகழ்கின்றது. அத் தத்துவம் தொழிற்படல் இல்லையேல் ஊமை யாய் விடும்.

கால் (பாதம்) என்னும் தத்துவம் அக்கால்களில் உள்ள வாயு தத்துவத்தை இடமாகக்கொண்டு போக்கு வரவு ஆகிய காரியத்துக்குக் காரணமாக இருப்பதால் போதல் வருதல்

நிகழ்கின்றன. அத் தத்துவம் தொழிற்படாவிட்டால், பாரிச (பக்க) வாயு எனப்படும் நோய் விளையும்.

கை (பாணி) என்னும் தத்துவம் தேயு என்னும் தத்துவத்தை இடமாகக்கொண்டு ஏற்றல் இடுதல் ஆகிய காரியத்தை நிகழ்த்துகின்றது. கைகளாகிய உறுப்புக்கள் எடுத்தல் கொடுத்தல் முதலியவற்றைச் செய்யப் பயன்படா விட்டால், பாணி என்னும் தத்துவத்தின் தொழிற்பாடு அவ்வுறுப்புக்களில் இல்லை என்று அறிக. இவ்வாறே, ஏனைய நான்கு உறுப்புக்களுக்கும் அறிக. வாய், கால், கை முதலிய உறுப்புக்கள் வேறு. அவற்றை இடமாகக்கொண்ட வாக்கு முதலிய தத்துவங்கள் வேறு. தூலதேகத்தவை உறுப்புக்கள்; சூக்கும தேகத்தவை அத் தத்துவங்கள்.

குதம் என்னும் தத்துவம், குதம் என்னும் உறுப்பில் அப்புத்தத்துவத்தை இடமாகக்கொண்டு நின்று, மலஜல முதலியவற்றை வெளியிடும். நீர் குடித்து மலம் போக்கும் நிகழ்ச்சியாலும் இதனை உணரலாம்.

உபத்தம் என்னும் தத்துவம், ஆண் பெண் குறிகளில், பிருதிவி தத்துவத்தை இடமாகக்கொண்டு நின்று, சுக்கில சுரோணிதங்களை விடும்.

| வரிசை | தொழிற்கருவி | பூதம் | உறுப்பு | செயல் |
|---|---|---|---|---|
| 1 | வாக்கு | விண் | வாய் | பேச்சு |
| 2 | பாதம் | காற்று | கால்கள் | நடை |
| 3 | பாணி | தீ | கைகள் | கொடை |
| 4 | பாயுரு | நீர் | மலத்துவாரம் | விடை |
| 5 | உபத்தம் | மண் | குறி | சிற்றின்பம் |

சிவாகமங்கள் கூறும் வசநம், கமநம், தாநம், விசர்க்கம், ஆநந்தம். என்னும் ஐந்தும் நிகழ்தற்கு ஏதுவான

கன்மேந்திரியங்கள் அவ்வாய் முதலிய உடலுறுப்புக்களில் உள்ள சூக்கும தத்துவங்கள்.

கரு கண்ணுதல்நூல் ஓதியிடும் கன்மேந்திரியங்கள்
எண்ணுவச னுதிக் கிடமாக — நண்ணியிடும்
வாக்குப்பா தம்பாணி மன்னு குதம்உபத்தம்
ஆக்கருதும் நாளும் அது.

குறிப்பு :- கண்ணுதல் - நெற்றிக் கண்ணுடைய சிவ பெருமான். கண்ணுதல் நூல் - சிவாகமம். ஆ - ஆக. அது - அச்சிவாகமம். கருதும் - ஆய்ந்துரைக்கும்.

வாக்கு முதலிய சூக்குமதத்துவங்கள் ஆகாயம் முதலிய உடலுறுப்புக்களில் நின்று, வசனம் முதலிய செயல்களை ஆற்றும்.

கசு வாக்காகா யம்மிடமா வந்துவச னிக்குங்கால்
போக்காரும் காற்றிடமாப் புல்கிஅனல் — ஏற்கும்
இடும்கை குதம்நீர் இடமா மலாதி
விடும்பார் இடம்உபத்தம் விந்து.

குறிப்பு :- வசனிக்கும் - பேசும். போக்கு - செலவு, கமநம். வரவும் இதில் கொள்ளப்படும். புல்கி - பொருந்தி. அனல் - தேயு. கை அனல் புல்கி ஏற்படும் இடும் என்க. கால் காற்று இடமாப் புல்கிப்போக்கு ஆரும் எனின், அனல் ஏற்கும் இடும் கை என்ற தொடர் வழுவுற்று, கை அனலைப் புல்கி ஏற்கும் இடும் என்னும் செம்பொருள் பயவாது. ஏற்கும் - வாங்கும். * இடும் - கொடுக்கும்.

---

* வித்தும் இடல் வேண்டுங்கொல்லோ விருந்தோம்பிமிச்சில் மிசை வான்புலம்' என்பதில் உள்ள 'இடல்' கொள்வோன்பற்றியதாதலின்' புலத்திற்கு என நான்கனுருபு விரித்தார் பரிமேலழகர். அது, "விருந் தோம்பி மிச்சில் மிசைவான் புலம் வித்தும் இடல் வேண்டுங் கொல்லோ" என்று அமைந்த வாக்கியம் ஆதலின், நான்கனுருபு ஈற்றில் தொக்க தன்று. தொடரீறு வேறு செய்யுளீறு வேறு. இதனை அறியாமல், பரிமே லழகருரையைத் திருத்தியது பொருந்தாது. தத்தம் அறிவின் அளவையே நிறைவுடையதாகத் துணிந்து, ஒவ்வொருவரும் திருத்திக்கொண்டு வரின், பரிமேலழகர் உரையின் உண்மையுருவம் நிலைக்குமோ ? தமது திருத்தத்தை அடிக்குறிப்பாகக் காட்டியிருக்கலாம்.

## உட்கருவிகளும் (அந்தக்கரணமும்) அவற்றின் செயல்களும்

மனம் பற்றும். புத்தி நிச்சயிக்கும். அகங்காரம் எழுந்திருக்கும். சித்தம் சிந்திக்கும். இதன் விளக்கத்திற்குச் சிவ ஞானபாடியத்திலிருந்து உணரத்தக்க பகுதி இது :-

"ஐம்பொறிகள் அறிந்த விடயத்தைச் சித்தம் சிந்தித்து அறியும். யான் சிந்தித்தேன் என்று அறியமாட்டாது. மனம் அதனைச் சங்கற்ப விகற்பம் செய்து அறியும். யான் சங்கற்ப விகற்பம் செய்தேன் என்று அறியமாட்டாது. ஆங்காரம் ஒருப்பட்டெழுந்து அறியும். யான் ஒருப்பட்டெழுந்தேன் என்று அறியமாட்டாது. புத்தி நிச்சயித்து அறியும் யான் நிச்சயித்தறிந்தேன் என்று அறியமாட்டாது. ஆதலின், அவ்வாறு அன்றி அவற்றோடு கூடி, யான் சிந்தித்தேன், பற்றினேன், எழுந்திருந்தேன், நிச்சயித்தேன் என்றும், அதன் பின் அது அதுவாய்ப் பரிணமித்து சுகதுக்கமோக ரூபமாய் நின்ற புத்தி தத்துவத்தின் பரிணமங்களைக் கலாதிகளோடு கூடி, இது சுகம் இது துக்கம் இது மோகம் என்றறிந்தும், யான் சுகித்தேன். யான் துக்கித்தேன். யான் மோகித்தேன் என்றறிந்தும் இங்ஙனம் பிறவற்றை நோக்கியும் தன்னை நோக்கியும் சித்தாகிய ஆன்மா, தம்மை நோக்கிச் சித்தாகாத அந்தக்கரணங்களின் ஒன்று ஆமாறு யாண்டையது?"
(சூ. 4 அதி. 1)

கஎ அந்தக் கரரணம் அடைவே உரைக்கக் கேள்
அந்தமனம் புத்தியுடன் ஆங்காரம் — சிந்தை இவை
பற்றியது நிச்சயித்துப் பல்கால் எழுந்திருந்து அங்கு
உற்றது சிந் திக்கும் உணர்.

---

குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய உரையில் இத்தகைய குற்றங்கள் நிகழாதவாறு போற்றுதல் தமிழகத்தின் கடனாகும். பழைய நூல்கள் எல்லாவற்றிற்கும் இப்போற்றுதல் இன்றேல் தமிழின் பெருமை குறையும். முன் வெளியிட்டவற்றுள்ளும் தருமையாதீனத்து உரைவளத்திலும் இத்திருத்தம் செய்யாதது ஏன்? தெரியாமலா? 'ஐயும் கண்ணும் அல்லாப் பொருள்வயின் மெய்யுருபு தொகாஅ இறுதியான' என்ற தொல்காப்பியச் சூத்திரம் பரிமேலழகர்க்கும் பின்வந்த புலவர்க்கும் தெரியாதா? 'புலம்' என்றது செய்யுளீற்றதே அன்றித் தொடரீற்றதன்று. தொடரீற்றின்கண், ஐயுருபும் கண்ணுருபும் தொகா என்றால், செய்யுளீற்றில்குவ்வுருபு தொகாது என்று பொருள் படுமோ? இடைப்பிற வரலாக, 'இடும்' என்றதுபற்றி எடுத்த இதனை இவ்வளவின் நிறுத்துதும்.

 834

குறிப்பு:- அந்தர் - உள். கரணம் - கருவி. அந்தக்கரணம்- உட்கருவி. அடைவே - முறையே. அந்த - பண்டறிசுட்டு. மனம், புத்தி, ஆங்காரம், சித்தம் நான்கும் உட்கருவிகளாம். மனம் பற்றியதைப் புத்தி நிச்சயிக்கும். புத்தி நிச்சயித்ததை நோக்கி ஆங்காரம் எழுந்திருக்கும். அதன் பின், அங்கு உற்றதைச்சித்தம் சிந்தித்தறியும். அகங்காரம் தெளியாத நிலைக் கண்ணது. சித்தம் தெளிவுறும் நிலைக்கண்ணது. முதன் மூன்று நிலையும் பிழைபடின் சித்தத் தெளிவும் பிழைபடும். இடையிற் பிழைபடினும் அவ்வாறு ஆகும்.

இதுவரை (5 முதல் 18 முடிய உள்ள திருவெண்பாக் களால்) ஆன்ம தத்துவம் இருபத்துநான்கும் உணர்த்தப் பட்டன.

பின்னர் வித்தியாதத்துவங்கள் விளம்பப்படும்.

கஅ ஓதியிடும் நாலாறும் உற்று ஆன்ம தத்துவம் என்று
ஆதி அருள்நூல் அறையும்காண் — தீது அறவே
வித்தியா தத்துவங்கள் தம்மை விளம்பக் கேள்
உத்தமனே நன்று உனக்கு.

குறிப்பு:- (5 முதல் 18 முடிய திருவெண்பாக்களால்) ஓதியிடும் இருபத்துநான்கு தத்துவங்களும் ஆன்ம தத்துவம் என்று சிவாகமம் சொல்லும். இவை **புற அந்தக்கரணங்கள்.** இனி **அக அந்தக்கரணங்கள்** ஆகிய **கலாதி** அறிவிக்கப்படும். அந்தக்கரணங்கள் மனாதி கலாதி என்று இருவகைப்படும். அவை அகத்தனவே ஆயினும், கலாதியை நோக்கி மனாதி புறத்தன ஆகும். ஆதலின், அம்மனாதியைப் புறவந்தக் கரணங்கள் என்பது சாத்திர மரபு. (சிவஞானபாடியம். சூ. 4. அதி. 1. பார்க்க.)

835



# சேக்கிழார் கண்ட இசைத்தமிழ் (4)

சங்கீதம், குடந்தை, திரு. ப. சுந்தரேசனார் அவர்கள்

(முற்றொடர்ச்சி மலர் 14 இதழ் 10)

நிறை பாணியின் இசை கோள்புணர் – இங்குப் பாடலை இசைப் படுத்துவதற்குமுன் பாணியை (தாளத்தினை) கைக் கொள்ளும் முறைபற்றி சிலசொற்கள், நம் தமிழ்நாட்டில் இசைத்துறை பலவகையாக அதாவது வங்கியப்பாடல், யாழ்ப் பாடல், கண்டப்பாடல் எனப் பழங்காலந்தொட்டு வழங்கி வரப்பட்டுள்ளது. இவை ஒவ்வொரு துறையிலும் ஒரே எண்க ளுள்ள தாளம் ஒன்றினைப்போடும் வகைப் பலப்பலவாம். கைகள் இரண்டையும் ஒன்றோடொன்று அடித்துப் போடும் முறைக்கும், தாளக் கருவிகளைக்கையில் வைத்துக்கொண்டு போடப்படும் முறைக்கும் தாளம் (பாணி) ஒன்றாக இருப் பினும் வேறுபாடு உண்டு. இவையாவும் அந்தந்தத் துறை யில் தொழில் செய்வோருக்கே நன்கு விளங்கும்.

நாம் எடுத்துக்கொண்ட ஆறு மாத்திரைகளை இங்கு இரு கூறு படுத்தி, அதாவது மூன்று மூன்றாகக்கொண்டு பொதுப்படப் போடுவதும் வழக்கில் உளது. தற்காலம், இவ்வாறு பிரிவு படுத்திய மூன்று மாத்திரைகளை முதல் மாத் திரை தொடங்க ஒரு ஒற்றும் (அதாவது தாளத்தட்டு) இரண் டாம் மாத்திரை தொடக்கத்தில் ஒரு ஒற்றும், ஆக இரண் டொற்றும், எஞ்சியுள்ள மூன்றும் மாத்திரையை இரு கூறு படுத்தி அரை மாத்திரை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு ஒற் றாகப் போடுவதும் வழக்கில் இருந்து வருகின்றது.

இம்முறை சிறிய தாளக் கருவியினை கையில் வைத்துக் கொண்டு போடப்பட்டு வந்ததால் ஏற்பட்ட முறையாகும். பண்டைக் காலத்தில் பெரிய தாளக் கருவியை (குழித்தாளம்) வைத்துக்கொண்டு இருந்ததால் அக்காலம் தாளத்தினை ஒரு தட்டு தட்டிய பிறகு அதன் மாத்திரை அளவுகளை உள்ளத்தால் உணர்ந்து நிறுத்திப் பிறகே மறுதட்டு தட்டப்படும் என்பதனை நன்கு உணரவேண்டும்.

836

இம்முறைகள் நமது ஆதீன மடாலயங்களில் வழிபாட்டுக் காலத்திலும் மகாசந்நிதானம் அவர்கள் பட்டினப்பிரவேசம் வரும் பொழுதும் ஓதுவாமூர்த்திகளால் கைக்கொள்ளப் பட்டு வந்ததை யாவரும் அறிவார்கள். மேலும் இக்காலம் வைணவக் கோயில்களில் (விழாக் காலங்களில்) சாத்தானர் என்ற வகுப்பினரால் ஏதோ ஒரு சடங்காக தாளம் கொட்டி சில நிகழ்ச்சிகள் புரியப்படுகின்றன. இது சிறப்பாக இராப்பத்து, பகல்பத்து என்னும் நாட்களில் நடைபெறுகிறது. இவையெல்லாம் நாளடைவில் பயிற்சிக்குறைவினுலும் ஏதோ வெற்றுச்சடங்குபோல் கருதப்படுவதாலும் மிக அருகி விட்டன போலும்.

மேலும் நம் தேவாரத் திருமுறைகள் யாவும் இறைவன் முன் விண்ணப்பம் செய்யப்பெற்றன என்று கூறப்படுவதால் பண்டைய பிடாரர்கள் எனப்படுவோர் பெரியதொரு கஞ்சக் கருவியினே (தாளத்தை) கையில் வைத்துக்கொண்டு மாத் திரை கால அளவுகளே உள்ளிட்டு முறையாக உள்ளத்தால் உகந்து நிறுத்தித் தட்டுவதே வழக்கமாக இருந்துவந்து அதன் அளவிலேயே திருப்பதிகங்களே விண்ணப்பம்செய்து வந்தனர் என ஊகித்துணரக் கிடக்கின்றது.

பழைய முறையில், தாளம்போடும் வகைகளும் அதன் இடை நிகழுகின்ற தூக்கு வகைகளும் நன்ருகக் (காலவிரிவும்) செம்மையாக அமையப் பெற்றிருந்ததால் அதன் இசை யமைப்பும் மிகச்செவ்வையாகவும் விரிவாகவும் அமைய வேண்டுமன்ருே! அன்றியும் பலர் ஒன்றுபட்ட நிலேயில் கூட்டமாக நின்று ஒத்த முறையில் விண்ணப்பம் செய்தனர் என்ருல் அம்முறையிலும் ஒரு தனிச்சிறப்பு நம் தேவாரத் திருமுறைகளுக்கு இருந்துதானே ஆகவேண்டும்! இனி பாடலின் தூய முழு இசையுருவினேக் காண்போமாக

மேலும், இந்தத் தாளம் இரண்டு ஒற்றுக்களும் ஒரு வீச்சும் கொண்ட முறையில் போடப்படுவதாலும் ஒவ்வொரு மாத் திரையும் நன்ருன்கு எழுத்துக்களே உள்ளிட்டு முறையாகக் கொண்டுள்ளமையாலும் இஃது ஈரொத்துவாரம் நான்கன் பாணி எனப்படும்.

பண் – இந்தளம் — தாளம் ஈரொத்து வாரம் நான்கன்பாணி

## பித்தா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாத்திரை | = | த ன த ன | த ன த ன | த ன த ன | \| |
| இசை | = | . . . . | மா கா | மா . . | \| |
| பாடல் | = | . . . . | பி த் | தா . . | \| |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா. | = | த ன த ன | த ன த ன | த ன த ன | \|\| |
| இ. | = | மா . . | கா . . | சா . . | \|\| |
| பா. | = | . . . | . . . | . . . | \|\| |

## பிறைசூட

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா. | = | த ன த ன | த ன த ன | த ன த ன | \| |
| இ. | = | . . . . | சா சா | சா . . | \| |
| பா. | = | . . . . | பி . | றை . . | \| |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா. | = | த ன த ன | த ன த ன | த ன த ன | \|\| |
| இ. | = | மா . . . | கா . . | மா . . | \|\| |
| பா. | = | சூ . . . | . . . . | ட . . | \|\| |

## பெருமானே

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா. | = | த ன த ன | த ன த ன | த ன த ன | \| |
| இ. | = | . . . . | மா தா | நீ . . . | \| |
| பா. | = | . . . . | பெ ரு | மா . . | \| |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா. | = | த ன த ன | த ன த ன | த ன த ன | \|\| |
| இ. | = | . . . . | நீ ச்ரி | தா . . | \|\| |
| பா. | = | . . . . | னே . . | . . . | \|\| |

## அருளாளா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா. | = | த ன த ன | த ன த ன | த ன த ன | \| |
| இ. | = | . . . . . | ச்ா நீ | தா . . | \| |
| பா. | = | . . . . . | அ ரு | ளா . | \| |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா. | = | த ன த ன | த ன த ன | த ன த ன | \|\| |
| இ. | = | நீ . . . | ச்ா . . | . . . . | \|\| |
| பா. | = | . . . . . | ளா . . | . . . . | \|\| |

838



## எத்தான்

| | | | | |
|---|---|---|---|---|
| மா. | = | தனதன | தனதன | தனதன |
| இ. | = | . . . . . | ச்ா ச்ா | ம்ா . . |
| பா. | = | . . . . . | எ த் | தா . . |

| | | | | |
|---|---|---|---|---|
| மா. | = | தனதன | தனதன | தனதன |
| இ. | = | ம்ா . . | க்ா . . | ச்ா . . |
| பா. | = | . . . | . . . | ன் . . |

## மறவாதே

| | | | | |
|---|---|---|---|---|
| மா. | = | தனதன | தனதன | தனதன |
| இ. | = | . . . . . | ச்ா நீ | தா . . |
| பா. | = | . . . . . | ம ற | வா . . |

| | | | | |
|---|---|---|---|---|
| மா. | = | தனதன | தனதன | தனதன |
| இ. | = | தா நீ . | ச்ா . . | . . . . . |
| பா. | = | . . | தே . . | . . . . . |

## நினைக்கின்றேன்

| | | | | |
|---|---|---|---|---|
| மா. | = | தனதன | தனதன | தனதன |
| இ. | = | . . . . . | ம்ா க்ா | . . ச்ா |
| பா. | = | . . . . . | நி னைக் | . . கின் |

| | | | | |
|---|---|---|---|---|
| மா. | = | தனதன | தனதன | தனதன |
| இ. | = | . . . . . | நீ தா | மா . . |
| பா. | = | . . . . . | றே . | ன் . . |

## மனத்துன்னை

| | | | | |
|---|---|---|---|---|
| மா. | = | தனதன | தனதன | தனதன |
| இ. | = | . . . . . | மா கா | . . சா |
| பா. | = | . . . . . | ம னத் | . . துன் |

| | | | | |
|---|---|---|---|---|
| மா. | = | தனதன | தனதன | தனதன |
| இ. | = | . . . . . | கா சா | . . . . . |
| பா. | = | . . . . . | னை . | . . . . . |

குறிப்பு: புள்ளியிட்ட இடங்களெல்லாம் அதற்கு முன்னுள்ள இசையின் நீட்சி (கார்வை) யாகும்.

இனி, இதுபோன்று மற்றைய "வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூர் அருட்டுறையுள், அத்தா உனக் காளாயினி அல்லேன் எனலாமே" என்ற அடிகளை செவ்வை யாக முறைதெரிந்து அமைத்துப் பயின்று கொள்க. மேற் கூறிய இசையமைப்பு "நிறைபாணியின் இசைகோள் புணர்" எனும் சொற்களுக்கு விரிவுரையாக அமைக்கப் பெற்றதாகும். அதனை அறிந்து உணர்ந்து கொள்க.

## நீடும் புகழ் வகையால்

மேற்கூறியாங்கு இசையும் இயலும் பருந்தும் நிழலும் போன்று ஒன்றிப் பொருந்திய முறையில் தன்னைத் தடுத்தாட் கொண்ட இறைவனைப் பித்தா எனப் பாடிய பண்பும் அதன் பயனும் (புகழப்படும் வகையால்) நீடியகாலம் அதாவது தென்னாடு உள்ளளவும் மக்கள் உள்ளளவும் தமிழ் உள்ளளவும் புகழும் வகையால் புகழப்பெற்றுய்யுமாறு.

## இறையான் மகிழ்

யாவராலும் காண்டற்கரிய நம் பெருமான் மிக எளிய ராய் நம்பியாரூரர் முன்தோன்றி நம்மை சொற்கள் நிறைந்த தமிழாற் பாடுக எனக் கூறினாரன்றோ! அத்தகைய இறைவன் என்றென்றும் மகிழுமாறு,

## இசைபாடினன் எல்லாம் நிகரில்லான்

இறைவனை நேரேகண்டு இம்மண்மீது அவனருளால் விளை யாடிய நம் நம்பியாரூரர் எல்லாவற்றிற்கும் நிகரிலாத் தன்மைய ராய் அவனருளே அருளாகக்கொண்டு பழையஐந்திசைப் பண் களில் நடுநிலையாகவமைந்த இந்தளப்பண்ணில் **பித்தா பிறை சூடி** என்ற சொல்லார் தமிழிசையைப் பாடியருளினார் என்ப தாம். ஐயாற்றரசின் திருவருட்டுணையினாலே ஏதோ எமது சிற் றறிவுக்கு எட்டிய அளவில் அவனருளிய வழிநின்று நம் தெய் வச் சேக்கிழார் பெருமான் உரைத் தருளிய **முறையால் வரு** எனும் செய்யுட்பாகத்திற்கு இசைத்தமிழ்பற்றி பொருள் எழுதி னோம். இது பெருமையாயினும் சிறுமையாயினும் யாவும் ஐயாறன் திருவடிக்கே உரியதாகும். இனி, ஏற்ற பெற்றி மேல்வரும் கட்டுரைகளில் ஆனாயர் வரலாற்றுள்வரும் இசைப் பகுதியை அவனருளால் எழுதிவருவேம். அன்பர்கள் அறிந்து போற்றிப் பயன் பெறுவார்களாக. சீரார் திருவையாறு போற்றி.

8-40.

# அரனும் ஐந்தொழிலும்

திரு. ஆர். கே. பூரணனந்தேசுவரக் குருக்கள் அவர்கள்
வில்லூன்றி.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஐந்தொழிலும் இறைவனுக்கு ஓர் திருவிளையாடலாகும்.

" ஆர்த்த பிறவித்துயர்கெட நாமார்த்தாடுந்
தீர்த்தனற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ்வானுங் குவலயமுமெல்லோமுங்
காத்தும்படைத்துங் கரந்தும் விளையாடி."

" ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில் " (திருவெம்பாவை)

என்பவைகளாலும்,

" ஏற்றவிவை யரனருளின்றிரு விளையாட்டாக இயம்புவர்க
ளணுக்களிடர்க்கடனின்றுமெடுத்தே
ஊற்றமிக அருள்புரிதலேதுவாக உரைசெய்வரொடுக்கம்
இளைப்பொழித்தல் மற்றைத்
தோற்றமலபாகம்வரக்காதல் போகந்துய்ப்பித்தல்
திரோதாயிநிறுத்தலாகும்
போற்றலரும் அருளருளேயன்றி மற்றுப்புகன்றவையும்
அருளொழியப்புகலொணுதே" (சிவப்பிரகாசம்)

என்பதாலுமறியலாகும்,

இவ்வாறு பஞ்சகிருத்தியங்களைச் செய்தருளுகின்ற பரம பதியே உயிர்கட்காதாரமாகவுமிருப்பவர். இதனை

" ஆக்கியெவையும் அளித்தா சுடனடங்கப்
போக்குமவன் போகாப்புகல் " (திருவருட்பயன்)

(உயிர்களெல்லாவற்றையும் தோற்றுவித்துக் காத்து மறைத்து சர்வசங்காரத்தில்) ஆணவமலத்தோடு மற்றை மலங்களையும் ஒருங்கே போக்கி அருளலைச் செய்யுங் கடவுள் எக்காலத்தும் உயிர்களுக்கு நீங்காத ஆதாரமாயுள்ளவர் என்று உமாபதி சிவமும், "இனையணுகிய அக்கடவுள் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட உலகங்களெல்லாவற்றினையும் படைத்து நிறுத்தி இச்சாஞானக்கிரியைகளுணராத வண்ணம் ஆன்மாக்களெல்லாம் மூலமலத்துடனே அடங்கி இருக்கும்படி அழித்தலைச் செய்யுந்தான் எஞ்ஞான்றும் நீங்காத

8641



தோர் புகலிடமாயிருக்கும்'' என்று உரையாசிரியர் நிரம்ப அழகிய தேசிகரும் கூறியதாலறியலாகும்.

> "ஒன்றலா வொன்று ளுளதாகி நின்றவா
> றென்றலா வொன்றிலவையீருத - லொன்றலா
> ஈறே முதலதனி னீறலா வொன்றுபல
> வாறே தொழும்பாகுமங்கு'' (சிவஞானபோத உரைவெண்பா)

சேதனப் பிரபஞ்சத்தொகுதி உருவும் அருவும் என்னும் அவ்விருகூற்றுப் பிரபஞ்சத்துள் ஒன்றல்லாத ஒப்பற்ற பரம் பொருளாலே சிருட்டிப்பட்டுத் திதிப்பட்டவாறே அந்தப்பரம் பொருளின் கண்ணே சங்காரப்படுதலால் அச்சங்காரக் கடவுளொருவனே உலகிற்கு முதற்கடவுள்.

அப்பரம் பொருள்போல் அழிவின்றி நித்தமாகிய சேதனப் பிரபஞ்சம்வீடு பேற்றின் கண்ணும் பலவாற்றுனும் பரம் பொருளுக்கடிமையாம். (மாபாடியம்.) என்றவாறே அவ் விறைவனே முழுமுதற் கடவுளாகும். இவ்வைந்தொழிலும் தில்லைக் கூத்தனெம்பிரானுடைய திருமேனியிலே விளங்கக் காணலாம். இதனை,

> "தோற்றந்துடியதனிற்றேயுந் திதியமைப்பில்
> சாற்றியிடுமங்கியிலேசங்காரம் – ஊற்றமாய்
> ஊன்றுமலர்ப்பதத்திலுற்ற திரோதமுத்தி
> நான்ற மலர்ப்பாதத்தே நாடு.'' (உண்மை விளக்கம்)

(உடுக்கையேந்திய திருக்கரத்தில் படைத்தல், அமைத்த (அபய) கரத்தில் காத்தல், அக்கினி ஏந்திய கரத்தில் அழித்தல் உறுதியாயூன்றிய திருவடியில் மறைத்தல் தூக்கிய திருவடியில் அருளல்-ஆக விளங்குதலைக் காணலாகும் )என்பதாலறியலாம்.

> "குன்றுத, பல்லுயிர் வெவ்வேறு படைத்துமவைகாத்தும்
> எல்லை இளைப்பொழிய இட்டுலைவத்தும் - தொல்லையுறு
> மந்தமடி நடுவென்றெண்ண அளவிறந்து
> வந்த பெரிய வழிபோற்றி.'' (போற்றிப்பஃறொடை)

குறையாத பல ஆன்மாக்களை (க்கன்மத்துக்கீடான தேகங்களிற்) படைத்தும் அவைகளைக் காத்தும், சங்கார காலத்தில் இளைப்பொழிய ஒடுக்கியும் அளவிறந்து ஆதிநடு அந்த மற்று வருகிற பெரிய கிருத்திய வழியானது எம்மைக் காக்க, இவ்வாறே சிவாநுபூதிமான்களாய பெரியார் அருளி யவை எல்லாம் ஆழ்ந்த கருத்து நிறைந்தனவாய், நுண்மா ணுழைபுலம்படைத்து நுணுகி ஆராய்வார்க்கு விரிந்த பல உண்மைகளை விளக்குவனவாய்அமைந்திருப்பது காணலாகும்.

842.

இலக்கியம்

# கண்ணகி

வி. சா. கு.

இன்பம் துன்பத்திற்குப்பின் வந்தால் அதற்குச் சிறப்பு மிகுதி. இல்வாழ்க்கையில் இன்பம் கணவனேடு கூடியிருந்து களிக்கும் மகளிர்க்கும் துன்பம் கணவனுல் வெறுக்கப்பட்ட பெண்டிர்க்கும் அமைதல் பெரும்பான்மை. கணவனும் மனேவியும் ஒத்து வாழும் வீடுகளில் இத்துன்பியற் போராட்டங்கள் இருத்தற்கு இடமில்லே. ஏழையின் வீட்டில் இன்று நடைபெறும் சண்டை மறுநாள் சமாதானத்தை அடைந்துவிடும். அவளேயின்றி அவனே அவனேயின்றி அவளோ வாழமுடியாது. ஆனுல் செல்வர் வீட்டில் ஏற்படும் இச்சிறுதகராறு விரைவில் முற்றுப்பெறுதல் இல்லே.

கடையெழு வள்ளல்களில் சிறந்தவன் பேகன். புலவர்களின் போற்றுதலுக்குரியவன் இவன். மயிலுக்குப் போர்வையளித்த இவன் கொடைச்சிறப்பைப் போற்றிப் புகழாதார் இல்லே. பெரிய மலேநாடு இவன் ஆளுகைக்குரியது. இவனது ஊர் நல்லூர். மயிலுக்குப் போர்வை யளித்த மடக்கொடை இவனது வள்ளல் தன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

'கார்மேகத்தைக்கண்டு களித்துத் தன் கலாபத்தை விரித்தாடும் களி மயில் இவன் ஆட்டத்தைக் கவர்ந்தது. ஆனுல் அதற்குப் பரிசளிக்கவில்லே. அவன் மயிலின் குரல்கேட்டு மயங்கி யளித்த பரிசிலும் அல்ல அது.

சிதறிவிழுந்த சிறுமழைத்துளிகளேப் பார்த்து மயில் கூவிக் களித்துக் கூத்தாடுகிறது. இதைக்கண்ட கோமகன் குளிரால் நடுங்குகிறது இம்மயில் என எண்ணினுன். கூவிய கூரலேக் 'கூக்குரல்' என்றெண்ணியது அவன் மனம். தான் போர்த்தியிருந்த பட்டாடையை மயிலுக்குப் போர்த்தி மனமகிழ்ந்தான். தன்நிலேயில் பிறஉயிரைப்பேணும் பெருங்குணம் இவன்பால் இருந்தது. பேகனின் உள்ளப்பண்பை உணர்தற்குச் சிறந்த எடுத்துக்காட்டு இது. இவன் மனேவியின் பெயர் கண்ணகி.

843



கண்ணகியெனப் பெயர் படைத்த காரிகையர் பலர் தமிழகத்தில் வாழ்ந்தனர். அவர்களுள் தமிழகத்தின் நினைவில் இருப்பவள் ஒருத்தி. மற்றொருத்தியை இதோ உங்கள் முன் நிறுத்தி நினைவுறுத்துகின்றனர் புறநானூற்றுப்புலவர் மணிகள். கண்ணால் சிரித்துஅந்த அழகிய பெயரைத் தனக்குரியதாகப்பெற்ற தமிழ்த்தையல் சிலப்பதிகாரக் கண்ணகி. கண்ணால் சிரிக்கும் இவ்வழகைக் கலித்தொகை "கண்ணினும் முகத்தினும் நகுபவள்" என்றுகூறும். உணரார் வடமொழிப்பெயர் என்று உரைப்பர். அந்தப் பெயர்பெற்ற கன்னியருள் பேகனின் பெருங்கோப்பெண்டும் ஒருத்தி. இவ்வெழில் நங்கை இலக்கிய அறிவு படைத்தவள். இவள் பாடிய பாடல் ஒன்று இலக்கணமேற்கோளாக இன்றும் பயன்பட்டு வருகிறது. கண்ணகியோடு கூடியிருந்து பேகன் வாழ்ந்தவாழ்வு சில நாட்கள் இடையறவுபடுகிறது. கொடையில் சிறந்த இக்கோமகன் குடும்ப வாழ்வில் தவறிழைக்கிறான். பேகன் பேரரசனாக இருந்தாலும் அவனது வாழ்விலும் தாழ்விலும், உடலிலும் உயிரிலும் அக்கரை உள்ளவள் அவள்தானே! அவளது இன்பவாழ்வுக்கு சிறுபுள்ளி ஒன்று வைத்துத் துன்பத் தொடர் ஒன்றைத் துவக்கி விடுகிறான் அம்மன்னன்.

வளமலைச்சாரலில் கானமயிலுக்குக் கலிங்கம் வழங்கிய இச்சிறப்பைச் சிறுபாண் சிறக்கக் கூறுகிறது. புறநானூறும் புறப்பொருள் வெண்பாமாலையும் புகழ்ந்து கூறுகின்றன.

" வானம் வாய்த்த வளமலைக் கவான்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்."

— சிறுபாண் 84-86

" உடா போரா வாகுதலறிந்தும்
படாம் மஞ்ஞைக்கு ஈத்த எங்கோ
கடாயானைக் கலிமான் பேக."

— புறம் 141-10-13

" மடத்தகை மாமயில் பனிக்குமென்றருளிப்
படாமீத்த கெடா நல்லிசைக்
கடாயானைக் கலிமான் பேக."

— புறம் 145-1-3

844

" முல்லைக்குத்தேரும் மயிலுக்குப் போர்வையும்
எல்லை நீர்ஞாலத்து இசை விளங்கத் – தொல்லை
இரவாமல் ஈந்த இறைவர்." — புறப் 134

இவ்வாறு இலக்கிய உலகில் இவன் புகழ்பரந்து விரிந்தது. புலவர்கள் மனத்தில் இவன் இடம் பெற்ருன். மக்கள் இவனது மடக்கொடையை மனம் உவந்து பாராட்டினர்.

'அறிவு நலம்பெற்ற ஆரணங்கு, துன்புற்ற பொழுதெல்லாம் துயர்துடைத்து அயர்வு போக்குபவள். சோர்வுறும் பொழுது தன் சுந்தரமுகத்தில் புன்னகைகாட்டி புருவங்கோட்டி குயிலினும் இனிதாய்ப்பேசிக் கொஞ்சிக் கெஞ்சி மனத்துயரை தீர்க்கும் மாமருந்து மனைவி' அத்தகுதியில் அரசியாய் இருந்து அந்தப்புர வாழ்வு நடத்தியவள் கண்ணகி. அவளை விடுத்து வேருெரு பெண்ணை விரும்பினுன் பேகன். புதுமைக்காதல் தன் உரிமை மனைவியை உதறித்தள்ளும் போக்கிற்குக் கொண்டுவந்து விட்டது. கண்ணகி பூம்புகார்க் கண்ணகியாய்ப் பொலிவழிந்திருந்தாள்.

தான் இருந்து வாழும் அந்தப்புரத்தில் வேருெரு பெண்... ... ..

காணச்சகியாத காட்சியாக இருந்தது கண்ணகிக்கு. அந்தப்புரத்திலும் மாற்றுமனைவியர் நடமாட ஆரம்பித்தனர். கண்ணகி அதைவிட்டுப் புறப்படும்படியான நிலைமை ஏற்பட்டது.

சிற்றூர் ஒன்றில் தானே சென்று தங்கினுள். மூடிவைத்த உலையாய் அவளது உள்ளம் வேதனைக் கொதிப்புக்கொதித்தது. கணவன் காவலனுக இருந்ததால் கண்டித்தற்கு யாரும் முன் வரவில்லை. நீதிமன்றமேறி தன்குறையைக் கூறுதலும் கற்பின் பெருமைக்கு இழுக்கெனப்பட்டது. பொங்கி வரும் வேதனையைப் பொறுத்தாள். வேதனை, கண்ணீர்த் துளிகளாக வெளிவந்தன. அழுதாள், அதைமட்டும் அவளால் அடக்க முடியவில்லை. அது அவள் வசம் நிற்க மறுத்துவிட்டது. அடைத்துவைக்கும் தாழ் அதற்கு இல்லையல்லவா? ஆனுல் அதையும் அவள் பிறரறியாமல்தான் செய்துகொண்டிருந்தாள்

காந்தள் மொட்டனைய அவளது கை விரல்கள் கண்ணீரை எடுத்துத் தெறித்தவண்ணமிருந்தன. கணவனது பெருமை யைப்பற்றிப் பிறர் பேசும் பொழுதெல்லாம் கண்ணீர் பீறிட்டுப் பெருக்கெடுத்து ஓடிவரும். பெருங்கொடை வள்ளலாகிய பேகனைப் பிறபெண்டிர் நலம் பேதையராக்கிற்று. அருகில் சென்று இடித்துக்கூறும் ஆற்றல் மந்திரிகளுக்கோ மற்ற வர்க்கோ இல்லை.

புலவர்களுக்கு அக்கால அரசியலில் நன்மதிப்பிருந்தது. புலவர்கள் அரசனுக்கு அரசியல் கூறியும் அறவுரை கூறியும் தோழமை முறையில் பழகினர். புலவர்களிடம் வைத்திருந்த பெருமதிப்பல்லவா பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனை வஞ்சினங்கூறும்பொழுதும 'இற்றைப் பொழுதில் பகைவர்களை முறியடித்து வாகை சூடேனுனல் என் நாட்டைப் புலவர்கள் பாடவேண்டா' என்று சொல்லும்படிச் செய்தது.

அரசர் இருவர் தம்முள்கொண்ட பகைமையை புலவர் சென்று விலக்கி வந்தனர். சேரன் மலையமான்மீது இருந்த சினங்காரணமாக அவனுடைய சிறுவர்களை யானையின் கால் களிலிட்டு இடறச்செய்தான் கிள்ளிவளவன் என்ற சோழன். கோவூர்க்கிழார் 'கொடுமை கொடுமை' என்று கூறி அரசனுக்கு நல்லறிவுகொளுத்தி விடுதலை வாங்கித்தந்தார்.

அரசியலில் கோணல் நேரும்பொழுதெல்லாம் அஞ்சாமல் அறவுரை கூறும் ஆண்மை புலவர்களுக்கே இருந்துவந்தது. அரசியலில் மட்டுமல்ல அரசனுடைய குடும்ப வாழ்விலும் மிக நெருங்கிய ஈடுபாடு இருந்தது கபிலர்போன்ற புலவர்களுக்கு.

முல்லைக்குத் தேரீந்த வள்ளல் பாரியின் உயிர்த்தோழர் கபிலர். பகையரசர்களின் மறைமுகமான தாக்குதலுக்கு இரையாகி இறந்த பாரியின் மகளிரைக் கபிலரே பிறர்க்கு மண முடித்துக் காப்பாற்றினுர் என்பது வரலாறு. இவ்வாறு குடும்ப வாழ்விலும், அரசியல் வாழ்விலும் புலவர்க்கு உரிமைகள் இருந்தன.

(அடுத்த இதழில் முடியும்.)

8.46.

# விருத்த வகை

பன்மொழிப்புலவர்
வித்துவான், திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்,
சென்னைப் பல்கலைக் கழகத்து ஓய்வுபெற்ற ஆராய்ச்சிப் பேராசிரியர்.

இனி, தமிழில் உள்ள விருத்தம் முதலிய செய்யுட்களை நோக்குவோம்; இருசீரடி விருத்தம் முதல் எண்சீரடி விருத்தம் வரை உள்ள செய்யுட்கள் காப்பியங்களில் பயின்று வந்துள்ளன. அவற்றுள்ளும் நாற்சீரடி விருத்தமும் அறுசீரடி விருத்தமுமே பெருவரவின, இருசீரடி விருத்தங்கள் சிறுவரவினவே.

இவ்விருத்தங்களை அசைநோக்கி உறழ்ந்தால் ஒவ்வொரு விருத்தமும் பல ஆகும். அவை வருமாறு:

இருசீரடிச் செய்யுளில் இரண்டு சீரும் ஈரசைச்சீராய் இருப்பின் 16 செய்யுட்கள் ஆகும். அவ்விரண்டு சீரும் மூவசைச் சீராய் இருப்பின் 64 செய்யுட்கள் அமையும்.

முச்சீரடிச் செய்யுளில் மூன்று சீரும் ஈரசைச்சீராய் இருப்பின் 64 செய்யுட்கள் ஆகும். அம்மூன்று சீரும் மூவசைச் சீர்களாயிருப்பின் 512 விருத்தம் அமையும்.

நாற்சீரடி விருத்தத்தில் நான்கு சீரும் ஈரசைச்சீராய் இருப்பின் 256 செய்யுட்கள் ஆகும். அந்நான்கு சீரும் மூவசைச்சீராய் இருப்பின் 4096 செய்யுட்கள் அமையும்.

ஐஞ்சீரடிச் செய்யுளில் ஐந்து சீரும் ஈரசைச்சீராய் இருப்பின் 1024 செய்யுட்கள் ஆகும். அவ்வைந்து சீரும் மூவசைச் சீராயிருப்பின் 32768 செய்யுட்கள் அமையும்.

அறுசீரடிச் செய்யுட்களில் ஆறு சீரும் ஈரசைச்சீராய் இருப்பின் 4096 செய்யுட்கள் வரும். அவ்வாறு சீரும் மூவசைச் சீர்களாயிருப்பின் 262144 செய்யுட்கள் ஆகும்.

எழுசீரடிச் செய்யுளில் ஏழுசீரும் ஈரசைச்சீராய் இருப்பின் 16384 செய்யுட்கள் வரும். அவ்வேழு சீரும் மூவசைச் சீராயிருப்பின் 2097152 செய்யுட்கள் ஆகும்.

எண்சீரடிச் செய்யுளில் எட்டுச்சீரும் ஈரசைச்சீராய் இருப்பின் 65536 செய்யுட்கள் ஆகும். அவ்வெட்டுச்சீரும் மூவசைச் சீராயிருப்பின் 16777216 செய்யுட்கள் அமையும். இவ்வாறே ஒன்பது சீரடிச் செய்யுள் முதலியவற்றிலும் காண்க. இனி, ஒவ்வொரு வகையிலும் ஈரசைச் சீரும் மூவசைச்சீரும் விரவி வரும் அடிகளை நோக்கின், செய்யுட்கள் மிகப்பலகும். அவைநிற்க இனி, இருசீரடிச் செய்யுளில் இரண்டு சீரும் ஈரசைச் சீராய் இருப்பின் வரும் 16 செய்யுட்களை நோக்குவோம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | நான்கு அடியும்— | நேர்நேர் | நேர்நேர் |
| 2. | ,, | நேர்நேர் | நிரைநேர் |
| 3. | ,, | நேர்நேர் | நிரைநிரை |
| 4. | ,, | நேர்நேர் | நேர்நிரை |
| 5. | ,, | நிரைநேர் | நேர்நேர் |
| 6. | ,, | நிரைநேர் | நிரைநேர் |
| 7. | ,, | நிரைநேர் | நிரைநிரை |
| 8. | ,, | நிரைநேர் | நேர்நிரை |
| 9. | ,, | நிரைநிரை | நேர்நேர் |
| 10. | ,, | நிரைநிரை | நிரைநேர் |
| 11. | ,, | நிரைநிரை | நிரைநிரை |
| 12. | ,, | நிரைநிரை | நேர்நிரை |
| 13. | ,, | நேர்நிரை | நேர்நேர் |
| 14. | ,, | நேர்நிரை | நிரைநேர் |
| 15. | ,, | நேர்நிரை | நிரைநிரை |
| 16. | ,, | நேர்நிரை | நேர்நிரை |

இனி, இருசீரடிச் செய்யுளில் இரண்டு சீரும் மூவசைச் சீராயிருப்பின் வரும் 64 செய்யுட்களின் வகையை நோக்குவோம்.

மேற்காட்டிய இருசீரடிச் செய்யுளில் ஒவ்வொரு சீரின் ஈற்றிலும் நேரசையைக் கூட்ட வருஞ்செய்யுள் 16. இருசீரடிச்செய்யுளில் ஒவ்வொரு சீரின் ஈற்றிலும் நிரையசையைக் கூட்ட வருஞ்செய்யுள் 16. இருசீரடிச் செய்யுளில் முதற் சீரின் ஈற்றில் நேரசையும், இரண்டாஞ்சீரின் ஈற்றில் நிரையசையும் சேர்க்கவருஞ் செய்யுள் 16. இருசீரடிச் செய்யுளில் முதற்

சீரின் ஈற்றில் நிரையசையும், இரண்டாஞ்சீரின் ஈற்றில் நேரசையும் சேர்க்க வருஞ்செய்யுள் 16. ஆக இருசீரடிச் செய்யுளில் மூவசைச்சீரில் வருஞ்செய்யுள் 64 ஆகும்.

இனி, முச்சீரடிச் செய்யுளில் ஈரசைச்சீர் விருத்தம் 64 வருமாறு கான்போம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | நேர்நேர் | நேர்நேர் | நேர்நேர் |
| 2. | நேர்நேர் | நேர்நேர் | நிரைநேர் |
| 3. | நேர்நேர் | நேர்நேர் | நிரைநிரை |
| 4. | நேர்நேர் | நேர்நேர் | நேர்நிரை |
| 5. | நேர்நேர் | நிரைநேர் | நேர்நேர் |
| 6. | நேர்நேர் | நிரைநேர் | நிரைநேர் |
| 7. | நேர்நேர் | நிரைநேர் | நிரைநிரை |
| 8. | நேர்நேர் | நிரைநேர் | நேர்நிரை |
| 9. | நேர்நேர் | நிரைநிரை | நேர்நேர் |
| 10. | நேர்நேர் | நிரைநிரை | நிரைநேர் |
| 11. | நேர்நேர் | நிரைநிரை | நிரைநிரை |
| 12. | நேர்நேர் | நிரைநிரை | நேர்நிரை |
| 13. | நேர்நேர் | நேர்நிரை | நேர்நேர் |
| 14. | நேர்நேர் | நேர்நிரை | நிரைநேர் |
| 15. | நேர்நேர் | நேர்நிரை | நிரைநிரை |
| 16. | நேர்நேர் | நேர்நிரை | நிரைநிரை |

இவ்வாறே, 'நிரைநேர்' முதற்சீராயும் மற்ற இரண்டு சீரும் மேற்காட்டியனவாயும் வருஞ்செய்யுள் 16. 'நிரைநிரை' முதற்சீராயும் மற்ற இரண்டு சீரும் மேற்காட்டியனவாயும் வருஞ் செய்யுள் 16. 'நேர்நிரை' முதற்சீராயும் மற்ற இரண்டு சீரும் மேற்காட்டியனவாயும் வருஞ்செய்யுள் 16. ஆகச்செய்யுள் 64 வருவனவாகும். முச்சீரடியில் மூவசைச் செய்யுள் 512 ஆகும்.

இனி, நாற்சீரடியில் ஈரசையினவாய் வருஞ்செய்யுள் 256 ஆதலை நோக்குவோம்,

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | நேர்நேர் | நேர்நேர் | நேர்நேர் | நேர்நேர் |
| 2. | ,, | ,, | நேர்நேர் | நிரைநேர் |
| 3. | ,, | ,, | நேர்நேர் | நிரைநிரை |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | நேர்நேர் | நேர்நேர் | நேர்நேர் | நேர்நேர் |
| 5. | ,, | ,, | நிரைநேர் | நேர்நிரை |
| 6. | ,, | ,, | ,, | நிரைநேர் |
| 7. | ,, | ,, | ,, | நிரைநிரை |
| 8. | ,, | ,, | ,, | நேர்நிரை |
| 9. | ,, | ,, | நிரைநிரை | நேர்நேர் |
| 10. | ,, | ,, | ,, | நிரைநேர் |
| 11. | ,, | ,, | ,, | நிரைநிரை |
| 12. | ,, | ,, | ,, | நேர்நிரை |
| 13. | ,, | ,, | நேர்நிரை | நேர்நேர் |
| 14. | ,, | ,, | ,, | நிரைநேர் |
| 15. | ,, | ,, | ,, | நிரைநிரை |
| 16. | ,, | ,, | ,, | நேர்நிரை |

இனி, முதற்சீர் 'நேர்நேர்'ச்சீராயே இருக்க, இரண்டாஞ்சீர் 'நிரைநேர்'ச்சீராயும் 3, 4 ஆஞ்சீர்கள் மேற்காட்டியனவாயும் வருஞ்செய்யுள் 16. முதற்சீர் 'நேர்நேர்'ச்சீராயே இருக்க, இரண்டாஞ்சீர் 'நிரைநிரை'ச்சீராயும் 3, 4 ஆஞ்சீர்கள் மேற்காட்டியனவாயும் வருஞ்செய்யுள் 16. முதற்சீர் 'நேர்நேர்'ச்சீராயே இருக்க, இரண்டாஞ்சீர் 'நேர்நிரை'ச்சீராயும் 3, 4 ஆஞ்சீர்கள் மேற்காட்டியனவாயும் வருஞ்செய்யுள் 16.

ஆக, நேர்நேர்ச் சீரை முதற்சீராகக்கொண்டு வருஞ் செய்யுள் 64. இவ்வாறே, நிரைநேர்ச் சீரை முதற்சீராகக்கொண்டு வருஞ்செய்யுள் 64 நிரைநிரைச் சீரை முதற்சீராகக்கொண்டு வருஞ்செய்யுள் 64. நேர்நிரைச் சீரை முதற்சீராகக்கொண்டு வருஞ்செய்யுள் 64. ஆக, நாற்சீரடியில் ஈரசைச்சீர்ச் செய்யுள் 256 வருதல் காண்க. இவ்வாறே ஐஞ்சீரடி முதலியவற்றிலும் அமைத்துக் கண்டுகொள்க.

இனி, இருசீரடிச் செய்யுளில் ஈரசைச்சீரும் மூவசைச்சீரும் விரவிவருஞ் செய்யுள் எத்தனை என்று நோக்குவோம்.

இருசீரடியில் வரும் ஈரசைச் செய்யுள் பதினாறிலும் முதற்சீரின் ஈற்றில் மட்டும் நேரசை சேர்க்க வருஞ்செய்யுள் 16. முதற்சீரின் ஈற்றில் மட்டும் நிரையசை சேர்க்க வருஞ் செய்யுள் 16. இவ்வாறே இரண்டாஞ்சீரின் ஈற்றில் மட்டும்

நேரசை சேர்க்க வருஞ்செய்யுள் 16. இரண்டாஞ் சீரின் ஈற்றில்மட்டும் நிரையசை சேர்க்க வருஞ்செய்யுள் 16. ஆக இருசீரடிச் செய்யுளில் ஈரசைச் சீரும் மூவசைச் சீரும் விரவி வருஞ்செய்யுள் 64 ஆகும்.

முச்சீரடிச் செய்யுளில் ஈரசைச் சீரும் மூவசைச் சீரும் விரவி வருஞ்செய்யுள் 1152 ஆகும். எவ்வாறென்னில் ஈரசைமுச் சீரடிச் செய்யுள் 64-லும் முதற்சீரில் மட்டும் நேரசை கூட்ட வருஞ்செய்யுள் 64. இரண்டாஞ்சீரில் மட்டும் நேரசை கூட்ட வருஞ்செய்யுள் 64. மூன்றுஞ்சீரில் மட்டும் நேரசை கூட்ட வருஞ்செய்யுள் 64.

ஒன்று இரண்டு இச்சீர்களில் நேரசை கூட்ட வருவன 64. இரண்டு மூன்று இச்சீர்களில் நேரசை கூட்ட வருவன 64. ஒன்று மூன்று இச்சீர்களில் நேரசை கூட்ட வருவன 64. ஆக ஈரசைச் செய்யுளோடு நேரசை கூட்ட வருஞ்செய்யுள் 384. இவ்வாறே நிரையசை கூட்ட வருஞ்செய்யுள் 384.

இனி, முதற்சீரோடு நேரசையும், இரண்டாஞ் சீரோடு நிரையசையும் கூட்ட வருஞ்செய்யுள் 64. இரண்டாஞ் சீரோடு நேரசையும் மூன்றுஞ் சீரோடு நிரையசையும் சேர்க்க வருஞ்செய்யுள் 64. முதற்சீரோடு நேரசையும், மூன்றுஞ் சீரோடு நிரையசையும் சேர்க்க வருஞ்செய்யுள் 64. ஆக வருவன 192-

இனி, நேர்நிரையசைகள் இம்முறை மாறிவரின் 192. இவ்வாறு இரண்டு சீர்கள் மூவசையாய் வருஞ்செய்யுள் 384. ஆக மூவசைச் சீரும் ஈரசைச் சீரும் விரவி வரும் முச்சீரடிச் செய்யுள் 1152. இவ்வாறே நாற்சீரடிச் செய்யுள் முதலியவற்றிலும் கண்டுகொள்க.

857

வடமொழி

# பூலோக விமர்சனம்

## (பதினேழாம் நூற்றாண்டு வேங்கடாத்வரி)

தமிழில் ஆக்கியவர்
பிர்மஸ்ரீ ய. மகாலிங்க சாஸ்திரிகள் அவர்கள் M. A., B. L.,
தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரியின் முன்னாள் முதல்வர்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

பின்பு ஆந்த்ர தேசத்தை நோக்கி விசுவாவசு "நல்ல ஆசார சீலர்களான பிராமணர்கள் இங்கு வசிக்கிறார்கள். இந்த தேசம் ஸமுத்ரம்போல் விஸ்தாரமுடையது" என்று சொல்லிப் பெருமிதமடைந்தான். அதைப்பொறுக்கமாட்டாமல் கிருசானு பின்வருமாறு பேசிகிறான். கட்டுப்பாடுகளை மீறிக் கெட்டுப் போன இந்த தேசத்தையா புகழ்கின்றாய்?

இங்கு கிராமத்திற்கு கிராமம் பிராம்மணர்கள் தங்கள் வேதாத்யயனத்தை விட்டுவிட்டு இதர ஜாதி பிரப்புக்களிடம் கணக்கர்களாகவிருந்து சேவை புரிந்து வருகிறார்கள். யாராவது ஒருவன் இந்த தேசத்தில் வேதாத்யயனம் செய்தவன் இருப்பானேயானால் அவன் கீழ்ப்பட்ட தொழில் செய்துதான் ஜீவிக்க வேண்டியிருக்கிறது.

விசுவாவசு:- நண்ப! நீ சொல்வது உண்மையாயிருக்கலாம். இங்கு அத்யயனம் செய்கிறவர்களோ யக்ஞம் செய்கிறவர்களே அரிது என்று வைத்துக்கொண்டாலும் இந்த தேசத்து ஜனங்கள் எல்லோரும் தைவபக்தியும் பிராம்மண விச்வாசமும் உள்ளவர்கள். மேலும் இவர்கள் கொடையாளிகள். ஆகையால் இந்த குணங்கள் அவர்களிடம் காணப்படும் எல்லா தோஷங்களுக்கும் பரிகாரமாகின்றன. முக்கியமாக ஆந்திர தேசத்து அரசர்கள் கல்பக விருக்ஷத்தைக் காட்டிலும், கர்ணனைக்காட்டிலும், நீருண்ட மேகத்தைக் காட்டிலும் ஏராளமாகக் கொடுக்கும் கொடையாளிகள் என்பது பிரசித்தம்.

நண்ப, இங்கே கோதாவரிதீரத்தைப்பார். கோதாவரியின் நிர்மலமான தீர்த்தத்தில் ஸ்னானம் செய்துவிட்டுக் கரையில்

மணலினுல் பிடித்துவைக்கப்பட்ட லிங்கத்தில் பரமசிவனை த்யானம்செய்து வில்வம் அக்ஷதை புஷ்பம் இவைகளினுல் பூஜைசெய்யும் பிராம்மணர்களைப்பார். சிவபூஜையினுல் பாபம் நீங்கினவர்களும், கையில் ருத்ராக்ஷ மாலையுடையவர்களும் வேதமந்திரங்களை ஓயாமல் ஆவர்த்திசெய்துகொண்டிருப்பவர்களுமான இந்த பிராமணர்களை நான் வந்தனம்செய்கிறேன். கிருஷ்ணுநதி, கோதாவரிநதி இவைகளுக்கு மத்தியிலுள்ள தேசத்தில் வைதிக ஸம்பிரதாயங்களை அனுஷ்டித்து வரும் பிராம்மணர்கள் வெகுவாக வசிக்கிருர்கள். இவர்கள் வேதாத்யயனம் செய்ததுடன் நிற்காமல் பிரதி வருஷமும் யக்ஞம் செய்து வருகிருர்கள். இந்த தேசத்தில் லௌகிக விருத்தியில் இருப்பவர்களோ உயர்ந்த அதிகாரங்களிலிருந்து தேசசேவை செய்து நிறைய திரவியங்களையும் சம்பாதித்துப் பின் நல்ல காரியங்களில் தாராளமாகச் செலவு செய்கிருர்கள் ஆகையால் இவர்களிடம் ஒரு குற்றமும் கிடையாது.

கிருசானு:- இருக்கட்டும், ஆனுல் இந்த தேசத்தில் மிகக் கொடிய செயல்கள் புரிபவர்களான துருக்கர்களல்லவா அதிகம் நடமாடுகிருர்கள்! இவர்கள் வாயுவேகத்தில் பறக்கும் குதிரைகளின் மேல் சஞ்சரிக்கிருர்கள். சிவன் கோவில் விஷ்ணு கோவில்களை இடித்து நாசம்செய்கிருர்கள். யக்ஞங்கள் முதலிய வைதிககர்மாக்களை நடத்துவதற்கு இடையூறுகள் செய்வதையே முக்கிய லக்ஷ்யமாகக் கொண்டிருக்கிருர்கள். இவர்களைக்கண்டு நாடு முழுவதும் நடுங்குகிறது.

விசுவாவசு:- நீ சொல்வது உண்மைதான். ஆனுலும் இந்தத்துருக்கர்கள் நல்ல வீரத்தன்மை உடையவர்கள் என்பதை ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியாது. நல்ல பயிற்சி பெற்ற ஆயிரம் படை வீரர்கள் யுத்தத்திற்கு வந்தாலும் ஒரு துருக்கர் வீராவேசத்துடன் தன் குதிரையின்மேல் ஏறிக்கொண்டு வாளை வீசிக்கொண்டு கூடாரத்திலிருந்து வெளி வந்தானேயானுல் அவர்கள் அவ்வளவு பேர்களும் ஒரு நிமிஷத்தில் நடுக்கமுற்று திசைநோக்கித் தட்டுத்தடுமாறி ஓடி ஒளிகிருர்கள்.

துருக்கர்கள் குடிக்கிருர்கள் தேசங்களை நாசமாக்குகிருர்கள் ஸ்திரீகளை மானபங்கம் செய்கிருர்கள். வேதங்களை அவமதிக்கிருர்கள் என்பதெல்லாம் ஒரு பக்கமிருக்க அவர்கள் யுத்தகளத்தில் தங்கள் உயிரைத் துரும்பாக நினைத்து ஸாகஸச்

செயல்கள் புரிவது மெச்சத்தக்கது. பின்பு கந்தர்வர்கள் கர்னுடக தேசத்தை அடைந்து அதன் வளத்தைக் கண்களால் பருகினுர்கள். கர்னுடக தேசம் பாக்கு மரங்கள் நிறைந்த சோலைகளால் சோபிக்கிறது என்ருன் விசுவாவசு.

கிருசானுவோ அந்த தேசத்தில் உள்ள குறைகளைக்கூற ஆரம்பித்தான். "இதில் லிங்காயத்துக்கள் வசிக்கிருர்கள். இவர்கள் அவைதிக மதத்தைச் சேர்ந்தவர்கள். கோபிஷ்டர்கள். வேதங்களையும் வைதிக மதத்தையும் தூஷிப்பவர்கள். மார்பில் லிங்கத்தைக் கட்டிக்கொண்டு விபூதியையும் தரிப்பவர்கள். இவர்களின் மற்ருெரு விபரீத ஆசரணையைக்கேள், கங்கையினுல் அபிஷேகம் செய்யப்பட்ட ஈச்வரனின் சிரஸில் இவர்கள் தங்களுடைய பாத தீர்த்தத்தைக்கொண்டு அபிஷேகம் செய்கிருர்கள். என்ன அந்நியாயம்!

விசவாவசு:- நண்ப இந்த தேசத்தில் யதுசைலம் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. பக்தர்களின் பாபங்களைப் போக்கடித்துக்கொண்டு ஸ்ரீமன் நாராயணன் யதுசைலத்தில் பிரஸன்னமாயிருக்கிருர். இந்த பர்வதத்தில் முன் கிருதயுகத்தில் ச்வேதத்வீபத்திலிருந்து கருடனுல் கொண்டுவரப்பட்ட கோபீசந்தனரூபமான மண் கிடைக்கிறது. அதை நெற்றியில் தரித்துக்கொண்டு பல புண்ணியவான்கள் சித்தசுத்தி உடையவர்கள் ஆகிருர்கள். இங்கு ஒரு பிரஸித்தமான குளம் இருக்கிறது. மேலும் இந்த தேசத்தில் ரஜதபீடம் என்ற சுவனூரில் ஆனந்த தீர்த்த முனி யோகத்தில் வீற்றிருக்கிருர். மோக்ஷத்தை விரும்பும் பல சுத்தமான ஆத்மாக்களால் சரணமடையப்பட்ட ஆனந்த தீர்த்தமுனி இங்குதான் அவதரித்தார்.

கிருசானு:- நீ சொல்வது சரிதான். இருந்தாலும் அவருடைய மதத்தைப் பின்பற்றுகிறவர்களிடம் பல குறைகளிருக்கின்றன. இவர்கள் சாஸ்திரங்களை அப்யாசம் செய்வதில் அக்கரையுள்ளவர்களாஞலும் காலையில் செய்யவேண்டிய ஸந்தியா வந்தனத்தை சூரியோதயமானபிறகு காலதாமதமாகத்தான் செய்கிருர்கள். அதனுல் பாபம் உண்டாகுமே என்ற பயம் அவர்களுக்கு இல்லை. மற்ற மதஸ்தர்களையும் இவர்கள் மதிக்கிறதில்லை. இவர்களுடைய மதகுருவோ காயத்ரீ அனுஷ்டானம் யக்ஞோபவிதம் சிகை இவைகளை விட்டுவிட்டு சன்னியாசி ஆகிப் பல்லக்கில் ஏறிக்கொண்டு ஊர் ஊராய்ப் போய் காணிக்கைகளைத் திரட்டுகிருர். (தொடரும்)



(வைத்தீசுவரன்கோயில்)

வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரக்கடவுள்

போட்டோ: M. மீனுக்ஷிசுந்தரம்

அறிவியல்

# வேளூரில் சென்று பார்

திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்

எல்லாவுயிர்களும் இன்பத்தை வேண்டுகின்றன. அது ஏன்? துன்பம் பெருகிய வாழ்வு நடத்துவதால், துன்ப வாழ்வு தொலைய-இன்ப வாழ்வு பெருக என்றும் நிலைத்திருக்க இயற்கை வழியே நன்று. புதிய வழி தேடிக்கொண்டிருப்பது வீண் எத்தனையோ யுகமாகத் துன்பக்கடலில் முழுகிக் கரை ஏறி, இன்பவுலகைக் காணமாட்டாமல் இருந்தவர், கண்டு வெளியிட்ட வழியைக் காட்டிலும், வேறு புதிய வழி யாராலும் காட்ட முடியாது. அது பழைய வழி. பழைய வழி என்று அதைப் பொருளாகக் கொள்ளாமல் தள்ளிவிட்டால், கல்லும் முள்ளும், கரடும் முரடும், பள்ளமும் மேடுமாய்ப் பல இடர்ப் பாடுகளைக் கொடுக்கும் பொய்யே மெய்வழி எனத் தோன்றும்.

அப்பழைய வழியைக் காட்டிலும் வேறான இயற்கை வழி உண்டு. இயற்கை வழி, ஒவ்வோர்உயிரும் உடம்பு எடுப் பதற்கு முன்பே உள்ளது. உடம்பு எவ்வழியில் உயிர்க்குக் கிடைத்தது? உயிர் எவ்வழியில் உடம்பை எடுப்பதும் விடுப் பதும் செய்கின்றது? இயற்கை வழியிலா? பழைய வழியிலா? புதிய வழியிலா?

காண்பது உயிர். காட்சிப் பொருள் உலகம். உயிர்க்குத் தெரியும் உலகம் உயிரால் உண்டாக்கப்பட்டது அன்று. உலக மும் உயிரால் உண்டானது அன்று. உடம்பு போல உலகில் பல இருக்கின்றன. உடம்போ உயிரால் உண்டாக்கப்பட்டதன்று. உலகம் எவ்வாறு உயிரால் உண்டாக்கப்படும்? குடம் கண்ணிற் பட்டால், அக் குடத்தைச் செய்தவனைக் கருத்து எண்ணுகின்றது. அதுபோல், மக்கள் தம் கண்ணுக்குத் தெரியும் உலகத்தைக் கொண்டு, அவ்வுலகத்தைத் தோற்றிய ஒரு முதலைக் கருத்தில் எண்ணுகின்றனர். எண்ணுவது மக்கள் செயல். எண்ணப்படுவது கண்ணிற் காணப்படாத ஒரு முதற் பொருள். அதை எண்ணச் செய்தது உலகம். இது பழைய

வழியா? இயற்கை வழியா? இயற்கைவழியாகும் என்று எல்லாரும் இசைவர். பழைய வழியாயிருந்தால், அது மக்கள் செயலாம். இயற்கை வழி கடவுள் படைத்தது. அது மக்கள் செயல் அல்லாதது. அதைக் கண்டறிய முடியாதபடி, நம் கருவிகரணங்களையும்-உலகங்களையும்- அறிவையும் கடந்திருப்பதையே' கடவுள் ' என்றனர்.

எல்லா உலகங்களையும் உயிர்களையும் கடந்தது - **கடவுள்.** இயக்குகின்றதும் அதுவே. அதனால் '**இயவுள்**' என்றும் பெயர் கூறப்படும். கடவுள் உலகங்களை எவ்வாறு இயக்குகின்றது? உயிர்களை எப்படி இயக்குகின்றது?

'**கடவுள்**', '**இயவுள்**' என்னும் பெயர்கள் எல்லாச் சமயங்களுக்கும் பொது. கடவுளை ஒத்துக்கொள்ளாத சமயங்களுக்கு மட்டும் இல்லை. பொதுப் பெயர்களால் தெரிவிப்பது தெளிவை உண்டாக்காது. எங்கும் கடவுள். எங்கும் இயவுள். எல்லாம் கடவுளே. எவ்வுயிரும் இயவுளே. எவ்வுலகும் இயவுளே.

உலகங்கள் எங்கிருந்து தோன்றுகின்றன? அதுதான் தெரியவில்லையே! அது பெரிய மாயையாகத்தான் இருக்கின்றது? காலம் எல்லா வற்றிற்கும் இடம். காலத்துக்கு எது இடம்? மாயை என்ற ஒன்றை அடிப்படையாகக் கொண்டுதான் உலகத் தோற்றம் நடைபெறுகின்றது. அம்மாயையில் சுத்தம் அசுத்தம் என்று இரண்டு வகை உண்டு.

சுத்தமாயையில் ஒலியும் பொருளும் என்று இருவேறு உலகம் தோன்றும். ஒலியுலகம் பொருளுலகத்தொடு மிக்க தொடர்புடையது. சுத்தமாயை ஒன்றே ஒலி வடிவாயும் பொருள் வடிவாயும் விரியும் முதற் காரணப் பொருள்.

ஒலியுலகம் ஓங்காரத்தை முதன்மையாகக் கொண்டது. ஓங்காரம் (பிரணவம்) இல்லையேல், அறிதல் முதலிய எத் தொழிலையும் நாம் செய்யமுடியாது. ஓங்கார ஒலியில் அகாரம் முதலிய ஐந்தும் பொருந்தியிருக்கின்றன. அகாரம் (அ) உகாரம் (உ) மகாரம் (ம்) என்னும் மூன்றும் விந்து, நாதம் என்னும் இரண்டும் கலந்ததே ஓங்காரம்.

மக்கள் உடைமை மனம். அதனுல் முன் அறிந்த சொற் பொருளையும் அப்பொருளின் வடிவையும் பின் உணர்ந்து கொள்கின்றனர். ஒரு விடயத்தை முதலில் பற்றுவது மனமே. பின் ஆங்காரம் ஒருப்பட்டெழும். பின் புத்தி நிச்சயிக்கும். நிருவிகற்பமாகக் கண்டபொருள் பலவற்றுள், இது யாதாகற் பாலது என்று ஒன்றை ஆராய்ந்து எடுத்து, மனத்திற்குக் கொடுப்பது சித்தம். மனத்தின் அவத்தை விசேடமே சித்தம்.

ஓங்காரத்தின் ஐந்து பிரிவுகளுள், அகரத்தால் அகங்காரம் தொழிற்படுகின்றது. உகரத்தால் புத்தி வேலை செய்கின்றது. மகரத்தால் மனம் செயலாற்றுகின்றது. விந்துவால் சித்தம் வினைபுரிகின்றது. நாதத்தால் புருடன் செலுத்தப்படுகின்றுன். இந்த மகா ரகசியத்தை அறிவதே மக்களது முதற் கடமை ஆகும். இதைத் தவிர்த்து மற்றவற்றையே அறிய முயல்கின்ற வீண் செயல் வளர்ந்து விட்டது.

மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் நான்கும் மக்கள் உடம்பின் உள்ளே இருக்கும் கருவிகள். அதனுல் அவற்றிற்கு உட்கருவி (அந்தக்கரணம். அந்தர்-உள். கரணம்-கருவி) என்று பெயர். அவற்ருேடு சேர்த்துப் புருடனைச் செலுத்துவது ஓங்காரமே. வைகரி முதலிய வாக்கு ஐந்தும் அ - உ - ம் - விந்து - நாதம் என்னும் ஐந்து பிரிவாய் நின்று, உட்கருவியை யும் உயிரை (புருடனை) யும் (ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருவி யைச்) செலுத்துகின்றன. அவற்றுள் சூக்கும அகாரத்திற்கு உகாரம் காரணம். உகாரத்திற்கு மகாரம் காரணம். மகாரத் திற்கு விந்து காரணம். விந்துவுக்கு நாதம் காரணம். அதனுல் நாதமே மூலகாரணம். ஐந்தும் கூட்டி உச்சரிக்க நாடுங்கால் பிரணவ ரூபமாகும். பிரணவரூபமான வாக்குக்களிலிருந்தே எழுத்துக்களும் பதங்களும் மந்திரங்களும் தோன்றுகின்றன. தோன்றவே ஒலியுலகம் முழுதுக்கும் மூலகாரணம் பிரணவம் எனலாயிற்று.

நாம் ஒலிப்பதும் எழுதுவதுமான பிரணவம் ஸ்தூலம். சூக்குமப் பிரணவமே முன் விளக்கப்பட்டது. சூக்குமப் பிரண வமே அசபையாய்ப் பரிணமித்துப் பிராணவாயுவைஅடக்கியும் விட்டும் நின்று உணர்த்துவது. மக்கள் முதலிய உயிர்கள் மூச்சு விடுவது அந்த அசபையாகப் பரிணமித்த சூக்குமப்

பிரணவத்தால்தான். பிராண வாயுவை அடக்கியும் விட்டும் நிற்பதால்தான், ஒவ்வொரு நொடியும் நினைப்பும் மறப்பும் மாறி மாறி நிகழ்கின்றன. நினைப்பு - சகலம். மறப்பு - கேவலம். இதனை உணர்த்தியதே, "பாவிடையாடு குழல்போல் கரந்து பரந்தது உள்ளம்" என்ற திருவாசகம். உள்ளம் கரத்தல் மறப்பு. பரத்தல் நினைப்பு.

மக்கள் கண் காது முதலிய வாயில்களால் உணர்கின்றனர். விலங்கு முதலியவையும் அவ்வாறே. அவ்வாயில்களால் வந்த உணர்வு வாயிற்காட்சியுணர்வு. அதன்பின் மனம் முதலிய உட்கருவிகளால் உணர்வு உண்டாகும். அது மானதக்காட்சியுணர்வு. அதன்பின், ஆன்மாவின்கண் நேராய்த் தோன்றும். அதுவே, தன் வேதனைக்காட்சியுணர்வு. கடலில் எழுந்து ஒன்றன்பின் ஒன்ருய்க் கரை சாரும் அலைபோல, வாயிற்காட்சியுணர்வும் மானதக்காட்சியுணர்வும் பரம்பரையாய் வந்து, பின் ஆன்மாவினிடத்தில் தன்வேதனைக்காட்சியுணர்வு தோன்றும்.

கடவுள் வழிதான் இயற்கைவழி. அந்த இயற்கை வழியை உணராமல், மக்கள் முதலியோர் தோற்றிய வழிகள் பழைய வழிகள். சைவம் ஓர் இயற்கை வழி. அது கடவுள் வழி. மக்களோ மற்றவரோ தோற்றியவழியன்று. நம் முன்பு பல புதிய வழிகள் தோன்றின. தோன்றுகின்றன. அவை நமக்குப் பொருளல்ல.

நம் செவிக்குக் கேட்கும் ஓசை ஸ்தூலம். வாயில், கழுத்தில், இதயத்தில், கொப்பூழிடத்தில் தங்கிவரும் வாக்குக்கள் சூக்குமம். அந்த ஐந்து வாக்கும் அகாரம் முதலிய ஐந்து பிரிவாய் நின்று உட்கருவியையும் புருடனையும் உடனின்று செலுத்தும் உண்மையை அறிய முயன்ருல், நாம் கடவுள் வழியை அணுகினோம் ஆவோம்.

கடவுள் (இயற்கை) வழியே ஓங்காரம். அதனுல் உணர்வு நிகழ்கின்றது. ஆன்மாக்கள் சித்தமாய்ச் சிந்தித்தும், மனமாய்ப் பந்தித்தும், ஆங்காரமாய்த் தெளியாமலும், புத்தியாய் ஆராய்ந்தும் அக்கடவுள் வழியில் சென்றுகொண்டிருக்கின்றன. போக்கும் வரவும் அவ்வியற்கைவழியில்தான் நடைபெறுகின்றன.

அவ்வழியின் தொடக்கத்திலும் முடிவிலும் நடுவிலும் கடவுள் வடிவங்களே பல வேறுவகையாய் விளங்குகின்றன. வழியில் செல்லும் உயிர்கள் அவ்வழியில் உள்ள எல்லாப்பொருள்களை யுமோ கண்டு உணர்கின்றன? இல்லையே! அவ்வாறே, இயற்கை வழியிலும்.

கடவுள் ஓங்காரத்துக்கு உள்ளேயும் இருக்கின்றார். வெளி யேயும் இருக்கின்றார். ஓங்காரத்திலேயும் இருக்கின்றார். இப்படி இருந்தும் அறிவார் யார்? எத்துணைமக்கள் அறிகின் றனர்? அறிய முயலாதார் எவ்வளவினர்?

வேலூரில் சென்று பார்; ஒவ்வொரு கிருத்திகை நாளிலும். அட்டா! மக்கள் கடவுள்வழியில்-இயற்கைவழியில் தெரிந்தோ தெரியாமலோ வந்து ஓங்காரப்பொருளை ஒருவாறு கண்டும் களித்தும் வழிபட்டு அருள்பெற்று இன்புறும் கண்கொள்ளாக் காட்சியை யாரால் எப்படி வருணனை செய்ய முடியும்?

வேள் - விரும்பப் பெறுபவன், விருப்பத்திற்கு உரியவன். கருவேள் மன்மதன். செவ்வேள் செல்வமுத்துக்குமாரக்கடவுள் நாம் விரும்பாமலேயே நம்மை விரும்பிவந்து துன்பம் செய் பவன் கருவேள். நம்மை விரும்பச்செய்து, நம் விருப்பத்துக்கு வேறு நல்ல பொருள்களையும் நல்கி, தானும் அழியாத பேரின்பப்பொருளாயிருப்பவன் செவ்வேளிறைவன். கருவேள் நம்மை இருளில் புகுத்துவான். செவ்வேள் அழியாத பேரொளி யில் நிறுத்துவான். ஓங்காரத்து உள் ஒளிக்கு உள்ளே செவ் வேள் உருவத்தைக் காணலாம்.

கட்வுள் தமது இயற்கைவழியில் தம்மை நமக்குக்காட்டிக் கொண்டே இருக்கின்றார். ஓங்காரமாய்-உணர்வாய்-மூர்த் தியாய்-தலமாய்-தீர்த்தமாய்-நூல்களாய்-குருவாய், நிலம், நீர், தீ முதலியவையாய்-இருசுடராய்-பல்வகை உயிராய்- எல்லாமாய்-எல்லாம் அல்லதுமாய்க் காட்சி கொடுக்கின்றார் கடவுள். அவரை அவரவர் அறிவின் அளவுக்கு-பக்குவத்துக்கு ஏற்றவாறு கண்டறிந்து வழிபடலாம்.

வழிபாட்டுக்கு எளியது-சிறந்தது கோயில் வழிபாடே. அது மக்கள் வாழ்க்கைக்கு மிக்க உதவியாயும் இருப்பது. கோயில்கள் வாழ்விற்குப் பயன்படும் முறையில் நிலைத்து

வந்து, வழிபாட்டுக்கும் சிறந்து விளங்குகின்றன. கோயில்கள் உலக வாழ்வுக்கும் உயிர்க்கு வேண்டிய அழியாத இன்ப வாழ்வுக்கும் முழு உபயோகமாகி நிலவுகின்றன. கடவுள் இல்லை என்றாலும் பலயாண்டு காலம் போக்கலாம். கோயில் களைப் புறக்கணித்தாலோ, அவற்றால் பிழைத்துவரும் பலர்க்கு ஒரு வாழ்வும் நடவாது.

பரதகண்டத்தின் அமைப்பு வழிபாட்டுக்கென்றே படைக் கப்பெற்றதுபோலத் தோன்றுகின்றது. இமயம் முதல் குமரி முடிய உள்ள பகுதியுள்-இருகடலும் அடங்கிய பரப்பில் - ஏன்? எங்குச் சென்றாலும் இயற்கை வழியில்—கடவுள் வழியில் உயிர் நிலைத்துப் பேரின்பம் பெறலாம்.

"சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியோடு வயிற்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்"

செல்வமுத்துக்குமாரக்கடவுள் திருவடிக்காட்சி அருள்வார் என்று நற்கீரதேவநாயனார் நவின்றார். அவர்க்கு ஆறு முகமும் பன்னிருகையும் உள்ள அழகை அப்புலவர் நன்குணர்த்தினார். இதனால், செல்வமுத்தையன் திருவருளுருவை, திருவிழா நிகழும் இடத்தில் – வெறியாடுகளத்தில் – காட்டில் – காவில் – ஆற்றிடைக்குறையில் – ஆற்றில் – குளத்தில் – வேறுபல வைப் பிடங்களில் – நாற்சந்தி முச்சந்திகளில் – புதியபூக்களை மலர்ந்த கடம்ப மரத்தில், மன்றத்தில் – பொதியிலில் – நடுதூண் நிலை யில் – விண்ணை அளாவிய நெடிய மலைகளையுடைய குறிஞ் சியில் கண்டு களிக்கலாம்.

"பரிசிலர்த் தாங்கும் உரு கெழு நெடுவேளள்
பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள்"

யார்! 'வேல் கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ' முத்தையன் அல்லனோ? அவனை 'ஆல்கெழுகடவுட்புதல்வ'

னுகவும் 'மால்வரை மலைமகள் மகனே' ஆகவும் கண்டு 'கைதொழூஉப் பரவிக் கால்உற வணங்கி' வரும் அன்பர்க்கு 'விழுமிய பெறலரும் பரிசில் நல்கும்' உண்மையைத் திருமுருகாற்றுப்படையால் அறியலாம்.

ஒழியாத புவனத் துஉயிர்க்குயிரதாய்நிற்பது
ஒருதெய்வம் உண்டுஎன எடுத்து
உரையால் உணர்த்துவதை ஒழியஎவர்எவர்கட்கும்
ஊன்கண் உளக்கண்ணதாம்

விழியாக முன்னின்று தண்அளி சுரந்தவர்கள்
வேண்டிய வரம் கொடுப்பான்
மெய்கண்டதெய்வம் இத் தெய்வம் அல்லால் புவியில்
வேறுஇல்லை என்று உணர்தியால்.

பொழியாத புயல்தங்கு புவனமும் திசைமுகப்
புத்தேள் பெரும் புவனமும்
பொன்னுலகும் மண்ணுலகும் எவ்வுலகு வேண்டினும்
பொருள் அன்று இவற்கு மற்ற

அழியாத வீடும் தரக்கடவன் இவனுடன்
அம்புலீ ஆட வாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்
அம்புலீ ஆட வாவே. (முத்துக்குமாரசுவாமிபிள்ளைத்தமிழ்.67)

ஒழியாத புவனத்தில் உயிர்க்கு உயிராய் நிற்கும் ஒரு தெய்வம் உண்டு. அதுவே மெய்கண்டதெய்வம். அது தவிர இப்புவியில் வேறு இல்லை. "அறிவுள் அறிவை அறியுமவரும் அறிய அரிய பிரமம்" அது. அதுவே நம் உள்ளத்தின் இருளைப் போக்க உணர்வில் தோன்றும் ஒளிஞாயிறு. தீராதவினை தீர்த்தருளும் தம்பிரானும் அவன் திருமேனியைப் பிரியாத தையல்நாயகியும் வைத்துச் சீராட்டி விளையாடுஞ் சேனுபதிக் கடவுளே செல்வமுத்தையன். நீறணி முழுமுதற் பொருளே செல்வமுத்தையனுகத் திருவுருக்கொண்டான்.

"அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றுய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி ஆகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்துஆங்கு உதித்தனன் உலகம் உய்ய."

என்பது கச்சியப்பசிவாசாரியார் திருவாக்கு. அதனால் அவனை நான்மறையும் மூலம் என ஓலம் இடும் முழு முதல் என்பர். தாமரை மலரானும் தாமரைக்கண்ணனும் பழமறையும் நாத நாதாந்தமும் போதமும் காணாத நித்தியாநந்தபோத வடிவினன். ஊர், பேர், குணம், குறி, முன், பின் எதுவும் இல்லாத எம் பிரான். எங்கும் செறியும் பரமசிவம். எவ்வுயிர்க்கும் தஞ்ச மான தனிப்பொருள். அவனை வணங்குவோர்க்கே மெய்ஞ் ஞானக்கண் திறக்கும். அஞ்ஞான இருள் பறக்கும். போக்கும் வரவும் நினைப்பும் மறப்பும் பகலும் இரவும் கடந்த – அழியாத பேரின்பம் கிட்டும். அவன் திருவடி, 'யான்' என்ற அகந் தையும் 'எனது' என்ற மமதையும் அற்ற இடத்தில்தான் காணக் கிடைக்கும். மெய்ஞ்ஞானமே அவனது சொரூபம். ஒவ்வொரு முகத்திலும் உள்ள முக்கண்ணும் அவனுடைய விருப்பத்தை – அறிவை – செயலைக் குறித்த உண்மையாகும். உலகமே அவன் சந்நிதி. எல்லாவுயிரிலும் நீங்காமல் இருக்கின்றான்.

சரவணப் பூந்தொட்டில் விளையாட்டு, விண்ணோரை நடுங்கச்செய்த வீரம். ஆடேறி நாடலைத்த ஆட்டம், படைப் பவனைக் குட்டிச் சிறைப்படுத்திப் படைத்த முதன்மை, அப்ப னுக்கும் அரும்பொருளைக் கற்பித்த ஆசிரியத்தன்மை, தலையான ஒன்பது வீரரைத் துணைகொண்ட சேநாபதித்துவம், மலையைத் தூளாக்கிய நிலை. ஆணவம் மாயை கன்மம் என்னும் முக்குற்றமும் தீர்த்து உயிர்களை ஆட்கொள்ளும் உண்மை, அவ்வுண்மையைக் காட்டும் சூரசங்காரம், தெய்வயானை மணம், வள்ளிநாயகியார் காதல், மயிலூர்தி, கோழிக்கொடி, எல்லாம்வல்ல செவ்வேற்படை, இன்னும்பல, இவை எல்லாம் செல்வமுத்தையனுக்கு அன்றி வேறு யார்க்கேனும் உண்டோ?

அவன் பெருமையை அறிந்தவன் எவன்? பகைவன் சூரன். பின் உள்ளவாறு அவனும் போற்றினான்.

"கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலன்என்று இருந்தேன் அந்நாள் பரிசு இவை உணர்ந்திலேன் யான்
மால் அயன்தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூல காரணமாய் நின்ற மூர்த்தி இம் மூர்த்தி அன்றோ?"

அவனே ஓங்காரப்பொருள் என்று உண்மை உணர்ந்து உவந்தான்.

" தாமரைக்கணன் முதலிய பண்ணவர் தமக்கும்
ஏம்உறப்படும் மறைக்கெலாம் ஆதிபெற்றுஇயலும்
ஓம் எனப்படும் குடிலையே ஒப்பிலா முருகன்
மா முகத்துள் ஒன்றும், அவன்தன்மை யார் வகுப்பார்? "

" ஆதி ஆகிய குடிலையும் ஐவகைப் பொறியும்
வேதம் யாவையும் தந்திரப் பன்மையும் வேறு
ஓத நின்றிடு கலைகளும் அவ்வவற் றுணர்வும்
போதம் யாவையும் குமரவேள் பொருவிலா உருவம். "

" முன்ன வர்க்கும்முன் னுகுவோர் தமக்கும்முற் பட்டுத்
தன்னை நேர்இலாது ஈசனும் தனிப்பெயர் தாங்கி
இன்னு யிர்க்குயிராய்அரு வுருவமாய் எவர்க்கும்
அன்னை தாதையாய் இருந்திடும் பரமனே அவன்காண். "

அவனை எங்கே காணலாம்? அவனைக்காண முடியாத இடம் ஏது? எங்கும் அவன் இருப்பினும் எவரும் காணவில்லையே? அதற்கு வேறு கண் வேண்டும். அக்கண்ணைப் பெறத்தான் கோயிலுக்குப்போய் வழிபடல் வேண்டும். அப்படிப்பெற்ற கண் மீண்டும் குருடாகாமல் இருக்கவும் கண்பெறும் வழியை மற்றவர்க்குக் காட்டி நிற்கவும் ஞானிகளும் கோயிலை வழி படுகின்றனர்கள்.

அப்படியா! நானும் இனிக்கோயிலை அடைந்து வழிபடத் தவறமாட்டேன். எனக்கு ஒரு கோயிலைக் காட்டுக.

வேளூர்க்குப்போ, சித்தாமிர்த தீர்த்தத்தில் முழுகு, வைத்தியநாதா! தையல்நாயகி! செல்வமுத்துக்குமாரா! சரவண பவா! இம்மந்திரங்களை மறவாதே, திருச்சாந்துருண்டையைத் தீர்த்தத்தோடு கலந்து உண்டுவா. எல்லா நோய்களும், தீராத பிறவிநோயும் தீர்ந்தேவிடும். வேளூர் மிகச் சிறந்தது. செல்வ முத்துக்குமாரக்கடவுள் திருவருள் கொடுத்துவரும் சிறப்புடை யது. ஒவ்வொருவிசேடநாளிலும், பலஆயிரம் அன்பர்கள் வந்து, அப்பெருமான் கொள்ளும் சந்தனுபிடேகம் முதலிய சிறப்புக் களைக் கண்ணாரக்கண்டு, நெஞ்சார நினைந்து, கையாரக் குவித்துத் தலையாரக் கும்பிட்டு, வாயாரப்பாடி, நாவார வாழ்த்திச் செல்கின்ற நலம் வானோர்க்கும் வாய்க்காத வளமான அருள் விருந்து. வாழ்க வேளூர்ச் செல்வமுத்து.

---

563



# தமிழரே முதலோர் தமிழே முதன்மொழி

**திரு. மு. இராமகிருட்டினனார்**

வித்துவான் முடிவுநிலை, தருமைத் தமிழ்க்கல்லூரி.

எச். ஜி. வெல்ஸ் (**H. G. Wells**) என்ற உலகிலே சிறந்த சரித்திரப் பேராசிரியர் தமது உலக வரலாற்றுச் சுருக்கத்தில் (**A Shart History of the world**) உலகிலுள்ள உயிர்களானவை இற்றைக்கு 160 கோடி ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றி இருக்கவேண்டும் என்றும், வட அமெரிக்காவிலுள்ள அசோயிக் பாறைகள் (**Azoic Rocks**) போன்றவை தோன்றி 80 கோடி ஆண்டுகளுக்கு மேலிருக்குமென்றும் அறிவிக்கிறார். உலகின் மிகப்பூர்வீக காலத்தைத் தாழ்ந்த பாலியோசிக் காலம் (**Lower Palaeozic**) என்று நிலநூலார் (**Geologists**) அறிவிக்கின்றனர். உயிர்வர்க்கத்தின் மூல உயிரான அல்கே (**Algae**) யிலிருந்து தாவர இனமும், சிறியசெல்மீன் இனமும் (**Shell fish**) தோன்றி வளரலாயின என்றும், செல்மீனிலிருந்து (**Jelly fish**) ஜெல்லி மீன் இனமும், பின் முதுகெலும்பு இல்லாத (**Invertebrate**), பின் முதுசெலும்புள்ள மீன் இனங்களும், அடுத்து அம்பிபியான் (**Amphibian**) இனத்தைச் சார்ந்த நீரிலும் நிலத்திலும் வாழும் இனமும், பின் ஊர்வனமும், இவற்றிலிருந்து பறவை இனமும், குட்டிபோட்டுப் பால்கொடுக்கும் இனமும் (**Mammal**) பிரிந்து வளரலாயின எனவும், குட்டிபோட்டுப் பால்கொடுக்கும் இனத்திலிருந்து குரங்கு (**Mankey**), மனிதக்குரங்கு (**Ape**), வளர்ச்சியடையாத மனிதன் (**Sub-man**) இவை முறையே படிமுறை வளர்ச்சியான் வளர்ந்து உண்மையான முழுமனிதன் தோன்றினன் என ஹென்டிரிக் வான் லூன் (**Hendric Van Loon**) என்ற சரித்திர ஆசிரியர் ஆய்ந்து அறிவித்துள்ளார்.

இவ்வாறு தோன்றிய மனிதன் உடம்பு முழுதும் அடர்ந்த உரோமங்களை உடையவனாகவும், கருத்த தோலினையும், காட்டு மிருகங்களை ஒத்த நீண்ட நகங்களையும், முன்பகுதி தாழ்ந்த முகத்தினையும் உடையவனாகக் காணப்பட்டான் என்று ஆசிரியர் லயங் (**Liang**) என்பாரும், ஆசிரியர் ஹென்டிரிக் வான் லூனும் (**Hendric Van Loon**) அறிவிக்கின்றனர்.

சூரிய வெப்பத்தையும், இரவில் ஏற்படும் குளிர்ச்சியையும் தாங்கமாட்டாத மனிதன், அவற்றிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள இலைகளையும், தழைகளையும் ஆடையாகப் பயன் படுத்தினன். இக்காட்டு மனிதன், மிருகங்கள் மலைகளிலுள்ள குகைகளில் சுகமாகப் படுத்துத் தூங்குவதைப் பார்த்துத் தானும் அவை மாதிரியாகத் தூங்க ஆவல் கொண்டு காட்டு மிருகங்களை அங்கிருந்து விரட்டிவிட்டு, அந்த குகைகளைத் தனது முதல் வீடாகக்கொண்டான். குகைகளில் வாழ்கின்ற காலத்து, காட்டு மிருகங்களின் எதிர்ப்பிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியாமல் போகவே, மரங்களில் தனது இரண்டாவது வீட்டை அமைத்துக்கொண்டான். புயல் காற்றினலும், பூகம்பத்தாலும் இவனது மரவீடுகள் சரிந்து விழ நேரவே, மிருகங்களின் குகைகளைப்போன்று மண்ணல் தங்கள் வீடுகளை மூன்ருவதாக அமைத்துக்கொள்ள ஆரம் பித்தான்.

இவ்வண்ணமாக வாழ்ந்த மனித இனங்களைப் பற்றிய சிதைவுச் சின்னங்கள் பல லெமூரியாவிலேயேதான் காணப் படுகின்றன என்று பேராசிரியர் ஸ்கிலாட்டர் (Sclater) ஹேக்கல் (Haeckel) போன்ற அறிஞர்கள் அறிவித்துள்ளனர். இனி இந்த லெமூரியாக் கண்டம் இருந்ததற்கான ஆதாரங்களை ஆராயப்புகுவோம்.

## இலெமூரியா இருந்ததற்கான ஆதாரங்கள்

### 1. தமிழ் தரும் சான்றுகள் :-

ஆப்பிரிக்கா, மடகாஸ்கர், இந்தியாவின் தென்பகுதி, இலங்கை, சுமத்ரா, ஜாவா, போர்னியோ, நியூகினி, செலிபஸ் முதலிய நாடுகள் யாவும் சேர்ந்து ஒரே நிலப்பரப்பாக ஆதியில் அமைந்திருந்தன. இப்பெரிய கண்டத்தின் ஒரு பகுதியாகவே - ஏன் - மத்திய பகுதியாகவே நமது குமரிக் கண்டம் விளங்கி யுள்ளது. இதில் 49 நாடுகள் இருந்ததாகவும், குமரியாற்றிற் கும் பஃறுளியாற்றிற்கு மிடையில் 700 காதம் தூரம் இந்நாடு பரவியிருந்ததாகவும், இங்குத்தான் முதல் சங்கம் 4440 ஆண்டு கள் 89 அரசர்களாலும், இரண்டாவது சங்கம் 3700 ஆண்டு கள் 59 அரசர்களாலும், மூன்ருவது சங்கம் 1850 ஆண்டுகள்

49 அரசர்களாலும் நடத்தப்பட்டுத் தமிழுக்கு ஆக்கம் தேடினர் எனத் தமிழ் நூல்களால் அறிகிறோம்.

குமரிக்கண்டத்திலே குமரியாறும், குமரிக்கோடும், குமரிக் கடலும், இருந்தன என்று நம்தமிழ் நூல்கள் சான்று பகர்கின்றன. அவையாவன :-

1. புறம். 6.

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனுஅ துருகெழு குமரியின் றெற்கும்".

2. புறம் 17.

"தென்குமரி வடபெருங்கல்
குணகுடகடலாவெல்லை".

3. புறம் 67.

"மையன் மாலையாங் கையாறு பிணையக்
குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை யாயி னிடையது".

4. பாண்டியநாட்டுச் செவ்வூர் சிற்றம்பலக்கவிராயரது ஏட்டுப்பிரதி :-

"வேங்கடங் குமரிதீம்புனற் பௌவத்
திந்நான் கெல்லையி னிருந்தமிழ் பயின்ற".

5. அடியார்க்கு நல்லார் உரைகள் :-

அ. "குமரியொடு வடவிமயத் தொரு
மொழிவைத் துலகாண்ட சேரலாதன்".

ஆ. "வேங்கடங் குமரி தீம்புனற் பௌவ மெனத் தமிழோரால்
எல்லைகூறப்படாநின்ற தமிழ்த் தேசத்தார்".

இ. "வேங்கடங் குமரி தீம்புனல் பௌவமெனத்
தமிழ் நாட்டிற்கு".

866.

ஈ. " பொதியின் மலையை வலங்கொண்டு குமரியாற்றின்
தீர்த்தமாடும் முறைமையின் ஆடி ".

6. சிலம்புவேனிற்காதை :-

" நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புன னன்னாட்டு ".

7. அரும்பத உரையாசிரியர் :-

" தொடியோள் பௌவம் - குமரிக்கடல் ".

8. சிலம்பு. காடுகாண்காதை :-

" பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள ".

9. சிலம்பு. அடைக்கலக்காதை :-

" மாதவ முனிவன் மலைவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து ".

10. சிலம்பு. கட்டுரைக்காதை :-

" தனிச்சிலம் பரற்றுந் தகைமையள் பனித்துறைக்
கொற்கைக் கொண்கன் குமரித் துறைவன் ".

11. சிலம்பு. நீர்ப்படைக்காதை :-

" மாமுனி பொதியின் மலைவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை யாடி மீள்வேன் ".

12. பனம்பாரனார் :-

" வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து "

13. இளம்பூரணர் :-

" கடல் கொள்வதன் முன்பு பிறநாடும்
உண்மையின் தெற்கு எல்லை கூறப்பட்டது ".

14. சிகண்டியார் :-

"வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்நான் கெல்லை தமிழது வழக்கே".

15. காக்கை பாடினியார் :-

"வடக்குந் தெற்கும் குடக்குங் குணக்கும்
வேங்கடங் குமரி தீம்புனல் பௌவம்".

16. கணக்காயர் மகனுர் நக்கீரர் உரைத்த இறையனுர் பொருளுரையானும், பிறவற்றுனும் தமிழகத்தின் தென்பால் விரிந்த குமரிக்கண்டம் ஒன்று குமரி யாற்றிற்கும் பஃறுளி யாற்றிற்குமிடையில் 700 காததூரம் பரந்து, குமரிக்கோட்டினை யும், ஆற்றையும், கடலையும் பெற்று மிக்க நாகரிகமுடைய நகரங்களையும், அறிவுடைச் சான்ருேர் பலரையும் உடையதாக விளங்கி, பின் கடலால் அழிவு பெற்றது என்பதை நன்கு அறியலாகுேம்.

## விஞ்ஞானிகள் தரும் சான்றுகள்

**2. தீவுகள் தொடர்ந்து காணப்படுகின்றமை :-**

ஆப்பிரிக்காவிற்கும் இந்தியாவிற்குமிடையில் லாமு (**Lamu**), பெம்பா (**Pemba**), சான்சிபார் (**Zanzibar**), மாபியா (**Mafia**), அல்டபிரால் (**Aldabral**), கொமாரோ (**Comoro**), மயோட்டா (**Mayotta**), மடகாஸ்கர் (**Madagascar**), மொரீஸஸ் (**Mauritius**), ரோட்ரிகுஸ் (**Rodriguez**), அமிரேண்டி (**Amirante**); சாகோஸ் (**Chogos**), செசல்ஸ் (**Scychelles**), மாலடிவ் (**Moldive**), இலட்சத்தீவுகள் (**Laccadive**), சாயாதே முல்லா, அஸ்தகரை, பவளத் தீவுகள் முதலிய நூற்றுக்கணக்கான தீவுகள் இருக்கின்றன. அவற்றில் செசல்ஸ்தீவைச்சுற்றி 30 அல்லது 40 பாக ஆழத்திற்குமேல் அதிகமாக ஆழங் கிடையாதென டார்வின் (**Darwin**) என்ற விஞ்ஞானி அறிவித் துள்ளார். இவற்றை நாம் நோக்குமிடத்து ஆப்பிரிக்காவையும் இந்தியாவையும், இவற்றிற்கு இடையிலுள்ள நூற்றுக்கணக் கான தீவுகளையும் இணைத்து, மிகப்பரந்த நிலப்பரப்பு ஒன்று இருந்திருக்கவேண்டும் என்றும், பிற்காலத்தில் கடல் கோள்

868

களால் பள்ளமான இடங்களில் நீர் நிறையப்பெற்று மற்ற மிக மேடான பகுதிகளும், மலைப்பகுதிகளும், தீவுக்கூட்டங்களாக மாறியுள்ளன என்பதையும் நாம் நன்கு அறியலாம்.

இனி இந்தியா, இலங்கை, அந்தமான் (**Andaman**) நிக்கோபார் (**Nicobar**), மலேயா (**Malaya**), சுமத்ரா (**Sumatra**), சாவகம் (**Java**), போர்னியோ (**Borneo**), செலிபஸ் (**Celebess**), கோகோஸ் (**Cocos**), கிரிஸ்துமஸ் (**Chiristmas**), மொலுக்கா (**Molucca**), அரு (**Aru**), குனிட் (**Kuniet**), செர்மாட்டா (**Sermata**), மெல்வில்லி (**Meville**), வெசல் (**Wessel**), சாலமென் (**Soloman**), நியூசிலாந்து (**New Zealand**), முதலிய தீவுகளும், தீவுக்கூட்டங்களும் ஒன்றை ஒன்று மிகமிக நெருங்கி அமைந்துள்ளன. இவ்வளவு அதிகமான தீவுகள் உலகில் வேறு எப்பகுதியிலுமே கிடையா. வெகுகாலத்திற்கு முன் இத்தீவுகளும் நாடுகளும் ஒன்று சேர்ந்த மிகப்பரந்த நிலப் பகுதியாக இருந்திருக்க வேண்டுமென்று அவை நமக்கு நன்கு அறிவிக்கின்றன.

ஆகவே ஆப்பிரிக்கா, இந்தியா, கிழக்கிந்திய தீவுகள் யாவும் ஒன்று சேர்ந்திருந்தன என்றுகிறது. இதனுள் குமரிக் கண்டம் ஒருபகுதியாக அமைந்துள்ளது என்பதை முற்கூறிய தமிழ்ப்பாக்களால் அறிந்தோம்.

மேற்கூறிய நாடுகளும், தீவுகளும் பூமத்திய ரேகைப் பகுதியிலேயே அமைந்துள்ளமை நோக்கற்பாலது.

**3. இந்நாடுகளிலுள்ள தாவரங்களும், மிருகங்களும் ஒரே வகையாயிருத்தல் :-**

இலெமூரியா கண்டத்திலிருந்த நாடுகளில் காணப்படும் தாவரங்கள் யாவும் ஒரே வகையைச் சார்ந்தவையாக இருக்கின்றன. இந்நாடுகளில் காணப்படும் தாவரங்கள் உலகில் வேறு நாடுகளில் முதலில் காணப்பட்டதில்லை. எடுத்துக் காட்டாக தேக்கு மரங்கள் திருவிதாங்கூரிலும், ஆப்பிரிக்காவிலுள்ள காடுகளிலும் காணப்படுகின்றன. புளியமரங்கள் சாவகத்திலும் இந்தியாவிலுமே அதிகமாகக்காணப்படுகின்றன. தென்னை மரங்கள் இந்தியா, இலங்கை, மேலனேஷியா ஆகிய நாடுகளிலும், கரும்பு, சீனம், இந்தியா, சாவகம் ஆகிய நாடு

களிலும், நெல் இந்தியா, பர்மா, சீனு, ஜப்பான், சாவகம் ஆகிய நாடுகளிலுமே காணப்படுகின்றன. இவற்ருலும், இப்பகுதிகள் ஒன்ருக இருந்திருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் அறிவிக்கின்றனர்.

4. மிருகங்கள் :-

தென்ஆப்பிரிக்கா, இந்தியா, இலங்கை, ஜாவா, போர்னியோ, சுமத்ரா ஆகிய இடங்களில் காணப்படும் மிருகங்கள் ஒரே வகையைச் சார்ந்த மிருகங்களாக இருக்கின்றன. பொதுவாக சிங்கம், சிறுத்தை, யானை, கழுதை, நரி, மான் முதலிய மிருகங்கள் இப்பகுதியிலேயேதான் காணப்படுகின்றன. இதனுலும் இப்பகுதிகள் யாவும் ஒன்ருக இருந்திருக்க வேண்டும் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

5. ஊர்வன :-

நடுக்கோட்டுப்பகுதியுள்ள இந்நாடுகளில்தான் பாம்புகள் காணப்படுகின்றன. இந்தியாவில் மட்டும் 220 வகையான பாம்புகள் காணப்படுகின்றன. இவைகளில் பெரும்பாலான நீரினை அடியோடு வெறுப்பவை. ஆகையால் இவ்வினம் ஓரிடத்திலிருந்து மற்ருரிடத்திற்கு நீர்வழியாக சென்றிருக்க முடியாது. தரைவழியாகவே சென்றிருக்கவேண்டும். இவ்வகைப் பாம்புகள் ஆப்பிரிக்கா, இலங்கை, ஜாவா, போர்னியோ, சுமத்ரா போன்ற தீவுகளில் காணப்படுகின்றன. இதனை நோக்கவும இப்பகுதிகள் யாவும் ஒன்ருக இருந்திருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது.

6. அபூர்வ தாவர ஒற்றுமை :-

ராபர்ட் கால்டுவெல் என்னும் அயலாந்து அறிஞர் தமிழகத்தில் வாழ்ந்து, தமிழுக்கு மிகவும் தொண்டு புரிந்த இவர் தான் வாழ்ந்த மாவட்டத்தைப்பற்றி "திருநெல்வேலி சரித்திரம்" என்று ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதியுள்ளார். அதில் தூத்துக்குடி எஸ். ஏ. வி. உயர்நிலைப்பள்ளியிலிருக்கும் ஒரு பெரிய மரத்தைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இம்மரத்தினை அவ்வூரார் இராக்கத மரம என்றும், சீமைப்புளி, பப்ரபுளி என்றும் கூறுகின்றனர். இது தமிழ்நாட்டிற்கே - ஏன் - இந்தியாவிற்கே

புதிதான மரம். இதன் பெயர் தமிழருக்கே தெரியாது. இது போன்ற மரம் நாஞ்சில்நாட்டிலுள்ள நாகர்கோவில் என்ற ஊரிலும் ஒன்று உள்ளது. நெல்லைமாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டத்திற்கு வடக்கே 1½ கல் தூரத்திலுள்ள பத்பநாபமங்கலத்திற்குக் கீழ்புறத்தில் இசவங்குளத்தின் அருகிலும் இம்மரம் ஒன்று காணப்படுகின்றது. இம்மூன்று இடங்களிலும் இம்மரத்தின் பெயரே மக்களுக்குத் தெரியவில்லை. இவ்வாறாக இந்தியாவிலே இம்மூன்று மரங்கள்தாம் காணப்படுகின்றன. இந்தமாதிரியான மரங்கள் ஆப்பிரிக்காவைத்தவிர உலகில் வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆப்பிரிக்காவிலும் தமிழ்நாட்டிலும் மாத்திரம் காணப்படுகின்றமை நோக்கி, கால்டுவெல், ஒரு காலத்தில் தமிழகமும் ஆப்பிரிக்காவும் ஒன்றாயிருந்திருக்கவேண்டும் என்று கூறுகின்றார்.

## 7. மொழி ஒற்றுமை :-

இலெமூரியா கண்டத்திலுள்ள நாடுகளில் பேசப்படும் மொழிகள் யாவும் ஒன்றுக்கொன்று ஒற்றுமையுடையவாய்க் காணப்படுகின்றன. முக்கியமாக அவைகள் தமிழையே சார்ந்திருக்கின்றன என்று கால்டுவெல்லும், காளிதாஸ் நாயக்கும் அறிவிக்கின்றனர். உதாரணமாக நடு ஆப்பிரிக்காவில் போர்னு நாட்டில் (**Bornu**) பேசப்படும் கனூரி (**Kanuri**) மொழியும் மற்ற ஆப்பிரிக்க மொழிகளும், நியூஸிலாந்து பகுதிகளில் பேசப்படும் போலினேஷிய மொழிகளும் (**Polynesian**) தமிழைப் பெரிதும் சார்ந்துள்ளதை மொழியியல் வல்லுநர்கள் அறிவித்துள்ளனர். இவ்வொற்றுமை இலெமூரியாவை உறுதிப்படுத்துகிறது.

## 8. விளையாட்டுகளில் ஒற்றுமை :-

மேற்கண்ட பகுதியில் வாழும் மக்களது பண்டைய விளையாட்டுகள் யாவும் ஒரே வகையன. பண்டைத் தமிழகத்தில் தமிழரால் விளையாடப்பட்ட பட்டமிடுதல், சேவல் போர் முதலிய விளையாட்டுக்கள் இன்றும் சுமத்ரா, ஜாவா, போர்னியோ, இலங்கை பூர்வீகர்களிடமும் காணப்படுகின்றன. இவற்றை நோக்கவும் இலெமூரியா உண்மை வெளியாகிறது.

9. **தாய்வழி உரிமை :-**

பொதுவாக இந்நாடுகளிலெல்லாம் தாய்வழி உரிமை முறை பின்பற்றப்பட்டுள்ளன. ஆப்பிரிக்கா, ஜாவா, சுமத்ரா, போர்னியோவிலும், தமிழகத்தில் ஆதிகாலத்தில் இருந்து அழிந்து தற்போது அதன் பகுதியாக விளங்கும் மலையாளத்தில் அம்முறை பின்பற்றப்பட்டிருக்கிறது

மேற்கண்ட பல்வேறு காரணங்களால் ஒரு காலத்தில் நிச்சயமாக இலெமூரியாக்கண்டம் இருந்தது என்பதும், இப் பகுதில் வாழும் மக்களும், தாவரங்களும், மிருகங்களும் லெமூரியாவின் நடுப்பாகமாகிய குமரிக் கண்டத்திலிருந்தே பிற இடங்களுக்கு பரவியுள்ளது என்பதும் நமக்கு நன்ருக விளங்கியது.

(தொடரும்)

---

# தமிழிசைப் பாடல்

## நடராஜர்

திரு. க. சொக்கலிங்க ஓதுவார் அவர்கள்
தேவார ஆசிரியர், வைத்தீசுவரன்கோயில்.

இராகம் – பந்துவராளி] [தாளம் – ஆதி

பல்லவி

தரிசனம் செய்திட மறுஜன்ம முண்டோ
தில்லைச் சிதம்பர நாதன் திருவடித் (த)

அனுபல்லவி

அரிஅயன் அறியா அநாதிமூர்த்தி அவன்
ஆனந்த குஞ்சித பாதமே ஏத்தித் (த)

சரணம்

ஒழியா வினைகளை ஒழிப்பவன் ஞான
உத்தமி யாம்சிவ காமி மணாளன்
அழியா ஆனந்த அற்புதத் தாண்டவம்
அன்பர்கள் மகிழவே ஆடும் நடேசனைத். (த)

872

# மணையில் மணமக்கள்

திரு. கீ. இராமலிங்கம் அவர்கள் எம்.ஏ.,

முதல்வர், தருமையாதீனக் கீழைக்கலைக் கல்லூரி.

"டின்டிணுங்கு டின் டிணுங்கு, டின்டின் டிணுங்கு, டின் டின் டின்டின், டின் டிணுங்கு, ட்திணுங்கு ட்திணுங்கு, டின் டின் டின்டின், டின் டிணுங்கு, ட்திணுங்கு ட்திணுங்கு" என்று தவ்வலை மிக விரைவாக அடி அடியென்று அடித்தார் தவ்வல் கடம்பவனம். அதற்கு "ஒத்தாற்போல" பிபிபிபி பி என்று ஊதினார் நாயனத்தை நாயனவித்துவான் நடனசுந்தரம்.

தாலி கட்டியாயிற்று. கற்கண்டுத் தட்டுகள் சுற்றிச் சுற்றி வந்தன. பெரிய கட்டியாக இருக்கவேண்டும் என்று பொறுக்கினர் சிலர். சேர்த்து அள்ளிக்கொண்டனர் சிலர். கற்கண்டை விரலால் தொட்டுவிட்டுப் போகலாம் என்றதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டிக் கையைக் காட்டியவரும் ஒருவர் இருவர் இல்லாமல் இல்லை. அப்படிப்பட்டவர்கள் அவர்களுடைய மருத்துவர்கள் இனிப்புச் சாப்பிடக்கூடாது என்று சொல்லியிருந்ததை உறுதியாகக் கடைப்பிடித்தவர்களாக இருக்கவேண்டும். பின்னை, கற்கண்டை விரும்பாதவர்கள் வேறு யார் இருக்க முடியும்?

எடுத்த கற்கண்டை வாயில் போட்டுத் தாடையில் அடக்கிக்கொண்டு தன் அரட்டைப் பேச்சைத் தொடர்ந்தான் அண்ணாமலை. 'ஏதாவது மூளை இருக்கிறதா பாருங்கள். தெற்குப்பார்த்த வீடு இது. தெருவாசலுக்கு நேரே தெருவைப் பார்த்தாற்போல் பெண்ணையும் மாப்பிள்ளையையும் உட்கார வைத்திருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்? தெருவிலிருந்து உள்ளே நுழையும்போதே மணமக்களின் முகங்களைப் பார்த்துக்கொண்டே உள்ளே வரலாம். அது எத்தனை அழகாயிருந்திருக்கும்? இந்த ஆட்களுக்கு அழகு உணர்ச்சியென்பதே மருந்துக்குக்கூடக்கிடைக்காதுபோலிருக்கிறது. மணமக்களின் பிட்டங்களை தெருவிலிருந்து வரும்போதே சேவித்துக் கொண்டே உள்ளே வரும்படி கிழக்கே பார்த்து உட்காரவைத்திருக்கிறார்கள்என்று அளந்தான். 'இவ்வளவு இலேசா சொல்லி

823



விடுகிறாயடா அப்பா! நமது முன்னோர்கள் கண்ணை மூடிக் கொண்டா இப்படிச் செய்யும்படி திட்டஞ்செய்திருப்பார்கள்? அவர்களுக்கு, உனக்கிருக்கிற அழகு எண்ணம் இல்லாமலா போயிருக்கும்? ஏனடா அப்பா! பெரியவர்கள் செய்துவைத் துள்ள இந்தப் பழக்கங்களைக் கூசாமே இப்படியெல்லாம் பேசு கிறாய்?' என்று நடுக்கமான குரலில் இரக்கத்தோடு சொன்னார் அருகிலிருந்த ஒரு வயதானவர்.

அப்போதுதான் பேராசிரியர் ஒருவர் திருமணம் பார்க்க வந்து பக்கத்திலே உட்கார்ந்தார். அவர் பெரிய கல்லூரியிலே கணக்குப் பேராசிரியராக இருப்பவர் என்று அருகிலே இருந் தவர்கள் ஒருவருக்கொருவர் முணுமுணுத்துக்கொண்டார்கள். அண்ணாமலையின் பேச்சுக்கு வருத்தப்பட்டுச் சொல்லிக் கொண்டிருந்த வயதானவருக்கு, இப்பேராசிரியரைக் கண்ட தும் ஒருவகை மகிழ்ச்சி அவரது முகத்திலே மலர்ந்தது. முன்னமே இந்த ஆசிரியரை அவர் அறிந்திருக்கிறார். எனவே தைரியத்துடன் அவரைப் பார்த்துக் கேட்கத் தொடங்கினார் அந்தப் பெரியவர். 'ஐயா! நீங்கள்தான் சொல்லவேண்டும். இந்தப் பிள்ளையாண்டானைப் பாருங்கள்! இதோ உட்கார்ந்து கொண்டிருக்கிறானே இந்த அண்ணாமலையைத்தான். மண மக்களைக் கிழக்குநோக்கி உட்காரவைத்திருப்பதைக் கண்டிக் கிறான் இவன். மேற்கே பார்க்க அமர்த்தியிருக்கவேண்டும் என்கிறான். கிழக்குநோக்கி உட்காரவைக்கவேண்டும் என்ப தற்குக் காரணம் இல்லாமலா நமது பெரியவர்கள் இப்படிச் செய்யவேண்டும் என்ற பழக்கத்தை வைத்திருப்பார்கள். அவர்களுக்குத் தெரியாததா இவனுக்குத் தெரிந்துவிட்டிருக் கிறது. இந்தக்காலத்துப் பிள்ளைகளே இப்படித்தான். நமது பழைய பழக்க வழக்கங்களிலே நம்பிக்கையேயில்லாமல் அவற்றை ஏசுகிறார்கள் என்று சொல்லி முடிப்பதற்குமுன்பே பேராசிரியர் பேசலானார்.

'பெரியவரே! தாங்கள் வருத்தப்படக்கூடாது. நமது பிள்ளைகள் நம்மைக்காட்டிலும் அறிவாளிகள் என்பதில் சிறிதே னும் ஐயமில்லை' என்று பேராசிரியர் சொல்லத் தொடங்கிய துமே, பெரியவருக்கு, 'இதென்னடா இது, கிணறுவெட்டப் போய்ப் பூதம் புறப்பட்ட கதையாக இருக்கிறதே' என்று கவலைப்படலானார். ஆனால் அண்ணாமலையும் அவரைப்போல

மனம் படைத்த அவனது நண்பர்களும் 'அப்படிச் சொல்லுங்கள் ஐயா! அப்படிச் சொல்லுங்கள்' என்று ஆரவாரித்தனர். பெரியவரது முகம் மேலும் சுண்டிவிட்டது. 'காலம் கலிகாலமாகப் போச்சு!' என்று முணுமுணுத்துக்கொண்டார். இங்கு இருந்தால் மேற்கொண்டும் ஏதாவது ஏசத் தொடங்குவார்கள் என்று கருதி, நகர்ந்துவிடுவதற்காக மெல்ல எழுந்தார். அண்ணுமலைக் குழுவினர் கேலிச் சிரிப்பு சிரித்தனர்.

இந்தநிலையில் பேராசிரியர் பெரியவரது கையைப் பிடித்து, 'உட்காரும் ஐயா, பெரியவரே! உட்காரும் போகலாம்' என்று சொன்னுர். பேராசிரியர் என்ன, சிறுபிள்ளைகளுக்கு மேலே கிண்டல்காரராக இருப்பார்போலிருக்கிறதே! எவ்வளவோ படித்தும் அறிவு திருந்தக்காணேமே, என்று பெரியவர் எண்ணினுர். என்றுலும் மறுக்கமுடியாமல் மீளவும் பேராசிரியரின் பக்கத்தில் உட்கார்ந்தார். பிள்ளைகள் பேராசிரியரைப் பெரிதும் பாராட்டியவர்களாய் அவரைச் சூழ்ந்துகொண்டனர். அங்குப் பெரியவரும் கூடே இருப்பதால் மேற்கொண்டும் ஏதாவது கிண்டல் செய்துகொண்டிருக்கலாம் என்று எண்ணினுர்கள்.

பிள்ளைகள் தம்மீது அன்புவைத்துத் தம்மைச் சூழ்ந்துகொண்டதையறிந்ததும், இதுதான் தக்க சமயம் உண்மையை விளக்க என்று நினைத்தார் பேராசிரியர். 'நேற்று என் வகுப்பிலே உலகத்தின் சுழற்சியைப்பற்றிப் பிள்ளைகளுக்குச் சொன்னேன்', என்று கதை சொல்பவர்போலத் துவங்கினுர். பிள்ளைகள் புதுவகையான கதை கேட்பவர்கள் போல அவரவர்கள் காதுகளைத் தீட்டிக்கொண்டனர். 'உலகமானது தன்னைத் தானே சுற்றிவருவது எப்படித் தெரியுமா?' என்று, திருமண வீட்டிலேயே வகுப்பு நடத்துவதுபோலப் பிள்ளைகளைப் பேராசிரியர் கேட்கலானுர். 'எப்படி ஐயா? எப்படி ஐயா?' என்று பிள்ளைகள் வாய்விட்டு வினுவவில்லையேதவிர, அவர்கள் அனைவரது முக நோக்கும் அப்படி வினுவுவது போலவே இருந்தது. மேலே விளக்கிச் சொன்னுர் பேராசிரியர்.

உலகம் கிழக்கு நோக்கியே தன்னைத்தானே சுற்றிவருகிறது என்பதை நீங்கள் எல்லோரும் அறிந்திருக்கவேண்டும். கிழக்கே ஞாயிறு உதிக்கிருன் என்பது உங்களுக்குத் தெரியும். அப்படிச்

சூரியன் கிழக்கில் தோன்றுகிறன் என்று நாம் நினைப்பது உலகம் கிழக்கு நோக்கிச் சுற்றுவதால்தான். உண்மையில் ஞாயிறு காலையில் கிழக்கே உதித்து மேற்கே மறையவில்லை. அது நிலையாகவே இருக்கிறது. உலகம் தன்னைத்தானே சுற்றி வருவதாலேயே சூரியனின் தோற்றமும் மறைவும். அந்த இரண்டு செயல்களால் பகலும் இரவும், உண்டாகின்றன. அப்படி உலகம் கிழக்குநோக்கிச் சுற்றுவதனுல், அந்த உலக மாகிய பெரிய வண்டியில் ஏறிக்கொண்டிருக்கும் நாம், கிழக்கு நோக்கி அமர்வோமானுல் வண்டி ஓடுகின்றதிசையை நோக்கி உட்கார்ந்தவர்களாவோம். ஒரு வண்டி ஓடும்போது, அதில் உட்கார்ந்திருக்கும் நாம் அவ்வண்டி ஓடும் திசையைப்பார்த்தே அமர்ந்திருந்தால்தான் இயல்பாக இருக்கும். உடம்புக்கும் நல்லது. வண்டி ஓடுகின்ற திசைக்கு எதிர்ப்பக்கமாக உட் கார்ந்தால் அது இயற்கைக்கு மாறு ஆகும். எனவே உடம் புக்கும் நல்லதல்ல. நீங்கள் வண்டியில் செல்லும்போது வண்டி போகும் பக்கம் பார்த்துத்தானே உட்காருவீர்கள்?

‘ஆமாம் ஆமாம். வண்டி போகும் திசைக்கு எதிர்திசை யைப் பார்த்தாற்போல எவராவது உட்காருவார்களா? உட் கார்ந்தால் மயக்கமாக இருக்காதா?’ என்ற குரல் பிள்ளை களிடையேயிருந்து வந்தது. அதே விதிதான் உலக வண்டியில் போகும்போதும். நாம் எப்போதும் கிழக்குநோக்கி இருக்க முடியாது. ஆனுல் சிறப்பான செயல்கள் செய்யும்போது கிழக்கு நோக்கியே அமரவேண்டும் என்பது நமது முன்னேர் செய்துவைத்த நல்ல வழக்கம். திருமணம் ஒரு சிறந்த நிகழ்ச்சி அல்லவா? எனவே, திருமணம் செய்துகொள்ளும் மணமக்கள் மண அறையில் - மணையில் உட்காரும்போது கிழக்குநோக்கி அமர்வதே இயற்கைக்குப் பொருத்தமான செயலாகும்.

இவ்வாறு பேராசிரியர் விளக்கினதும் பெரியவரது முகத் தைப் பார்க்கவேண்டுமே! வாயெல்லாம் பல்தான். உடைந்த பல்லும் உடையாத பல்லுமாக, விழுந்த பல் போக நின்ற பற்கள் அனைத்தும் வெளியே தெரிந்தன. ஆனுல் பிள்ளைகளில் எவனும் வாயைத் திறக்கவில்லை. அண்ணுமலை மெல்ல நழுவி விட்டான். ‘இதென்னடா இது. எப்படியோ தொடங்கி எப்படியோ கொண்டுபோய் முடித்துவிட்டாரே பேராசிரியர்’

876



என்று எண்ணினார்கள். அப்படி எண்ணினாலும், கிழக்கே நோக்கி உட்காருவதின் நன்மை அவர்களுக்கு விளங்காமல் இல்லை. எந்த நல்ல செயல் செய்வதானாலும், எவர் அச் செயலைச் செய்வதானாலும், கிழக்கே பார்த்தபடி அமர்ந்து செய்யவேண்டும்என்பதை அவர்கள் நன்றாகஉணர்ந்துகொண்டார்கள். அவர்கள் இதுவரை இறுகப்பற்றிக்கொண்டிருந்த அறியாமையை ஒரு கும்பிடு போட்டுப் போய்வரச்சொன்னார்

இதற்குள் மணமக்களை எழுப்பிவிட்டார்கள். இலை போட ஆயத்தமாயிற்று; பந்திக்கு முந்திக்கொள்ள அனைவரும் விரைந்தார்கள்.

---

## தமிழிசைப் பாடல்

**திரு. க. சொக்கலிங்க ஓதுவார் அவர்கள்**

தேவார ஆசிரியர், வைத்தீசுவரன்கோயில்.

இராகம் – கேதாரகௌளை] [தாளம் - ஆதி

பல்லவி

ஜெயமே இனிநமக்கு பயமே இல்லையென்று
திண்ணமாய் அறிவோமே. (ஜெ)

அனுபல்லவி

இயலிசை நாடகம் என்னுமூ வகையுள்ள
இனிய தமிழ்மொழி என்பது இருக்க (ஜெ)

சரணம்

முதற்சங்க காலத்தும் முன்னுள்ள முதல்மொழி
முக்கணன் முருகன் மொழியும்இத் தமிழ்மொழி
எதற்கும் அஞ்சாது எதிர்நிற்கும் இம்மொழி
இதுவே யாவர்க்கும் பொதுவாய இன்மொழி. (ஜெ)

877



# காலப்போக்கு.

வித்துவான், திரு. த பொ. தண்டபாணி பி.ஏ., அவர்கள்
புதுவை.

மனித இனம் பூராவும் அந்த நோயால் கஷ்டப்படுகிறது. மகான்களும் பெரியார்களும் அவ்வப்போது தோன்றிக் கூறுவன எல்லாம் உடனுக்குடன் குழிதோண்டிப் புதைத்துவிடும் பெருமை மனிதஇனத்தைச்சார்ந்த நமக்கன்றி வேறு எவைக்கும் இல்லை. இத்தகைய நோய்க்கு மருந்தளித்த பெரியார்களுள் ஒருவர்தான் நமது "துறைமங்கலம் - சிவப்பிரகாச சுவாமிகள்". இவரை நமக்கு நன்ருகத் தெரியும். தமிழன் அபிமானி இலக்கிய இலக்கணக் கடல்களைக் கடைந்தெடுத்த அறிஞர். சுமார் 400 ஆண்டுகட்கு முன்னர்த் தென்னிந்தியாவில் பெருஞ் சிறப்புடன் வீற்றிருந்த தமிழ்ப் புலிகேசி பெருஞ் சித்திகளுடன் எண்ணிறந்த தொண்டாற்றிய உத்தமர். அவர் அருளிய நூல்கள் எண்ணில. அவற்றுள் ஒன்று "சோண சைல மாலை" என்பது. அது 100 பாட்டுக்களை உடையது. அங்கே ஓர் பாட்டில் தமது முழு ஆவலைத் தெரிவித்திருக்கிருர். என்ன அது? இறைவனிடத்தில் வேண்டிக் கொள்ளும்போது ஒவ்வொருவரும் அவரவர்க்குப் பிடித்தமானவற்றைக் கொடுத்தருளும்படி கேட்டுக் கொள்ளுதல்தான் இயற்கை. ஒரே மாதிரியாகக் கேட்டுக் கொள்ளுதல் என்பது அசாத்தியம். அதற்குச் சான்ருகத் துறைமங்கலம் சிவப்பிரகாசரும் இனிய தமிழில் இறைவனைப்பாடும் புண்ணியம் நிறைந்த மனிதப் பிறவியே வேண்டும் என்பதைப் பிடிவாதமாகக் கூறுகிருர். அமரலோகம் வேண்டுவோர் வேண்டுக. ஆனால் தனக்குத் தமிழில் இறைவனைப்பாடும் இப்பூலோக வாழ்வே வேண்டும். என்று வற்புறுத்துகிருர். அந்த அடிகளாவன:-

"விரைவிடை இவரும் நினைப் பிறவாமை
வேண்டுநர் வேண்டுக; மதுரம்
பெருகுறு தமிழ்ச் சொன் மலர் நினக்கணியும்
பிறவியே வேண்டுவன் தமியேன்".

 878

எனவே, காலத்தின் வேகமானது நமது மனவேகத்தை அடியோடு மாற்றிவிட்டதென்றே தோன்றுகிறது. இயல்பில் நாம் தீயவர்கள் அல்லேம். நல்லதைப் பகுத்தறிந்தும் அவற்றில் பிரவேசிக்குந் தீவிர ஆசை இல்லாமற் போவதற்குக் காரணம் நமது தலை எழுத்தென்ருல் பலருக்குக் கோபம் உண்டாகும். அதனுல்தான்'காலப்போக்கு'என்றதலைப்பின்கீழ் கூறலானேன். நமது முன்னேர்களின் தெய்விக சந்ததியில் தோன்றியுள்ள நமக்கு, இந்தக் காலத்தில், நமது மனப்பழக்கத்தில் ஒழுக்கமும், அமைதியும், அறிவும், ஆற்றலும், செழிப்பும், சிறப்பும், பேரும், பெருவாழ்வும் கிடைக்கவில்லையானல், அது நம்முடைய குறையா? இங்கே சோம்பேறிகளை மனத்தில் வைத்துக் கூறவில்லை. "தெய்வத்தான் ஆகாதெனினும், முயற்சிதன் மெய் வருத்தக்கூலிதரும்" என்ற வாக்குக்கிணங்க உழைக்கும் உத்தமர்களைக் கருதியே மேற்போந்தவாறு கூறுகின்றேன்.

நாம் விஞ்ஞான அறிவில் தலைசிறந்தவர்கள் அல்லவா? அணுவை ஆராய்ந்து அதன் பயனை நுகர்கின்ருேம் அல்லவா? அவ்வாறு ஒரு வகையில் நமது விஞ்ஞான வாழ்வு நம்மை உயர்த்தினும் மகா ஆங்காரச் செயல்களான பொய், சூது, பொருமை, ஏமாற்றல், கவர்தல், முதலிய பல தீக்குணங்கள் தொழிற்பட ஆரம்பித்துவிட்டன. அவைகளின் ஆற்றலை நாம் சகிக்க முடியாது நாள்தோறும் மெலிகிருேம். அதனுல்தான் நாம் நல்லவர்களாக எண்ணிப்பதற்கியலவில்லை. இதுவும் திருவருள் சோதனை போலும்! காலப்புரட்சியின் கொடுமையை யாரே அகற்றவல்லார்? சிலர் இதனை 'நவீனப் புரட்சி' என்கின்றனர். எவ்வாறேனும், அதனுல் முற்றிலும் தாக்கப்பட்டவர்களையே, அதாவது அவ்வறட்சியினை நல்லதென்று சொல்லிக்கொண்டு செயலாற்றுபவர்களையே நாம் ஒரு குறியீட்டால் அழைக்கிருேம். அவர்கள் இழைக்கும் கொடுமைகளைத் தடுக்கவேண்டின் 'மெய்யறிவு' தலைப்படல் வேண்டும் எப்படிப்பட்ட 'மெய்யறிவு' என்பதை அடியிற்கண்ட பாட்டு எடுத்துக்காட்டும்.

> " வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்
> வஞ்சித்தோம் என்று மகிழன்மின் – வஞ்சித்து
> எங்குமுளன் ஒருவன் காணுங் கொல்? என்றஞ்சி
> அங்கம் குலைவ தறிவு."

---

879

தொடர்கதை

# மாசில் வீணை

வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள்

தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

சென்ற இதழில்: பிறைசூடியாரும் பெண்வடிவில் இளவரசன் பாரியும் பூங்காட்டு மண்டபத்துக்கு வந்து மல்லிகையோடு உரையாடிக்கொண்டிருந்தார்கள்; அப்போது குதிரையின்மேல் யாரோ வருவது தெரிந்தது..........

வந்தது வேறுயாருமில்லை. அரசியல் காரியமாக வெளியூர் சென்றிருந்த நிலாமுடியன்தான் வந்துகொண்டிருந்தான். குதிரை வாயிலிருந்து நுரை பொங்கிக் கசிந்தது. குடிசைக்கு அருகில் வந்து குதித்த நிலாமுடியன் 'அடேடே புலவர் ஐயாவா! வரணும்... ' என்று மலர்ந்த முகத்தோடு கைகூப்பி வணங்கினான்.

'வாழ்க! நிலாமுடியா! அரசியல் காரியம் முடிந்து விட்டதா என்ன?

'அது எப்படிப் புலவர் ஐயா முடியும்? இன்னும் இருக்கிறது!... அதுசரி .. இளவரசர் இளவரசி எல்லாம் நலமாக இருக்கிறார்களா? திருக்குற்றாலம் போனது என்னமோ நேற்றுப் போனதுபோல் இருக்கிறது. பார்க்கப்போனால் ஐந்தாறு மாதம் கடந்துவிட்டிருக்கிறதே. இல்லை புலவரே!, நிலாமுடியனின் பேச்சில் விரைவு இருந்தது.

'ஆமாம் அப்பா!' எல்லோரும் நலமாக இருக்கிறார்கள். இளவரசிக்குத்தான் மல்லிகை இல்லாமல் பொழுதே போகவில்லை.

'அடேயப்பா!', மல்லிகையின் கண்கள்தான் மாயவித்தை செய்பவையாயிற்றே!...அது இருக்கட்டும்... இந்தப்பெண்...?, நிலாமுடியனின் வியப்பு வளர்ந்தது.

'என் தங்கை பெண். மதுரையிலிருந்து வந்திருக்கிறாள்'. இப்போது மல்லிகை உள்ளேயிருந்து வந்தாள்.

‘ அத்தான்! அதற்குள்ளாக வந்துவிட்டீர்களா ?’

‘மல்லிகை! வரவேற்பு இருக்கட்டும்; புலவர் ஐயாவைச் சாப்பிடச் சொன்னுயா ?’ என்று கேட்டான் நிலாமுடியன்.

‘மல்லிகையின் உபசாரத்துக்கு மீறமுடியவில்லை......... அப்போது நாங்கள் வருகிறோம்; மல்லிகை, — என்று கூறி விட்டுப் புறப்பட்டார் புலவர் பிறைசூடியார்.

* * *

பிரான்மலைக்கு மூன்றுகாதத்தில் இருந்த ஐயனுர் கோவில். இடிந்த சுவர்களுக்கப்பால் படித்துறையை ஒட்டியிருந்த மேடையில் இளவரசனும், புலவரும் அமர்ந்து இளைப்பாறினர்.

‘நல்லவேளை! தந்தப்பேழை மன்னன் கண்ணிற் பட்டிருந்தால் என்னுவது ?’

‘இளவரசே! பறம்புநாட்டு அரசுரிமைச் சொத்து பறம்பு மண்ணோடு உரிமை பெற்றது! அதைப் பிரிக்க யாராலும் முடியாது. அது திருவருள் தொடர்பு!’

‘இருந்தாலும் எனக்கொரு ஐயம் இருந்தது; அந்த ஐயம் இப்போது...... ?

‘நீங்கிவிட்டது, இல்லையா ?’

‘ஆனுல், நிலா முடியனின் நேர்மை...... ?

‘இளவரசே! நிலாமுடியன் பறம்புநாட்டு உப்பைத்தின்று வரும் பரம்பரையில் வந்தவன். அவனைப் பற்றிச் சந்தேகத் துக்கே இடமில்லை ’

‘புலவரே! இப்படி எத்தனை நாள்தாம் பொறுத்திருப்பது? நான் இப்போதே புறப்படுகிறேன். உக்கிரப்பெருவழுதியை - மண்ணுசை பிடித்த அம்மமதைக்காரனை இப்போதே மண் ணோடு மண்ணுக்குகிறேன். என் தந்தையாரின் வீர உரை என்னுவது ? வஞ்சினம் எங்கிலை அடைவது ?’ பாரியின் கண்களில் கனல் வீசியது.

‘இளவரசே! விரைவு வேண்டாம், இன்னும் கொஞ்சநாள் பொறுத்திருங்கள் !’

'கொஞ்சநாள்!...... கொஞ்சநாள்! எத்தனை முறைதாம் இப்படி? புலவரே! பொறுத்ததெல்லாம் போதும்...... இனி என் பொறுமை?'

'இளவரசே! இது என் இறுதியான வேண்டுகோள். இன்னும் இரண்டுதிங்கள் பொறுப்போம்; அதற்குப்பின் நானே முன்னின்று போராடி வெற்றி விளைக்கிறேன்....... கானப் பேரெயில்வரை சென்று சில திட்டங்கள் நிறைவேற்ற வேண்டி யிருக்கிறது, புலவரின் குரலில் கண்டிப்பு இருந்தது. என்று மில்லாத பெருமிதம் அவர் குரலில் புகுந்து ஒளிர்ந்தது.

'என்ன கானப்பேரெயிலா? அங்கு யாரைத்தெரியும் உங்களுக்கு?...... அதன் அரசர்கூட ......' பாரியின் வியப்பு தொடர்ந்தது. ஆனால் புலவர் எங்கோ பார்த்திருந்தார்.

'வேங்கை மார்பன் என்பவர்தாம் காணப்பேரெயில் மன்னர் என்று தந்தையார் சொல்லக் கேட்டிருக்கிறேன். புலவரே? மன்னரை அறிவீர்களா நீங்கள்?'

புலவரின் உள்ளம் இளவரசனின் அடுக்கடுக்கான வினாக் களுக்கு விடை சொல்லத் திணறியிருக்கவேண்டும்.

'யார்..... வேங்கை மார்பனா..... தெ...ரியும்! நன்...ருகத் தெரியும்; எனக்குத் தனிப்பட்ட முறையில் அவரோடு பழக்கம் உண்டு!.

'உக்கிரப் பெருவழுதியின் ஆட்சி அங்கு பரவிய பிறகு கப்பம் கட்டி அடிமையாய் வாழ மனமின்றித் தலைமறைவாக எங்கோ வாழ்கின்றார் என்றும் கேள்விப்பட்டிருக்கின்றேன் புலவரே!'

'ஆம்; இளவரசே! அப்படித்தான் நானும் கேள்விப்படு கிறேன்...... அதுசரி! பொழுது வரவர விரைகிறதே? நாம் இப்போதே திருக்குற்றாலத்துக்குப் புறப்படலாம்; இல்லையா? தங்கள் தந்தப் பேழை பற்றிய ஐயம் தவிர்ந்துவிட்டதல்லவா?'

'ஓ! தெளிவாக! பொன்னி என்னவோ ஏதோ என்று கவலைப்பட்டுக்கொண்டிருப்பாள்!'

அடுத்த சில கணங்களில் ஐயனுர் கோவிலை விட்டு இரண்டு வெண்குதிரைகள் பிரான்மலைப் பாதையை அடுத்த ஒற்றையடிப் பாதையில் விரைந்தன.

பதினுன்காம் அத்தியாயம்

## "உதவி கிடைக்குமா?"

பொன்முடியைத் தூக்கிக்கொண்டு சந்தனத்தேவன் குதிரைமேல் பாய்ந்து கருவூர்ப்பக்கத்துக்குச் சாலையில் சிட்டாய்ப் பறந்து சென்றுன் என்று அறிந்த அன்பர்களை இப் போது கருவூரை யடுத்த காட்டுப் பகுதிக்கு அழைத்து வருகிருேம்.

அந்தக்காட்டுப்பகுதி சந்தனத்தேவனின் கைக்கூலிகள் வாழும் இடம்; செறிந்தகாடு; மக்கள் நடமாட்டமில்லாத நிலம். அங்கே ஒரு பயங்கரப் பட்டாளம் வாழ்ந்துவந்தது. தோற்றத் தில் விகாரமான பல கோரமான பேர்வழிகள் அங்கிருந்தனர். சந்தனத்தேவனின் அடிமைகள். கருவூர்க் கானகத்தை யடுத்த சாலைப்பக்கம் வரும் வழிப்போக்கர்களைக் கொள்ளை யடித்து வருவாய் சேர்ப்பது அவர்கள் வாணிகம்.

எதிர்பாராத விதமாக தங்கள் தலைவன் சந்தனத்தேவன் அன்று வந்தடைந்தது அவர்களுக்கு வியப்பாக இருந்தது. வந்து சூழ்ந்துகொண்டு வாழ்க வாழ்க என்று முழக்கினுர்கள். பொன்முடிக்கு உணர்ச்சியே இல்லை. பூங்கொடிபோலத் துவண்டுவிட்டாள் அவள்.

'சொக்கீ! இந்தப் பெண்ணை அந்த நிலவறைக்குக் கொண்டுபோ' என்று பணிப்பெண்ணுக்கு ஆணை பிறப்பித்து விட்டு வீரர்களோடு உரையாடச் சென்றுவிட்டான் சந்தனத் தேவன்.

பொன்முடிக்கு ஒதுக்கப்பட்ட அந்த நிலவறை மிகக் குறுகலானது. காற்ருேட்டத்துக்குத்தக்க சாளரங்களே இல்லை. அறையுள் சிறு மேடை ஒன்று இருந்தது. மேடைக்கு அப்பால் சுவரில் கத்திகளும் ஈட்டிகளும் வேல்களும் காட்சியளித்தன.

ஒரு மூலையில் அஞ்சத்தக்கதான ஒரு புலியின் சிலையுருவம் பயங்கரமாக அமைக்கப் பெற்றிருந்தது. அதன் விழிகள் அப்பப்பா! எவ்வளவு கோரம், மேடையின்மேல் விரிக்கப் பெற்ற மான்தோல்மேல் கிடந்தாள் பொன்முடி. அவள் விழிகள் மூடியிருந்தன. நெற்றியின்மேல் கூந்தல் கலைந்து விழுந்து இருந்தது. மார்பு அச்சத்தால் விம்மிவிம்மித் தணிந்தது.

அவளுக்கு எங்கிருக்கிறோம்? எவ்வண்ணம் இருக்கிறோம் என்றே உணரும் திறம் இல்லை. அப்படியே கை கால்கள் அசையாமல் கிடந்தாள்.

அப்போது-

சொக்கி- அந்த பணிப்பெண் கையில் ஏதோ சிறு உணவு கொண்டு அங்குவந்தாள்.

'அம்மா!'

பொன்முடியின் விழிகள் திறக்கவில்லை.

அருகில் அமர்ந்து அன்பாக அவள் தலையை வருடினாள் சொக்கி. அவளைப்பார்த்தால் கொடியவளாக ஒன்றும் தோன்ற வில்லை.

'கண்ணைத் திறவுங்கள் அம்மா!' கனிவாக இழைந்தது அவள் குரல்.

பொன்முடியின் இமைகள் இலேசாக விரிந்தன.

'ஆ! நீயார்? நான் எங்கிருக்கிறேன்! அத்தான்! அத்தான்! காவிரிக்கரை...... திருச்சிராப்பள்ளி!......காவிரிக்கரை' என்று அவள் வாய் முணுமுணுத்தது.

'அம்மா! நீ பாதுகாப்பான இடத்தில்தான் இருக்கிறாய்! களைப்பாய் இருக்கிறாய். கண்ணைத்திற! இக்கஞ்சியைக் கொஞ்சம் குடியம்மா! நான்சொல்வதைக் கேள்; எங்கே எழுந்திரு!'

884



சொக்கியின் விழிகளில் இழைந்த அன்பும் கனிவும் பொன்முடியின் நெஞ்சைத் தொட்டன. மெல்ல அவள் கைத்தாங்கலோடு எழுந்தாள்.. அவள் நேற்றுமாலை நிகழ்ந்த நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்க்கத் தொடங்கினாள்! அந்தப் பேயன் ஒருவன் தன்னை வற்புறுத்திக் குதிரைமேல் இழுத்துக் கொணர்ந்த செய்தியை எண்ண எண்ண அவள் உள்ளம் குமுறியது! 'குபு குபு' என்று கண்ணீர்த்துளிகள் அவள் விழி களிலிருந்து பெருக்கெடுத்தன.

'வருந்தாதேயம்மா! சந்தனத்தேவர் உன்னைக் களவாடிக் கொண்டுவந்திருக்கிறார்! நானும் உன்னைப்போல்தான்! ஆண்டவனை நம்பு! ஏதாகிலும் வழிபிறக்கும்! திருவருள் தீமைகளை வாழவிடாது! திடமாக நம்பு எழுந்திரம்மா...இதைக்குடி!'

சொக்கியின் உள்ளமார்ந்த பேச்சு பொன்முடிக்கு ஆறுதலாக இருந்தது. மெல்ல எழுந்து உட்கார்ந்து கொண்டாள். சொக்கி குவளையிலிருந்த கஞ்சியைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குடிக்கவைத்தாள்.

சற்றைக்கெல்லாம் பொன்முடியைக் கேட்டு அவளைப் பற்றிய செய்திகளையெல்லாம் தெரிந்துகொண்டாள் சொக்கி. அவள் உள்ளம் ஏனோ பொன்முடியோடு இணைந்தது.

'பொன்முடி! என்னை நம்பு; எப்பாடுபட்டாகிலும் உன்னை உன் கணவனிடம் - மருதநம்பியிடம் சேர்ப்பது என் கடமை' என்று உணர்ச்சியோடு கூறினாள் அவள்.

சொக்கியின் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டு சிறுபிள்ளையைப் போல் தேம்பினாள் பொன்முடி. ஆம்; சந்தனத் தேவனின் கையகப்பட்ட மலருக்கு நறுமணம் வீச உரிமை ஏது? கருகி உதிர்வதற்குத்தானே உரிமை!

* * *

சந்தனத்தேவனின் வற்புறுத்தலுக்குச் சற்றும் இணங்கவில்லை பொன்முடி. அதற்குமாறாக அவனை வசைமாரி பொழிந்தாள். உள்ளங்கொண்டமட்டும் எதிர்த்து அரவெனச் சீறினாள்.

'சொக்கி! இவளைத் திருத்தி எனக்குரியவளாக்குவது உன் பொறுப்பு' என்று ஆணையிட்டுவிட்டுத் தக்க பாதுகாப்புக்கும் வழிசெய்து சந்தனத்தேவன் மதுரையைநோக்கிப் புறப்பட்டான்.

அப்போதுதான், ஒருநாள் இரவு:-

கருவூரிலிருந்து திருச்சிராப்பள்ளி வரும் பாதையில், காவிரிக்கரையை ஒட்டி ஒரு குதிரை விரைவாகச் சென்று கொண்டிருந்தது. அந்த இளைஞன் யார்? அவன்முகம் - அதன் பேரெழில் நாம் முன் எங்கோ பார்த்ததுபோல் இருக்கிறதே? ஆம்; உண்மைதான் அவனைக் கருவூர்க் காட்டிலே பார்த்தது நாம். இப்படி அல்ல; பெண்வடிவில்! அவ்விளைஞன் சொக்கி தான்! பிரான்மலையை நோக்கிக் குதிரை வேகத்தோடு போட்டி யிட்டு ஓடியது அவள் உள்ளம்! ஆகா எவ்வளவு திறமையாகக் குதிரையை அவள் செலுத்துகிருள்! பொழுது புலர்வதற் குள்ளாகப் பிரான் மலையைச் சார்ந்துவிடவேண்டும் என்பது அவள் நம்பிக்கை!

* * *

பூங்காட்டு மண்டபத்துக்கு வழிவிசாரித்துக் கொண்டு சென்ற சொக்கிக்கு அங்கே பெரிய ஏமாற்றந்தான் காத்திருந் தது. நிலாமுடியனின் குடிசைக்கு முன்பு வந்து அவள் நின்ற போது, குடிசையின் கதவு சார்த்தப்பட்டிருந்ததோடன்றிப் பூட்டப்பட்டிருந்தது. சொக்கிக்கு நல்ல களைப்பு; இருப்பினும் என்ன? ஓய்வு ஏது அவளுக்கு?

பொன்முடி தன் தந்தை நல்லான் காவிரிப்பூம்பட்டினத் தில் இருப்பதாகக் கூறிய செய்தி இப்போது அவள் நினைப்புக்கு வந்தது.

பூம்புகாரை நோக்கிப் புறப்பட்டாள் சொக்கி. தந்தை நல்லானைக் காணலாம்; பொன்முடியின் விடுதலைக்கு வழி தேடலாம் என்று எண்ணம் அவளுக்கு. ஆனல் எண்ணியபடி எங்குதான் நடக்கிறது? அப்படி நடந்துவிட்டால்தான் இந்த உலகம், இயக்கம் எல்லாம் ஏது? சொக்கியின் நினைப்பும் அந்த இயற்கை விதிக்கு மாறுபடுமா என்ன?

(தொடரும்)

886



# சுற்றம் தழால்

வித்துவான், திருமதி, சிவ, மீனுட்சிசுந்தரசிவை அவர்கள்
சென்னை.

காக்கைகள் தமக்கு என வைக்கப்பட்ட உணவு யாதாயினும் அதை கண்டால், மறைக்காது மற்றக் காக்கைகளையும் கூவியழைத்து உறவாடி கலந்து உண்ணும். அதுபோல் தாம் உண்பனவெல்லாம் தம் சுற்றத்தவரும் உண்ணும்படி நினைக்கின்ற தன்மையுடைய மக்களுக்கு அறமும், பொருளும், இன்பமும் உண்டாகும் என்பது தெய்வப்புலவர் அருள்மொழி.

> " காக்கை கரவா கரைந்து உண்ணும் ஆக்கமும்
> அன்ன நீரார்க்கே உள "

சுற்றந் தழுவுதல் இருவகைப்படும். ஒன்று தன்னலங்கருதித் தழுவுதல்; மற்றொன்று பிறர் நலங்கருதிச் செய்தல். சுற்றத்தவர்களுடன் இன்மொழிபேசி, அவர்கட்கு வேண்டுவனவற்றைக் கொடுத்து, நமக்குத் துணைவர்களாக ஆக்கிக்கொண்டால், அவர்கள் துணையினாலே நமக்கு ஆவனவற்றை எளிதின் முடித்துக்கொள்ளலாம். பிறரும் நம்மோடு பகை கொள்ள மாட்டார்கள்.

சுற்றத்தவரால் நமக்குக் கிடைக்கும் இப்பயன்களைக்கருதி அவர்களைத் தழுவிக்கொள்ளுதல் தன்னலங் கருதுதலாகும். இவ்வாறு தன்னலங்கருதிச் சுற்றத்தைத் தழுவுதலால் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றில் நடுநின்ற செல்வம் உண்டாகும்.

இனிச் சுற்றத்தாரை அவர் நலங்கருதித் தழுவுதல் என்பது, 'நாம் அடையும் இவ் இன்பத்தை நம்மைச் சூழ்ந்து நிற்பவர்களும் அடையவேண்டும்' என்று அவர் நலமொன்றே கருதி அவரைத் தழுவுவது. இக்காக்கையின் தன்மையை உவமைப் படுத்தி நம் தாயுமானப் பெருந்தகையார்

" காகம் உறவு கலந்து உண்ணக் கண்டீர்! அகண்டாகாரசிவ
போகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏகவுருவாய்க் கிடக்குது ஐயோ! இன்புற்றிட நாம் இனி எடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே."

என்று திருவாய் மலர்ந்திருக்கின்ருர்.

இங்ஙனம் சுற்றத்தாரை அவர் நலங்கருதித் தழுவுதல் அறச் செய்கையாகும். பிறர் நலங்கருதிச் சுற்றந் தழுவுதலால் அறமும், அதன் வாயிலாக இன்பமும் உண்டாகின்றன.

பிறர் நலங்கருதிச் சுற்றத்தாரைத் தழுவி இன்பம் பெறுதலே உயர்வானது. தன்னலங் கருதித் தழுவிக் கொள்ளுதலால் ஆக்கமும் பெறலாம் என்ற பொருளும் குறளில் ஒலிக்கிறது.

சுற்றத்தாரைத் தழுவுதல் இரண்டு வகைப்படுமாயினும், பொதுவாக அறமும், பொருளும், இன்பமும் அதனுல் வருதலால் அச்சுற்றந்தழாலில் வழுவாது நிற்க வேண்டும். ஒருவன் சுற்றத்தைத் தழுவினுல்தான் அவனுக்கு வரும் துன்பங்கட்கு அவர்கள் உதவி புரிவார்கள். இல்லையேல் புரியமாட்டார்கள்.

" அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடு இன்றி நீர் நிறைந்தற்று".

என்பது பொய்யாமொழி.

ஒரு குளம் நீர் நிரம்பித் தாங்குங் கரையின்றித் தத்தளிப்பது போல், சுற்றத்தவரோடு கலவாதவனும் வாழ்க்கையில் பொருளற்று அளவில்லாத இடுக்கண்களால் நிரம்பித் தாங்குவாரற்றுத் தத்தளிப்பான்.

இதனுல் காக்கையைப் பார்த்தேனும் நாமும் நம் சுற்றத்தாருடனும், மற்றவருடனும் ஒற்றுமையோடு வாழ்க்கை நடத்தி அறமுதலாகிய மூன்றினையும் அடைவோமாக.

888

# ஐயோ பாவம் பூனையே!

'கீராம்'

அண்ணூர் வீடு. மாடியில் தெருப்பக்கம் அறையில் படுத்திருந்தேன். இரவு மூன்றுமணி இருக்கும். பெரிய பித்தளை ஏனங்களைப் பரணியிலிருந்து சிமிட்டித் தரையில் போடும் ஒலி. அண்ணூர், அண்ணி, மருமகள், இருமகளிர் ஐவரும் சென்று பார்க்கின்றனர். ஒரு பூனை பால்செம்பில் தலையை மாட்டிவிட்டுக் கழற்ற முடியாமல் தவிக்கிறது. செம்பைத் தரையில் ஓங்கி ஓங்கி இடிக்கிறது. அந்தச் செம்பு அண்ணியின் மாமியார் தந்த செம்பு. அவரது நினைவாக வைத்துக்கொண்டிருந்தது. உடைந்து விட்டால் என்ன செய்வது என்ற கவலை. மருமகளுக்கு வீட்டில் பூனை இறந்து விட்டால், வீட்டுக்கு ஆகாதே என்ற கவலை. மகள் ஒரு உத்தி சொல்கிருள். கோணியைத் தூக்கிப் பூனையின்மேல் போட்டுப் பூனையைப் பிடித்துக்கொண்டுபோய் தெருவில் விட்டுவிடலாமே என்று. அங்கு உறங்கிக்கொண்டிருந்த சுந்தரி என்ற வேலைக்காரப்பெண், விழித்தவள் மகள் சொன்ன உத்தியைக் காதில் கேட்டாள். கதுமென எழுந்து அருகிலிருந்த கோணியையெடுத்துப் பூனைமேல் வீசினுள். பூனை வெருண்டு உயரக் குதித்துத் தலையைச் செம்போடு தரையில் மிக்க வேகத்தோடு இடித்தது. இடித்த வேகத்தில் செம்பு கழன்றுவிட்டது. பூனை ஓடிவிட்டது. எல்லோரும் மகிழ்ந்தனர்.

ஐயோ பாவம் பூனையே!
　　அகப்பட் டுக்கொண் டனையே!
செய்ய என்ன முடியுமோ?
　　செம்பின் வாயோ சின்னதே!
பால் குடிக்கப் பார்த்தையா!
　　பதைப்பாய்த் தலையைத் தூர்த்தையா?
கால் துடிக்கக் குதிக்கிருய்,
　　கனத்த செம்பை உடைக்கிருய்,
உயரக் கிளம்பி விழுகிருய்,
　　உயிர் விடவும் துணிகிருய்!

துயரக் கடலில் முழுகுருய்,
துடித்துத் துடித்து மடிகிருய்!
செம்பு கழன்ற பாடில்லை.
செறிவாய்த் தலையைப் பற்றுது!
செம்பும் சிமிட்டித் தரையுமாய்
சேமக்கலம் கொட்டுது!
மாடி வீட்டுத் தரையது,
மடித்த இரும்பும் சிமிட்டியும்
தேடிக் கோத்துச் செய்தது,
தெறிக்கும் ஒலியைக் கேட்கணும்?
விடியல் மூன்று மணியிலே
வீட்டில் 'கடாங்' 'கடாங்' என
இடியைப் போல ஒலியென்ருல்
இரும்பு உடைக்கும் தொனியென்ருல்
என்ன நடக்கும் அங்கென
எண்ணு வார்கள் அண்டையார்?
கன்னம் வைக்கும் ஒலியென
கருதி உன்னிப் பார்களோ?
தவலைச் செம்பும் குண்டானும்
தம்மில் சண்டை போடுதோ?
அவலை இடிப்பதானுலும்
அம்மா! இந்த ஒலியேது?
என்றெல்லாமும் நினைத்துமே,
என்ன ஆகும் பார்க்கலாம்
இன்று பொழுது விடியட்டும்
என்று எண்ணி இருப்பரோ?
தலையைச் செம்பு விடவில்லை
தவித்துப் போது பூனையும்
அலையும் மனத்தோ டிதுதனை
அருகிருந்து பார்க்கிருர்
அண்ணி எனது அம்மையார்
அருமை மருகி அருகிலே,
எண்ணி உருகி இரங்கிடும்
இரண்டு மகளார் இருபுறம்,
சற்று தொலைவில் என தண்ணர்,
சஞ்சலத்தோ டிவ ரெலாம்
உற்று நோக்கிப் பூனையின்
உயிரைக் காப்ப தெங்ஙனம்?
என நினைந்து நிற்கிருர்.
எனது அண்ணி சொல்கிருர்:

890

'மனமுவந்து எனது மாமி
	மருகி எனக்கு அளித்தது,
நல்ல செம்பு! இதுதனை
	நறுக்கிப் பூனை உடைக்குமோ?
நல்ல மாமி! நினைக்கிறேன்
	நாடி இதனைக் காக்கணும்'
என்று சொல்லி அண்ணியார்
	ஏத்தித் தனது மாமியை
கன்றி வணங்கித் துதிக்கையில்,
	கருத்து மிகுத்து மென்சொலால்
மருகி நெருங்கிக் கூறுவார்:
	'மாமி யம்மா! நம் இல்லில்
மருண்டு பூனை மாண்டிட்டால்
	மாண்பு குறையும் வீட்டுக்கு
என்று சொல்லு வார்களே
	என்ன செய்வோம் மாமியே?'
என்றிவ்வாறு இருவரும்
	ஏங்கிப் பேசும் இதுதனைக்
கேட்ட எனது அண்ணனுர்
	மாட்டித் தவிக்கும் பூனைபால்
நாட்டம் நின்று நகைசெய்தார்!
	'நம்மொழிக்கு நகைதானு!'
என நினைந்து அண்ணியும்
	ஏந்திழை நல் மருகியும்
மனதில் நின்று மௌனமாய்
	மாதவன் தாள் எண்ணினர்.
அன்பால் தம்தம் மாமிமார்
	ஆக்கித்தந்த சொத்துக்கு
துன்பம் என்ருல் மருகியர்
	துன்பங் கொள்ளா திருப்பரோ?
இந்த நேரம் இளையநல்
	இனிய மகளார் சொல்லுவார்:
'தொந்த ரவுதான் உங்கட்கேன்?
	எந்தன் அம்மா! அண்ணியே!
கோணி யொன்றைப் பூனைமேல்
	கொண்டு போட்டு மூடியே
பேணித் தெருவில் விடுங்களேன்
	பெறட்டும் தெருவு பாவத்தை,
மண்ணின் மேலே செம்பினை
	மருண்டு பூனைத் தாக்கினும்

திண்ண மாகச்செம்பு தான்
　　தெருமண் தாக்கால் உடையாது.'
இதனைக் கேட்ட இருவர்க்கும்
　　'ஏது நம்மை இவளுமோ
மதி கலங்க ஏசுருள்?
　　மனம் அமைந்து இருக்கலாம்'
என்ன நினைந்து மறுமுறை
　　எந்தை யருளை எண்ணினர்.
சின்ன பெண்ணு உறங்குவாள்
　　செவிமடுத்து விழித்தனள்
ஒல்லைக் கோணிப் பையினை
　　ஓடி எடுத்துப் பூனைமேல்
அல்லல் போக வீசினள்
　　அற்புதத்தை விளைத்தனள்!
பூனை பெரிதும் வெருண்டது!
　　பூகம்பம் போல் மருண்டது!
ஆனை போல உயர்ந்தது
　　அலைந்து துள்ளிச் செம்பினை
உதறி வீசி எறிந்தது!
　　உயிரைக் கொண்டு மீண்டது!
கதவுத் திறந்த சன்னலால்
　　கடிந்து ஓட்டம் எடுத்தது!
எல்லோருள்ளம் குளிர்ந்தது!
　　எழுந்து விழுந்து சிரித்தனர்!
நல்ல சிறுமி சுந்தரி
　　நன்று வாழ வாழ்த்தினர்,
"பெரியோர் செய்த புண்ணியம்!
　　சிறிய குறையும் வருகுமோ?
தெரியா தஞ்சினேம்" என்று
　　திகழ்ந்து அண்ணி மகிழ்ந்தனர்!

---

## உள்ளம் மகிழும் உயர்வு

**வித்துவான், திரு. ச. சேதுசுப்பிரமணியப் பிள்ளை அவர்கள்**
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

ஆக்கம் புகழ்பெறவே ஆவி பொருள்பெறவே
தேக்கம் அருட்கடலில் தெள்ளிதாய் — ஊக்கமுடன்
வெள்ளம் நிறைசடையான் வெங்கழலை வேண்டுதலே
உள்ளம் மகிழும் உயர்வு.

# கடவுள் அருளிய கொய்யாப்பழம்

**தி. தி.**

எனக்கு மிக வருத்தமாக இருந்தது "என்ன இப்படி முட்டாள் தனமான காரியத்தைச் செய்துவிட்டோம்" என்று எண்ணினேன். அப்பாவுக்கும் வருத்தம்தான். அதுவும் கொஞ்சநஞ்சம் அல்ல அவர்கள் ஒன்று நினைக்க நான் ஒன்று செய்து விட்டேன். "நீ ஒரு சாக்லெட் எடுத்துக்கொண்டு மற்றொன்றைத் தமிழ்ச்செல்வியிடம் கொடுத்துவிடக் கூடாதா? இரண்டையும் நீ எடுத்துக்கொண்டாயே. இதுவரையில் நீ சாக்லெட் தின்றதில்லையா?" என்று என்னைக் கோபித்துக்கொண்டார்கள். நான் ஒன்றும் சொல்ல முடியாமல் விழிக்கும்படி நேர்ந்தது. எண்ணி எண்ணிப் பார்த்தேன். "நீங்கள் மாத்திரம் இரண்டுசாக்லெட்டை அவளிடத்தில் தூக்கிக்கொடுக்கலாமா? நான் ஒருதடவை, இரண்டுதடவை கேட்டபிறகுதானே வாங்கினீர்கள்? என்னிடத்தில்தானே கொடுக்கவேண்டும்? அதுபோனால் போகட்டும். ஒன்றையாவது என்னிடத்தில் கொடுக்கக் கூடாதா? நீங்கள் அவளிடத்தில் இரண்டையும் கொடுத்தபடியினால் நானும் கையை நீட்டி அவளிடத்தில் இருந்து வாங்கிக் கொண்டுவிட்டேன். அது உங்கள் தவறுதான்." என்று அப்பாவை திருப்பி கேட்டுவிடுவோமா என்ற எண்ணம் தோன்றிற்று. ஆனால் நான் முன்பின்யோசியாமல் இரண்டு சாக்லெட்டைச் சிநேகியிடமிருந்து வாங்கியவுடன் வாயில் போட்டுக்கொண்டது சரியல்ல என்று எனக்கே பிறகு தோன்றிற்று. சரியில்லாத காரியத்தைச் செய்துவிட்டோமே என்று திகைப்பு உண்டாகிவிட்டது. மனம் ஒன்றிலும் ஓடவில்லை. அதனால் அப்பாவைக் கேட்க மனம் துணியவில்லை.

அப்பாமாத்திரம் அடிக்கடி இதைச் சொல்லிக்காட்டிக் கொண்டே போனார்கள். கூடவந்த தமிழ்ச்செல்வி "எனக்கு ஒன்றும் வேண்டாம் நீங்கள் ஏன் தமிழரசியை கோபிக்கிறீர்கள்" என்று சொன்னாள். அதற்கு அப்பா "நீ கெட்டிக்காரி. முட்டாள் பெண்ணாக இருந்தால் இந்நேரம் தமிழரசியுடன் 'டூ' விட்டு இருப்பாய்" என்று, அதோடு நின்றுவிடவில்லை; "இனி நீ ஏதாவது வாங்கினால் அவளுக்குக் கொடுக்காமல் இருந்துவிடு.

அப்படித்தான் அவளுக்குப் பாடம் கற்பிக்கவேண்டும்" என்று என் மனத்தில்புண்படும்படியாகத்தமிழ்ச்செல்விக்குச்சொல்லிக் கொடுத்தார்கள். தமிழ்ச்செல்வி அதைக் கேட்கவில்லை. அவள் மிகவும் நல்லவள். என்னிடத்திலே மிகுந்த அன்புடையவள். நான் என்ன தவறு செய்தாலும் கோபித்துக்கொள்ளமாட்டாள். அதைப்போல இந்தத்தடவையிலும் வருத்தம் கொள்ளவில்லை. "நீங்கள் ஏன் இரண்டையும் என்னிடத்தில் கொடுத்தீர்கள்? ஒன்றைத் தமிழரசியிடம் கொடுத்துவிட்டு மற்றொன்றை என் னிடம் கொடுத்தால் அவள்பேரில் இந்தக் குற்றம் வந்திருக்காது. நீங்கள் செய்ததுதான் தவறு" என்று நான் கேட்கத் துணியா ததை அவள் துணிந்து கேட்டுவிட்டாள்.

அதற்கு அப்பா "தமிழரசியினுடைய குணத்தைத் தெரிந்து கொள்ளத்தான் அந்தவிதம் செய்தேன்" என்றார்கள்.

இந்தமாதிரி ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொண்டு காவிரிக் கரை வந்துவிட்டோம். அதைக் கடப்பதற்கு இன்னும் பாலம் கட்டப்படவில்லை. அதனால் தண்ணீரில் இறங்கிச் சென்றோம். நான் ஆற்றைக் கடந்து போகும் போதெல்லாம் "எனக்கு ஒரு கொய்யாப்பழம் வரவேண்டும் கடவுளே" என்று எண்ணுவது உண்டு. ஆனால் வராது. இன்று நான் ஒன்றும் அந்தமாதிரி நினைத்துக்கொள்ளவில்லை. இருந்தாலும் திடீர் என்று தமிழ்ச் செல்வி "இதோ ஒரு கொய்யாப்பழம்!" என்று பாய்ந்து எடுத்தாள். எனக்கு வெட்கமாக இருந்தது. அதற்கு ஏற்றாற் போல், அப்பாவும் தமிழ்ச்செல்வியைப் பார்த்து "நீ அதை அவளுக்குக் கொடுக்காதே" என்று சொன்னார்கள். நானும் என்னுடைய தவற்றை உணர்ந்து பேசாமல் இருந்துவிட்டேன். கொய்யாப்பழம் என்றால் மிகப் பிரியம்தான்! கேட்கும்போ தெல்லாம் கடவுள் எனக்கு கொடுக்கவில்லையே என்று கடவு ளிடம் நொந்துகொண்டு இருந்திருக்கிறேன். நல்ல அறிவு வரவேண்டுமென்றே இன்றையதினம் கொய்யாப்பழத்தைக் கடவுள் அனுப்பித்தார்போலும் என்று சிந்தித்தவண்ணம் இருந்தேன். யாரும் கொய்யாத பழம்; ஆற்றுநீரில் தானாக எனக்கு வந்த பழம்; பாடம் கற்பிக்கவந்த பழம். நான் இனி என்ன தின்றாலும் தமிழ்ச்செல்விக்குக் கொடுத்த பிறகே தின் பேன். கடவுள் கொய்யாப்பழத்தால் எனக்குப் பாடம் கற்பித்தார்.

694



# ஆதீனத்திலும் கல்லூரியிலும் ஆதீன தேவஸ்தானங்களிலும்

## யாம் பெற்ற இன்பம்

ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
திருக்கடவூர் தேவஸ்தானம், கட்டளை விசாரணை.

இன்பம் என்பது எல்லா உயிர்களாலும் விரும்பப்படுவது. இன்பத்தை எவ்வுயிரும் வெறுப்பது இல்லை. ஆனால் இன்பம் எது என்பது தான் வினா. உண்மையான இன்பம் அழியாதது. நிலைத்தது. அது ஆண்டவன் திருவடியின்பமே. அத்திருவடியின்பம் நாவால் உரைக்க ஒண்ணாதது. உணர்ந்து சுவைக்கத்தக்கது. அதனை அங்ஙனம் சுவைத்த அனுபவஞானிகள் வாழ்விலிருந்து அவ்வின்பத்தின் சுவையை நம்மால் அறியமுடியாது.

மாணிக்கவாசகப் பெருமான் திருவடியின்பத்தைச் சொல்லவும் வல்லவரானார். சிவபெருமான் தானே வந்து மாணிக்கவாசகரது மனத்தகத்தே புகுகின்றாராம். உயிர் வாழ்க்கை அப்பெருமானார்க்கு உவர்க்கிறது. தித்திப்பு முளைக்கிறது. அந்தத் தித்திப்போ திருவடித் தித்திப்பு. தேன், அமுதம். இதற்கு நான் எத்துணைத்தவம் செய்திருக்கவேண்டும் என்று செம்மாப்படைகிறார். 'தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்' இது அவர்கள் இன்ப அனுபவம். இந்த அனுபவம் எல்லோர்க்கும் எப்போதும் வாய்ப்பதில்லை. எங்களுக்கு வாய்த்த நிலையை என்னென்போம்.

வியாழக்கிழமை; காலை; நாழிகைப்பொறி ஒன்பதடித்தது. எங்கள் உந்தூர்தியும் திருபுவனம் நோக்கிப் புறப்பட்டது. சிவநாம முழக்கம் விண்ணையளாவியது. சொக்கலிங்கப்பெருமான் திருவடி தொழுத வண்ணம் விரைந்தது எங்கள் சிந்தை. அன்று குருவாரம். நாங்கள் முடித்துக்கொண்டதோ குருவழிபாடு. சென்றுகொண்டிருப்பதோ குருவழிநின்ற அடியார் பூசைக்கு.

திருபுவனத்தில் கம்பகரேசுவரர் கோயில் இராசேந்திரனால் கட்டப்பட்டது. கங்கை கொண்ட சோழன் கலைவளத்தை அங்கே காணலாம். அது நம் தருமையாதினத்தின் அருளாட்சியில் இருப்பது.

அங்கே சதா (சிவ) சொக்கலிங்கப்பெருமான் சிந்தனையும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திருவடிச் சிந்தனையும் இடைவிடாது கொண்டு தேவாலயத்தை ஆட்சிசெய்த அடியார்களுள் ஒருவராய் விளங்கியிருந்து அண்மையில் (13—9—55 செவ்வாயன்று) சிவமாம் தன்மைப் பெருவாழ்வெய்தியவர்கள் ஸ்ரீமத் சுந்தரலிங்கத் தம்பிரான் சுவாமிகள் ஆவார்கள். சம்பிரதாய உணர்ச்சியும், சைவசித்தாந்தப் பயிற்சியும், தோற்றப்பொலிவும், அருளாற்றலும் பெற்ற அடியார் பெருமானாராக அன்னார் விளங்கினார்கள். அவர்கள் சமாதியெய்திய பத்தாம் நாள் அன்றுதான் ஆதலின் அதைவழிபட விரைந்தது எங்கள் ஊர்தி.

பத்தரை மணி. கட்டளை மடத்தின் எதிர்ப்புறத்தில் அமைந்த சமாதிக் கொட்டகையில் அபிடேகம் தொடங்கப் பதினொன்றரை மணியளவில் வழிபாடு முடிந்தது. பேச்சுக்கள் தொடங்கின. ஆதீனக் கீழைக்கலைக் கல்லூரிப்பேராசிரியர் புலவர், திரு. முத்து. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் அடியார் பெருமை குறித்து அரிய சொற்பொழிவாற்றினார்கள். அதனைத் தொடர்ந்து திருவிடைமருதூர் வித்துவான் திரு. மு. நடராச தேசிகர் அவர்கள் நல்லுரை பொழிந்தார்கள். மாகேசுவர பூசை நிகழ்ந்தது.

மாலை அடியார் பெருமை தொடர்ந்தது, வித்துவான் திரு. ம. சிவசம்பு அவர்களும், மாணவர்கள் திருவினர் வேலாயுதம், ஞானப் பிரகாசம், இராசதுரை முதலியவர்களும் நன்கு பேசினார்கள். ஆதீன அடியார் திருக்கூட்டத்தின் சார்பில் அடியேனும் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் பேசினோம். கூட்டம் முடிந்ததும் சமாதி வழிபாடும், அங்கு அடைந்துள்ள தருமையாதீனத்துப் பதினேழாவது குருமூர்த்திகளின் வழிபாடும் நிகழ்ந்தன. பின்பு கம்பகரேசுவரர் எங்களுக்கு இன்பக் காட்சியை அருள பெற்றோம். அக்காலை நாங்கள் பெற்ற இன்ப அனுபவத்தை என்னென்பேன். அது சொல்லிறந்து நின்ற தொன்மைவழிபாட்டின் விளைவு.

கதிரவன் மறைந்தான். தருமையை நோக்கித் தாவிப்பறந்தது எங்கள் ஊர்தி. இன்னதென்று சொல்ல இயலாத ஓர் இன்ப உணர்ச்சி. சிவ முழக்கம், திருமுறை முழக்கம். ஊர்தியில் இருந்த ஒவ்வொருவரும் வெவ்வேறு இசையிலே ஒவ்வொரு திருமுறைப்பாடலைப் பாடினார்கள், அடியேனும் இசைக்கு அடங்காத ஓர் ஓசையிலே பல பாடல்களைப் பாடினேன். அப்போதுதான் எனக்கு இசை என்ற சொல்லின் பொருள் விளங்கிற்று, இசை என்றால் இசைவிப்பது என்று பொருள். எதனை? எதனோடு? இவ்வினா எழுமல்லவா? நம்மை (உயிரை) இறைவனோடு இசைவிப்பது (ஒன்றுபடச் செய்வது) என்பதுதானே விடை. இசையோடு

 8 4 b

தொடர்புடையது தமிழ்; தெய்வத்தமிழ். தெய்வத்தமிழ்தான் திருமுறை. அந்தத்திருமுறை இசையிலே எங்களை மறந்தோம். இறைவன் திருவடிச் சிந்தனைமீதூரப்பெற்றோம். நம்மை மறந்து நம் நாமமும் கெட்டால் தானே நம் தலைவன் தாளை அடைய முடியும். இவ்வாறு இன்பம் அடைந்து பேரின்பம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த எங்களை மாயை தடைசெய்தது. அப்பொழுதுதான் எங்கள் ஊர்தி்யை மாயூரம் இருப்புப் பாதைக் கதவு தடைசெய்ய, ஓட்டம் தடைப்பட்டதை உணர்ந்தோம்.

அக்காலை எங்களிடையே ஒரு வினா எழும்பியது. விரைவில் தருமையை அடையவேண்டுமே. ஞானபுரீசுவரர், ஞானம்பிகையின் ஒரே நாளில் நூறுயிரம் போற்றியில் கலந்து மகிழவேண்டுமே என்ற வினாதான் அது. அச்சமயம்

"நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்நாதன்
தன்செயல் தானேயென் றுந்தீ பற"

என்ற திருவுந்தியாரின் பகுதி எங்கள் சிந்தனைக்கு வர, சிவ முழக்கோடும் திருமுறை முழக்கோடும் முன்விட்ட பேரின்பத்தைத் தொட்டோம்; (கதவு திறந்து) வழிவிட்டது. ஊர்தி தருமைக்குப் புறப்பட்டது. தருமையை அடைந்தபோது இரவு எட்டுமணி. நடையை எட்டிப்போட்டு ஞானபுரீசுவரரின் சந்நிதிக்கு ஓடினோம். கருணையே உருவாகிய எங்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தூக்கிய திருக் கரத்தோடு ஒன்றிய திருவுள்ளத்தோடு எழுந்தருளியிருந்தார்கள். குரு லிங்கதரிசனமும் ஜங்கம (அடியார்) தரிசனமும் மூன்றும் ஒரே காலத்தில் நாங்கள்பெற்ற பேற்றை—யாம்பெற்ற இன்பத்தை எவ்வண்ணம் எழுதுவோம் இறைவன் திருமுன். இவ்வாறு இன்பத்தில் மூழ்கி இருந்த எங்களை ஆதீன ஓதுவார் திரு. சம்பந்தமூர்த்தி அவர்கள் பாடிய திருமுறைப் பாடல் மெய்சிலிர்க்கச் செய்தது. இதோ அப்பாடல்.

"சாமநல் வேதனும் தக்கன்றன் வேள்விதகர்த்தானும்
நாமம் நூறுயிரம் சொல்லிவானோர் தொழுநாதனும்
பூமல்குதண் பொழில் சூழும் அந்தண் புகலிந்நகர்
கோமள மாதொடும் வீற்றிருந்த குழகன் அன்றே"

## கும்பாபிஷேகப் பெருவிழா

**வி. சா. கு.**

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் விமானத்திலும் ஸ்ரீ ஞானம்பிகை விமானத்திலும் முன்பிருந்த கலசங்களை அகற்றித் தங்கக்கலசங்கள் ஸ்தாபிக்கப் பெற்றன. ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்கையம்பாள் ஆலய விமானத்திற்கும் அவ்வாறே தங்கக்கலசம் ஸ்தாபிக்கப் பெற்றது.

16—9—55 வெள்ளிக்கிழமை காலை 7-30க்குமேல் 8க்குள் விமானங்கள் அனைத்திற்கும் கும்பாபிஷேகங்கள் செய்விக்கப்பெற்றன. அன்று ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைக்கு ஏகதின லக்ஷார்ச்சனை நடைபெற்றது. மாயூரத்தி லிருந்தும் மற்றும் பல ஊர்களிலிருந்தும் அன்பர்கள் வந்து வணங்கி இன்புற்றனர். 22—9—55 வியாழக்கிழமை அன்று ஸ்ரீ ஞானம்பிகைக்கும் ஸ்ரீ ஞானபுரீஸ்வர சுவாமிக்கும் ஏகதின லக்ஷார்ச்சனை நடைபெற்றது.

## கல்லூரியில் தமிழ்ப்பெரியார் திரு. வி. க. நினைவுநாள்

தமிழ் உரைநடைக்கும் கவிதைக்கும் உயிர்கொடுத்துப் புதுமை வழங்கி தமிழ் இலக்கியங்களின் வளர்ச்சிக்குப் பல நூல்கள் எழுதிப் பணிபுரிந்தவர்களாகிய மறைந்த மாண்பாளர் திரு. வி. கலியாண சுந்தரனுர் அவர்களின் நினைவு விழா தருமையாதீனப் பல்கலைக்கல்லூரியில் கொண்டாடப்பெற்றது. அண்ணுமலைப்பல்கலைக்கழகத் தத்துவப்பேராசிரியர் திரு. சி. இராமலிங்கம் எம். ஏ. அவர்கள் தலைமை வகித்தார். ஆதீனக் கீழைக்கலைக் கல்லூரி முதல்வர் திரு. கி. இராமலிங்கம் எம். ஏ. அவர்கள் வரவேற்றுர்கள். கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான், வி. சா. குருசாமி அவர்கள் 'பெண்ணின் பெருமை' என்ற திரு, வி. க. அவர்களின் எழுத்தோவியத்தைஇனிது விளக்கினுர். கல்லூரி மாணவர்கள் திரு. வி. க. அவர்களின் நூல் பலவற்றை நுண்ணிதினறிந்து நுவன்றனர். கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் நன்றியுரை கூறினுர்கள். தலைவர் அவர்கள் திரு. வி. க. வின் தமிழ், சமயம், அரசியல், சமுதாயத் தொண்டுகளை நன்கு விளக்கினுர்க்ள்.

## சிதம்பரம் பாதபூஜை
## ஸ்ரீலஸ்ரீ அம்பலத்தாடும் சுவாமிகள் வருகை

மணிவாசகப்பெருமான் திருவாசகம், திருக்கோவையார் ஆகிய இருபெரு நூல்களை இயற்றி யருளினுர்கள். இறைவன் இவர்தம்பாடல்களைத் தாமே நேரில் சொல்லக்கேட்டு ஏடுகளில் தம் திருக்கையால் எழுதி "வாதவூரன் சொற்படி அழகிய சிற்றம்பலமுடையான் கைநாட்டு" என்று கையொப்பமிட்டு மறைந்தருள மறுநாள் அவ்வேடுகள் ஐந்தெழுத்துப் படிகளில் இருக்கக்கண்ட தில்லைவாழந்தணர்கள் வியப்புற்று அவ்வேடுகளைத் தாங்கள் வைத்துக்கொள்ள எண்ணினுர்கள். பெறுபவர் பலர் இருப்பதால் இதனைச் சிவகங்கையில் விடுக என இறைவன் ஆணை பிறந்தது. அவ்விதமே அவர்கள்செய்தபொழுது ஸ்ரீஅம்பலத்தாடுவார்க்குக் கிடைத்தது. இத்திருவாசக ஏட்டுச்சுவடி இன்றும் அவர்கள் மரபில்இருந்து வருகிறது.

21—9—55 புதன்கிழமை மாலை 3 மணிக்குத் தருமையாதீனம் கீழக் கோயிலில் ஸ்ரீலஸ்ரீ அம்பலத்தாடும் சுவாமிகளுக்கு வரவேற்பு அளிக்கப்பெற்றது. அவர்களிடமிருந்துவரும் மிகப் பழைய திருவுருவ மாகிய மாணிக்கவாசகர்க்கு அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. திருவாசகப் பெட்டகத்திற்கு சிறப்பு வழிபாடுகள் செய்விக்கப் பெற்றன. மணிவாசகர் திருஉருவ அமைப்பை எல்லோரும் பார்த்துப் பாராட்டினர்.

## ஜன்ம நக்ஷத்திர அபிஷேக ஆராதனை

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்ம நக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம் பெற்ற சிவ தலங்களில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து தலப் பதிகங்களையும் அச்சிட்டு வழங்கிவருதல்போல இம்மாதத்திலும் 18—9—55 ஞாயிற்றுக்கிழமை திரு நாலூர்மயானம் பலாசவனநாத சுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆரா தனைகள் ஆதீனச் சார்பில் செய்விக்கப்பெற்றன. ஆதீன வெளியீடாக அச்சிட்ட திரு நாலூர்மயானத் திருப்பதிக உரையை வழங்கி, திரு. R. வேலாயுத ஓதுவாமூர்த்திகளால் பண் முறைப்படி பதிகம் முழுவதும் பாராயணமாக ஓதப்பட்டது.

## வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு வரதஹஸ்தம் அணிவித்தல்

வரத்தைக் கொடுக்கும் கையென்ற பொருளில் எம்பெருமானது இடது திருக்கை வரதஹஸ்தம் எனப்பெறுவது. கீழ் நோக்கிய இத் திருக் கை திருவடியை சுட்டிக்காண்பிப்பது. புள்ளிருக்குவேளூர் ஸ்ரீ செல்வ முத்துக்குமார சுவாமிக்கு வரத ஹஸ்தம் அணிவித்தல்விழா 23—8—55 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. ஸ்ரீ செல்வ முத்துக்குமாரருக்கு பொன் னால் இயற்றப்பெற்று நவமணி பதித்த அபயஹஸ்தம் அன்பர் ஒருவரால் முன்புசெய்து அணிவிக்கப் பெற்றிருந்தது. வரதஹஸ்தம் அவ்வாறே இல்லாது இருந்தமை அன்பர்களுக்குப் பெருங் குறையாக இருந்தது. இதனைத் திருவுளங்கொண்ட தருமைக் குருமகாசந்நிதானம் அவர்கள் நவமணிகள் பதித்த பொற்கை ஒன்றை உடனே செய்வித்தருளி அதனை அணிவிக்கும்நாளைத் திருநாளாகக் கருதித் திருவிழாக்கொண்டாடினார்கள். சமயச்சொற்பொழிவுகள் நடைபெற்றன. உள்ளூர்ப் பொதுமக்கள் பலரும் இத் திருவிழாவில் கலந்துகொண்டு முத்துக்குமரரின் திருவருள் பெற்றனர். இரவு 7-30 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி யிருந்து பொன்மணிக்கையை முத்துக்குமாரருக்குச் சூட்டி வழிபட்டு எல்லோர்க்கும் வழிபாடு செய்வித் தருளினார்கள்.

சமயப் பேரவையில் பங்குகொண்ட ஆசிரியர்களும் பிறரும்: தருமை ஆதீனக் கீழைக்கலைக் கல்லூரி முதல்வர் திரு. கீ. இராமலிங்கம் எம். ஏ. அவர்கள், 'கந்தரனுபூதி.' கீழைக்கலைக் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர்கள் புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'தணிகைப் புராணம்', வித்துவான், திரு சொ. சிங்காரவேலன் 'திருமுருகாற்றுப்படை' வித்துவான், திரு. வி சா. குருசாமி அவர்கள் 'முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழ்', வித்துவான் திரு. ச. சேதுசுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் 'வேளூர்ப்புராணம்', கீழைக்கலை உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. கை. முருகையாப்பிள்ளை பி. ஏ. எல். டி. அவர்கள் 'முத்துக் குமாரசாமி திருவருட்பா', தமிழாசிரியர்கள் வித்துவான். திரு. வி. சபேசன் அவர்கள், வரந்தருவான் எங்கள் வைத்தியநாதன்', வித்துவான். திரு. ம. சிவசம்பு அவர்கள் 'கந்தபுராணம்', கல்லூரிமாணவர் திரு.கே. வைத்தியநாத சுவாமி 'வேளூர் தனிப்பாடல்கள்'

## திருநள்ளாற்றில்
## ஏகதின லக்ஷார்ச்சனை திருமுறை மாநாடு

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 24—9—55 சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன, இத்தலத்தில் சனிபகவானுக்குச் சிறப்பு மிகுதி. தர்ப்பாரண்யேஸ்வரருக்குப் பஞ்சமுகார்ச்சனையும், தியாகேசப் பெருமானுக்கு முசுகுந்தார்ச்சனையும், போகமார்த்த பூண்முலை அம்மைக்கு நவசக்தி அர்ச்சனையும், சனிபகவானுக்கு ஏகதின லக்ஷார்ச்சனையும் நடைபெற்றன. ஏழை மக்கட்கு எண்ணெய் வழங்கப்பெற்றது. ஒளிவளர்விளக்குகள் திருக்கோயில் எங்கும் சுடர்விட்டு ஒளிவிட்டன. காலையும் மாலையும் விழாமண்டபத்தில் திருமுறை மாநாடு நடைபெற்றது. சுற்றுப்புற ஊர்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து பக்தியால் பெருமானைப் பரவி இன்புற்றனர்.

## திருமுறை மாநாடு

திருநள்ளாறு கட்டளைவிசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'நள்ளாற்று நன்பொன்', வித்துவான். திரு. ம. சிவசம்பு அவர்கள் 'நள்ளாற்றில் வழிபட்டநளன்', கல்லூரி மாணவன் திரு. க. வேலாயுதம் 'நல்கவல்ல நம்பெருமான்', வித்துவான் திரு. சொ. சிங்காரவேலன் 'தளிர்இள வளரொளி', வித்துவான் திரு. வி. சபேசன் அவர்கள் 'நலங்கொடுக்கும்நள்ளாற்றுநம்பி', திரு.கை. முருகையாப்பிள்ளை அவர்கள் 'நள்ளாறுஎன நம்வினைநாசமே', திரு. கீ. இராமலிங்கம் அவர்கள் 'நாதன்தாள் வாழ்க', புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசகமுதலியார் அவர்கள் 'கற்பகம்', வித்துவான். திரு. சேதுசுப்பிரமணியபிள்ளை அவர்கள்

'நள்ளாறும் சேக்கிழாரும்' கல்லூரி மாணவன் திரு. வைத்தியநாதசாமி 'அற்புதப்பழ் ஆவணம்' திருக்கடவூர் கட்டளை விசாரணை ஸ்ரீமத் முத்துக் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் 'ஒளிவளர் விளக்கு' மாயூரம் குமரக்கட்டளை விசாரணை ஸ்ரீமத் மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் 'நள்ளாற்றுனை மறந்து நான் நினைப்பது ஏது'

சொற்பொழிவுகள் காலை 9-30க்குத் தொடங்கி 12வரை நடை பெற்றது. மாலை 6 மணிக்குத்தொடங்கி 8-30வரை நடைபெற்று நிறை வுற்றது.

## மாயூரம் ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி கோயிலில் சிறப்பு வழிபாடு

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தருமை ஆதீனத்துக்குச் சொந்தமான மாயூரம் ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி கோயிலில் எழுந்தருளியுள்ள மலைத் தண்டபாணிக் கடவுளுக்கு 20—9—55 செவ்வாய்க்கிழமையன்று சிறப் பாக அபிஷேக ஆராதனைகள் செய்வித்தருளினார்கள். அன்பர்கள் பலரும் வந்து வணங்கி இன்புற்றனர்.

---

## தமிழிசைப் பாடல்

**திரு. க. சொக்கலிங்க ஓதுவார் அவர்கள்**
தேவார ஆசிரியர், வைத்தீசுவரன்கோயில்.

**விநாயகர்**

இராகம் - அம்ஸத்வனி] [தாளம் - ஆதி

பல்லவி

வேழமுகன் கழலே விரும்பிப்பணிந்திட
வித்தைநமக்கு அருளி வேண்டும்வரந்தருவான் (வே)

அனுபல்லவி

வாழவகையருளி வல்வினையைநீக்கி
வாய்மைசெழிக்கஎங்கும் நல்லவளங்கொழிக்க (வே)

சரணம்

சூழவரும் இன்பம் சுரக்கும் பைந்தமிழ்ச்
சொல்மாலையால் துதித்துத் துணையென அவன் அடியில்
தாழப்புகழ்செல்வம் தானேவரும் இந்தத்
தரணிபணிமுதல்வன் தவளக்கொம்பன் நமது (வே)

701

<u>மதிப்புரை</u>

## தாளசமுத்திரம்

தஞ்சை சரஸ்வதிமகால் வெளியீடு; எண் 50. பக்கங்கள் 356. பதிப்பாசிரியர் சங்கீதகலாமணி ஸ்ரீ K. வாசுதேவ சாஸ்திரிகள் B.A., ஆராய்ச்சி ஆசிரியர் சரஸ்வதிமகால் தஞ்சை. வெளியிட்டோர் பெருமைச்செயலர் திரு. S. கோபாலன் அவர்கள் B.A., B.L.,

இசைத் தமிழிற்குப் பயன்படக்கூடிய பரத சங்கிரஹம் அண்ணுமலை யூனிவர்சிட்டியிலும் சச்சபுட வெண்பா தருமபுர ஆதீனத்திலும் வெளியிடப்பட்டுள்ளன. தாளசமுத்திரம் தஞ்சை ஸரஸ்வதிமகால் வெளியீடாக வருகிறது. இதில் தாளத்தின் தசப்பிராணன், அஷ்டகண லக்ஷணம், தேவதை, அங்க தேவதை முதலியனவும் 108 தாளங்கள், அவற்றின் பெயர் லக்ஷணம் இவையாவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆதி பரதம் பரதார்ணவம் என்று வடமொழி நூல்களிலிருந்து 108 தாளங்களுக்கும் மேற்கோளாக லக்ஷணங்களும் கூறுப் பட்டுள்ளன. முகவுரை ஒரு தனியான ஆராய்ச்சி நூல் எனக் கூறும் வகையில் விரிவாக அமைந்துள்ளது. பிரஸ்தாரத்திற்குப் பயன்படக்கூடிய குறுக்கு வழிகளும் உதாரணங்களும் விரிவாக முகவுரையில் உள்ளன. ஆரம்பத்திலேயே இரண்டொரு எழுத்துப் பிழைகளும், சீர் சரியாகப் பிரிக்கப்படாமையும் இருப்பினும், முகவுரையும் அனுபந்தமும் நூலை மிக அழகு படுத்துகின்றன. நவசந்தி தாளங்கள், நட்டுவ லக்ஷணம் முதலியனவும் வருங்காலத்தில் ஆராய்ச்சிக்குப் பயன்படக்கூடிய பலவும் கூறப்பட்டுள்ளன. நல்லதோர் வெளியீடு. விலை ரூ. 3-0-0.

கே. இராஜகோபால சாஸ்திரி.

---

"மரக்கலத்தால் கடலைக் கடக்கலாம். பகைப்படையைக் குதிரைப் படையால் வெல்லலாம். செய்வன்மையால் தவத்தின் பயனடையலாம். நுண்மாண் நுழைபுலத்தொடு நாவன்மையுடைமையால் அவையை அழகுறுத்தலாம்."

902

# வருங்காலம்

ஜோதிஷார்ணவம்

பிர்மஸ்ரீ முத்துஜோதிடர் அவர்கள், திருவிடைமருதூர்.

(மன்மத௵ ஐப்பசி௴ 1௳ முதல் 30௳ முடிய
18-10-55 முதல் 16-11-55 முடிய)

**1. மேஷம்** அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

அசுவதி நான்கு பாதங்களும், சுபசந்தோஷத்தையும், உயர் பதவியையும், மேலோர் அன்பையும் தொழில் ஏற்றத்தையும் தரும். பரணி முதல் பாதம் மிகவும் உந்நதமானஸ்தாநபிராப்தியையும், இல்லற சுகத்தையும் தரும். பரணி இரண்டாம் பாதம் வீண் அலைச்சலையும், சிரமத்தையும், நஷ்டத்தையும் தரும். பரணி 3-ம் பாதம் லோக ஸஞ்சாரத்தையும், பெரிய ஆபத்துக்களையும் காட்டும். பரணி 4-ம் பாதம் தன்னைச் சேர்ந்தவர்களால் மிகுந்த கஷ்டத்தையும், அபவாதத்தையும் தரும். கார்த்திகை முதல் பாதம் ரோகத்தையும் நஷ்டத்தையும், கலகத்தையும் உண்டுபண்ணும்; திங்களும் புதனும் சுபவாரமாகும்.

**2. விருஷபம்** கார்த்திகை ¾ ரோஹிணி, மிருகசீரஷம் ½

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் இடம்மாறி சுபம் தரும். விவசாயிகளாகில் நஷ்டத்தை உண்டுபண்ணும். உத்யோகஸ்தர்களுக்கு பிரமோஷன் கிட்டும், மனம் சாந்தி இராது. ரோஹிணி 4-பாதமும் மிசிரமாய் நடக்கும். லாப நஷ்டங்கள் ஸமமாகவும், சுகதுக்கங்கள் ஸமமாகவும் நடக்கும். மிருகசீர்ஷம் 1, 2 பாதங்கள் மேலோர் பெரியோர் வருத்தத்தால் கஷ்டங்கள் உண்டுபண்ணும். மனம் சதா சஞ்சலமாகவே இருக்கும். வியாழன், வெள்ளி சுபவாரமாகும்.

**3. மிதுனம்** மிருகசீரிஷம் ½ திருவாதிரை, புனர்பூசம் ¾

மிருகசீர்ஷம் 3, 4 பாதங்களும் திருவாதிரை நான்கு பாதங்களும், அதிக உழைப்பைத்தந்து, சுபத்தையும் லாபத்

தையும் தரும். பெரியோர் அன்புகிட்டும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்களும், தீராத வியாதி பயத்தையும், ஸ்தாவர ஜங்கம நஷ்டங்களையும் குடும்பத் தொல்லைகளையும், வீண் அபவாதங்களையும், கலகங்களையும், எதிலும் அபஜயம் அடைதலையும், தேவகோபத்தையும் உண்டுபண்ணும், சனி செவ்வாய் நலன் காட்டும்.

**4. கடகம்** புனர்பூசம் $\frac{1}{4}$ பூசம், ஆயில்யம்.

புனர்பூசம் 4-ம் பாதம் கஷ்டத்திலிருந்து விடுதலை செய்ய ஆரம்பிக்கும். பூசம் நான்கு பாதங்களும் பலவித கஷ்டங்களை ஒன்றின் பின் ஒன்ருகத் தருவதற்கு எத்தனிக்கும். ஆயில்யம் நான்கு பாதங்களும், கிரஹணத்திலிருந்து விடுபட்ட சந்திரனைப் போல் பிரகாசித்து சுபசோபனுதிகளையும், ஜயத்தையும், தைவ பலத்தையும் தரும். புதன் வெள்ளி சுபமாகும்.

**5. சிம்மம்** மகம், பூரம், உத்திரம் $\frac{1}{4}$.

மகம் நான்கு பாதங்களும் சென்ற மாதம்போலவே நடப்பதோடு விசேஷமான உத்யோக லாபத்தையும் பெரியோர்கள் அன்பையும் தரும். பூரம் நான்கு பாதங்களும் அதிகமான செலவினங்களையும், அடிக்கடி சஞ்சாரத்தையும், துர்ஜனங்களின் சேர்க்கையையும் தரும். உத்திரம் முதல் பாதம் வியாபார விருத்தி தன சேர்க்கை கீர்த்தி பத்திரம் கிடைக்கச் செய்தல் மனுேல்லாசம் இவைகளைத் தந்து சந்தோஷம் உண்டு பண்ணும். வியாழன், சனி சுபவாரமாகும்.

**6. கன்னி** உத்திரம் $\frac{3}{4}$ ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$.

கன்னியாராசி சம்பந்தப்பட்ட 9 பாதங்களும், மாதம் முதல் பாதியில் பிரமாதமான சுகபோகங்களையும், சாசுவதமான கீர்த்தியையும், உத்தமஸ்தான பலத்தையும், தரும். பிற்பாதியில் அதிகமான செலவுகளும், அடிக்கடி சஞ்சாரமும், தேவதாகுருபக்தியும், உத்யோக மேன்மையும் தரும். புதன், வெள்ளி சுபவாரமாகும்.

904

7. துலாம் சித்திரை $\frac{1}{2}$, சுவாதி, விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் மிசிர பலனைத்தரும். அதிக கவலை உண்டு பண்ணும். சுவாதி நான்கு பாதங்களும், இடம் மாறி லாபம் தரும். சுபசோபனுதிகள் நடக்கும், இல்லறம் ஓங்கும், தைவபலம் பிரகாசிக்கும், நினைத்ததெல்லாம் சுலப மாய் நிறைவேறும். விசாகம் 1, 2, 3 பாதங்களும், சென்ற மாதம் போலவே நடப்பதோடு வியாபார நஷ்டம், மானபங்கம், புத்திர கிலேசம், விவசாய லாப நஷ்டம் இவைகளையும் வியாதி பயத்தையும் தந்து சிரமத்தை உண்டு பண்ணும். சனி, ஞாயிறு சுபவாரமாகும்.

8. விருச்சிகம் விசாகம் $\frac{1}{4}$, அனுஷம், கேட்டை.

விசாகம் 4-ம் பாதம் தீர்த்த யாத்திரை, தேவகுரு தரிசனம், சஞ்சார பலன் இவைகளைத்தரும். அனுஷம், நான்கு பாதங் களும் கேட்டை நான்கு பாதங்களும் ஜீவன லாபத்தையும், இடம் மாறலையும், லாபகரமாய்ச்செய்யும். காரியங்களில் கீர்த்தி யையும் உண்டு பண்ணும். இல்லற சுகம் ஓங்கும். புதன் சனி சுபவாரமாகும்.

9. தனுசு மூலம், பூராடம், உத்திராடம் $\frac{1}{4}$.

மூலம் நான்கு பாதங்களும், கவலையைத் தரும், ஆடம்பர வாழ்க்கை, வீண்செலவுகள் ஏற்படும். பூராடம் நான்கு பாதங் களும் அதிக செலவினங்களையும், வீண் அலைச்சலையும், விவசாய நஷ்டத்தையும், கலகங்களையும் தரும். உத்திரம் முதல் பாதம் ஆரோக்கியத்தையும், குடும்ப சுகத்தையும் தந்து, தனதான்ய பெருக்கத்தையும் தரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம் உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$.

மகரம் சம்மந்தப்பட்ட 9 பாதங்களும், சமபலனைத்தரும். அதிக அலைச்சல் ஏற்படும். உத்யோகம் ஸ்திரமாகும். பரீக்ஷை யில் ஜயமுண்டாகும், வியாபாரம் ஓங்கும், பந்துமித்திரா ளுடைய சேர்க்கையும், கீர்த்தி பத்திரமும் கிடைக்கும். திங்கள் சனி சுபவாரமாகும்.

905



**11. கும்பம்** அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾.

கும்பராசி ஒன்பது பாதங்களும் சுபமாகவே நடக்கும். வியாபாரிகள் லாபமடைவார்கள். உத்யோகஸ்தர்கள் இடம் மாறி லாபமடைவார்கள். அடிக்கடி சஞ்சார பலன் தரும். தேவதாகுருபக்தியும், தைவசக்தியும் ஏற்படும். சகல காரியங் களும் சித்தியாகும். புதன், வியாழன், வெள்ளி வாரங்கள் சுபமாகும்.

**12. மீனம்** பூரட்டாதி ¼, உத்திரட்டாதி, ரேவதி.

மீனம் சம்பந்தப்பட்ட ஒன்பது பாதங்களும் சென்ற மாதம் போலவே நடப்பதோடு விசேஷமாய் எதிர்பாராத லாபங் களும் உத்யோக ஏற்றமும், இடம்மாறி அதிக லாபம் சம்பாதித்தலும், கீர்த்தி பத்திரமும், ஜயமும், கிடைக்கும். வியாழனும், சனியும் சுபவாரமாகும்.

**குறிப்பு:** ஷ மாதம் உலகில் தென்னுட்டில் மழைக் குறை வால் பயிர்களுக்கு சேதம் காட்டும். தர்மம் இருக்குமிடத்தில் கண்ட வருஷமாக மழை பொழியும். கவிபலம் வடநாட்டில் அதிகமாய் பிரகாசிக்கும். ஸஜ்ஜனங்கள் அவரவர்கள் செய்யும் சத்கர்மாவால் உலகம் சுபிக்ஷமடையும். வருங்கால பலன்கள் தசாபுத்தி பலன்களை அனுசரித்தேதான் நடக்கும். தசாபுத்தி சுபமாய் இருந்து கோசாரமும் சுபமானுல் சுபபலன்கள் ஓங்கி நடக்கும். ஒன்று சிலாக்கியமாயும், மற்றொன்று சிலாக்கியம் இல்லாமலும் இருந்தால் மிசிரமாய் நடக்கும். இரண்டும் கெடுதலானுல் கெட்ட பலன் அதிகமாகும். ஆகையால் மகா ஜனங்கள் ஆஸ்திகத்தோடு கடவுளை வழிபடுகிறவர்கள் சுபத் தையே எக்காலமும் அடைவார்கள்.

---

கடற்குட்டம் போழ்வர் கலவர் படைக்குட்டம்
பாய்மா உடையான் உடைக்கிற்கும்—தோமில்
தவக்குட்டம் தன்னுடையான் நீந்தும் அவைக்குட்டம்
கற்ருன் கடந்து விடும்.

906.

அநுபந்தம்

# திருக்கேதார யாத்திரை

[முன் தொடர்ச்சி]

## மாடியில் இருந்தோம்:

மாலைநேரம்; கல்யாணசுந்தரம் பிள்ளை வந்தார். காசி மடத்தின் காசி நிர்வாகத்தைப்பற்றிய பேச்சு தொடங்கியது. 'நல்லகாற்று வாங்கலாமே; மாலை நேரந்திலே கங்கைக் காட்சியும் நகரக் காட்சியும் மிக அழகாக இருக்கும். மேல் தளத்திலிருந்து இரண்டினையும் பார்க்க வசதியாக இருக்கும் என்று விண்ணப்பித்துக்கொண்டார். ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்களோடு மற்வர்களும் மேலே சென்றோம்.

## சமர்த்துப்பிள்ளை:

கங்கையிலுள்ள பல கட்டங்களும் கண்களுக்குப் புலனாயின. பிள்ளை ஒரு சமர்த்தர். அங்கே போனதும் எதிர்ப்புறத்திலே காசிமடத்தின் கட்டிடங்கள் பழுதுபார்க்கப்பெற்றதையும், குமார சுவாமி மடத்தின் சில பகுதிகள் பழுது பார்க்கப்பெற்றிருப்பதையும் ஒவ்வொன்றாகக் காட்டி வந்தார். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஐந்து வருடங்களுக்குமுன் வந்திருந்ததைவிட இப்போது பல பல பகுதிகளும் பல பெருங் கட்டிடங் களும் திருத்திக் கட்டப்பெற்றிருந்தன. அப்போதிருந்ததை விட இப்போது வருமானமும் உயர்ந்திருப்பதாகச் சொன்னார். இவையெல்லாம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளுடைய சீரிய நிர்வாகத்தையும் வெளிப்படுத்துவதாயிற்று.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண் விடல்"

என்ற திருவள்ளுவருடைய திருவாக்குக்கு இலக்கியமாக இருக்கிறது இவ்வாட்சி. ஆட்சியின்சிறப்பால் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித்தம்பிரான்சுவாமிகள் அவர்களைப்பற்றி எங்களுடைய பேச்சு தொடர்ந்தது. ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களை அப்பூதி அடிகளோடு ஒப்பிட்டு உயர்த்திப் பேசினார்கள்.

## அப்பூதி அடிகளும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும்:

'அப்பூதி அடிகள் அடியார்க்கு அடியாராக தன் குருநாதனாக ஏற்றுக் கொண்ட திருநாவுக்கரசருடைய திருப்பெயரைத் தமது மக்கள்,

உடைமைகள் (சரம், அசரம்) எல்லாவற்றுக்கும் சூட்டி, கண்டும் கேட்டும் பேசியும் உபாசனை செய்தார். ஆனால் நமது தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மூலப்பொருளையே எட்டிப் பிடித்துவிட்டார்கள். மாடம், மாளிகை, உபயோகப் பொருள்கள், பெட்டி, கண்ணாடி எங்கும், பல தலங்களின் முன்னிடம், மடாலய முகப்பு எங்கும் சிவ சிவ நாம மந்திரம் தீட்டியிருக்கிறார்கள். எங்கும் சிவ சிவ விளக்குகளின் ஒளிமாட்சி சுவாமிகள் இருக்கும் இடங்களிலெல்லாம் சிவ சிவ நாம ஒலியே முழங்கி யிருக்கும். உயிர்ப்பும் சிவ சிவ ஒலிபேசும். இது திருமந்திரத்தினுடைய ஒரு இலக்கிய நிகழ்ச்சி. அந்தப்பாடல்,

"சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்றிடச் சிவகதி தானே."

என்பது.

## திருமூலரும் கேதாரமும்:

இப்பொழுது நினைவுக்கு வருகிறது ஒன்று. நாம் இப்பொழுது கேதார யாத்திரை செல்வதற்குரி முதற்படியில் இருக்கின்றோம். நமக்கு வழிகாட்டிகள் நமது ஆசாரியப் பெருமக்கள். நந்திகணங்களில் ஒருவரான திருமூலர் நாம் செய்த தவப்பயனாகத் தென்னாட்டுப் பொதிகையிலிருக்கும் அகத்தியரைக்கண்டு சிலநாள் அவருடன்தங்கியிருந்துவரக்கயிலையிலிருந்து புறப்பட்டார். கேதார தரிசனம்செய்து காசியில் கங்கையாடித் தரிசனம் செய்துகொண்டு திருப்பருப்பதம் காளத்திவழியே தென்னாடுசென்றார்.

## நாவரசரும் கேதாரமும்:

தென்னாட்டிலிருந்து மற்றொரு உறைப்புடைத் தொண்டர் - நாவரசுப் பெருந்தகை, 'ஆளும் நாயகன் கயிலையில் இருக்கைகண்டு அல்லால் மாளும் இவ்வுடல்கொண்டு மீளேன்' என்ற உறுதிகொண்டு புறப் பட்டார் கால்நடையாக. காளத்தி நீங்கினார். பருப்பதம் கண்டார்; தெலுங்கு நாடு கடந்தார்; கன்னடம் தாண்டினார்; வனங்கள் நதிகளைக் கடந்து, தீர்த்தங்கள் ஆடினார்; விந்தியத்தைக் கடந்தார்; மாளுவ நாட்டையுங் கடந்தார்; இலாடநாடு கடந்தார்; மத்திய பாரத நாட்டை வந்தடைந்தார்; பல நாடுகளையுங் கடந்து இந்தப் புனிதமான வாரணாசியில் வந்தடைந்து நகர் நுழைவுக்கு முன்னே கங்கையாடித் தூய்மை செய்துகொண்டு வந்தார்; வாரணாசியிலே வழிபட்டார்; கங்கைக்கரை வழியே மலையடி வாரம் வந்து சேர்ந்தார்; மனிதர்கள் சேர்தற் கரிய மலை வழியிலே மலைக் காமல் சென்றார். காய், கனி, கிழங்குகளை உட்கொண்டார். கால் தேய்ந்து, கைதேய்ந்து உடல்முற்றும் தேய்ந்து. ஆனால் உளம் மட்டும் தேயாத நிலையிலே ஊர்ந்து சென்றது அந்த அன்புருவம். கயிலைவழியிலே கேதாரம் சென்றிருக்க வேண்டும். நமக்கு அப்பெருமான் ஒரு வழிகாட்டி.

## ஆளுடையபிள்ளையும்: ஆளுடையநம்பியும்:

திருஞானசம்பந்தர் காளத்தியிலிருந்து அன்புமீதூர நினைத்தார் கேதாரத்தை; நெகிழ்ந்தார். திருப்பதிக இசைதிருந்தப் பாடினார். அவர் வடக்கே சென்றாரில்லை. காரணம் சேக்கிழார் சொல்கிறார், வடக்கும் மேற்கும் தமிழ்வழக்கு அங்கு நிகழாததாலேயே சென்றாரில்லை. ஆனாலும் ஞான தானங்கள் பலவற்றின் சிறப்பும் அப்பெருமானை இசைபாடச் செய்தது. தேவ மகளிரோடும் தேவர்களும் போற்றிசைக்க, வடகயிலைநோக்கி வீற்றிருந்தார்; திருபதிகத் தீந்தமிழ் வெளிவந்தது. அத்தலங்களைப் பற்றிய அப்பதிகங்களிலே 'என்பரால்' என்ற தாம்கேட்டு உளம்கனிந்த செய்திகளை யெல்லாம் திருவருளால் தொகுத்து நமக்குத் தந்திருக்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் காளத்தியிலிருந்தே கேதாரத்தை நினைத்துப் பாடியதாகப் பெரியபுராணம் சொல்லுகிறது. இப்படி முன்னோர்கள்சென்ற வழியிலே நாமும் சொல்லுகிறோம். பேச்சிலே நேரம் தெரியவில்லை. இருட்டியது. நாங்களும் கீழே இறங்கினோம். 'நேசரைக் காணா விடத்தே, என்ற மூதுரையை மேலே சொல்லிய பேச்சு எங்களுக்கு நினைப்பூட்டியது.

## கங்கை நீராட்டு:

மறுநாள் ஏப்ரல் 18உ சனிக்கிழமை. வைகுறு விடியலில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கங்கைநீராட்டுக்கு எழுந்தருளினார்கள். நாங்களும் உடன் சென்றோம். நேரம் அமைதியான நேரம். கங்கைப் படியிலே - கேதார கட்டத்திலே - நாங்கள் இறங்கினோம். காசிமடத்தின் நிர்வாகத்தில் அமைந்தது அந்தக்கோயில். திருமுறை ஒலி காற்றிலே மிதந்து வந்து எங்கள் செவிகளில் பாய்ந்தது. ஒலிபெருக்கியின் வயிலாக தண்டபாணி தேசிகரின் இனிய குரல்வளம் அங்கே பரவியது. ஆதீனச் சார்பிலே தயாரிக்கப்பெற்ற இசைத் தட்டுகளின் நாத ஒலி அது என்பது தெளிவாயிற்று. திருமுறை நினைவோடு கங்கையிலே பலரும் அங்குவந்து முழுகிக் கொண்டிருந்தார்கள். நீராடிக் கொண்டிருக்கும்போதே கேதாரேசுவரர் ஆலய வழிபாடுகள் நிகழ்ந்தன.

## 'கேதாரன் அடித்தலமே'

இந்த நிகழ்ச்சி "களித்துக் கலந்ததோர் காதற் கசிவொடு காவிரிவாய்க் குளித்துத் தொழுது முன்னின்ற இப்பத்தரைக் கோதில் செந்தேன் தெளித்துச் சுவைஅமுது ஊட்டி, அமரர்கள் சூழிருப்ப அளித்துப் பெருஞ்செல்வமாக்கும் ஐயாறன் அடித்தலமே" என்ற அப்பர் தேவாரத்தை எங்களுக்கு நினைப்பூட்டியது. காவிரியைக் கங்கையாகவும், ஐயாறன் அடித்தலத்தைக் கேதாரன் அடித்தலமாகவும் நாங்கள் சிந்தித்து மகிழ்ந்தோம். இது அந்தக் காட்சிக்கு இலக்கியப் பாடலாகக் கண்டு பாடி அமைத்ததோ? எங்கே இப்படிப் பாடிப் பாருங்கள்.

### சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்:

அனுட்டானுதிகளை முடித்துக்கொண்டு அந்தப் படிகளின் வழியே ஏறினேம். அது, "பேணுதத்துவங்கள் என்னும் பெருகு சோபானமேறி" என்று சேக்கிழார் சொல்லுவதுபோல இருந்தது எங்களுக்கு. மேற்படியிற் சென்றதும் கேதாரேசுவரரைக் கண்டோம். ஆர்வ மிகுதியோடு கங்கை நீரைக்கொண்டு சென்ருேம். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அன்பு வழிபாட்டை ஏற்றுக்கொண்டு இன்பக்காட்சி நல்கினர் கேதாரேசுவரர். கேதாரகௌரி, விநாயகர், கார்த்திகேயர், பயிரவர் முதலிய எல்லா மூர்த் தங்களையும் வழிபட்டோம். வெளியிலே கோயில் திருச்சுற்றிலே ஆண்களும் பெண்களுமாகப் பக்திப்பெரு வெள்ளத்திலே மிதப்பதைக் கண்டோம். ஒரு சாரார் மௌனச் சிந்தையோடு கண்மூடி யோகத்திருந் தார்கள். ஒருசாரார் அக்கமணிகொண்டு அஞ்செழுத்தோதி ஜெபம் செய்து கொண்டிருந்தார்கள். ஒருசாரார் கொட்டு முழக்கு எல்லா வற்றையும் வைத்துக்கொண்டு பெருமான் புகழ்பாடிக் களிசிறந்து இருந் தார்கள். ஒருசாரார் பெரியவர் ஒருவரை வைத்துப் புராணபடனம் செய்யக் கேட்டு மனமுருகி நின்ருர்கள். இவ்வாறு எல்லாம், எங்கும் சிவக்காட்சியாகவே இருந்தது. திருப்பள்ளி யெழுச்சிக் காலத்திலே நிகழ்ந்த இச் சித்திரம், இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால் என்ற திருவாசகச் சிந்தனையை எழுப்ப, குமாரசாமி மடம் சென்றடைந்தோம்.

'நாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக' என்றது போலும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திருவுள்ளம். ஆதீனத் திருமடத்தைச் சேர்ந்த எல்லா அன்பர்களுக்கும், காசிக்கயிறும், திருநீற்றுப் பிரசாதமும் அனுப்ப உத்தரவாயிற்று. உத்தரவும் செயலில் நடந்தது.

## காசியிலே பத்தாண்டுவிழா

### அப்பர் குருபூசை:

தவமும் தவம்உடையார்க்கே ஆகும் அல்லவா? (1945) சித்திரை சதயத்தன்று அருளாட்சி ஏற்ருர்கள் நமது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள். அந்தச் சித்திரை சதயம் இவ்வாண்டு காசியிலே 18—4—1955 அன்று நிகழ்வதாயிற்று சமயாசாரியயிரிலே அப்பர் பெருமானுடைய குருபூஜைத் திருநாள் அன்று. இது ஒரு பெரிய வாய்ப்பு. நிற்க,

### திட்டம் மாறியது:

18—4—1955 அன்று பிரயாகைக்கு எழுந்தருளிக் கங்கை எடுத்து வருவதாகத் திட்டம். முதல்நாளிரவு நித்திரைக்குப் போகும்முன் ஏதோ ஒரு உணர்ச்சி எங்களைத் தமிழ்ப் பஞ்சாங்கத்தைப் புரட்டச்செய்தது.

910

அதிலே 18—4—1955 அன்று சித்திரைச்சதயம் என்று போடப்பட்டிருந்தது. எங்களுக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதாமவர்களின் பத்தாவது ஆண்டு ஆட்சி நிறைவு, மறுநாள் வருவது அப்போதுதான் தெரிய வந்தது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களிடம் தெரிவித்துக்கொண்டோம். மறுநாள் பயணம் நின்றது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் திருவுளத்திலே ஒரு சிறு சோர்வு. காரணம் அப்போது காசி பண்டாக்கள் உத்தரப் பிரதேசத்தில் நிறைவேற்றப்பட்ட அரிஜன ஆலயப் பிரதேசத்தை எதிர்த்து உயர்நீதி மன்றத்திலே வழக்கிட்டிருந்தகாரணம். விசுவநாதரை முந்திய வருஷங்களைப்போல எல்லோரும், ஜாதி இந்துக்களாக இருந்தாலும், தொட்டு வழிபடப் பண்டாக்கள் அநுமதிக்க மறுத்துவிட்டிருந்தார்கள். வாயிலில் பண்டாக்கள் காவல். எல்லோரும் பெருமானை வெயிலிருந்தே தரிசித்துக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை. நல்ல விழா. அதுவும் தருமையிலே இருந்திருந்தால் பெருமையோடு பெருவிழாவாகக் கொண்டாடப்படவேண்டியது. ஏதோ புண்ணியவயத்தால் காசியில் கொண்டாடும்படியான வாய்ப்பு. "பண்டாக்கள் பிணக்கொழிந்தால் பரமன் வழிபாடு நக்குக் கிட்டும். எல்லாவற்றிற்கும் ஈசனருள் நமக்கிருக்கிறது. எதற்கும் யோசிக்கவேண்டாம். நல்ல - பெரிய அபிஷேக ஆராதனைகளுக்கு ஏற்பாடுகள் நடக்கட்டும். விசுவநாதர் எழுந்தருளியுள்ள திருத்தொட்டியில் பாற்கடல் பெங்கிவழிய வேண்டும். கல்யாணசுந்தரம் பிள்ளை வரட்டும். அபிஷேக ஆராதனைகளுக்கும், அடியார்களுக்கு அன்னம்பாலிப்புக்கும், மாகேசுவர பூசைக்கும் ஏற்பாடுகள் நிகழட்டும்" என்று உத்தரவிட்டார்கள். கல்யாணசுந்தரம்பிள்ளையும் வந்தார். கட்டளையைச் சிரமேற்கொண்டார். ஏற்பாடுகள் விரைந்து நடைபெற்றன.

## திருவருள் துணை :

18—4—1955 விடியல் 4 மணி. திருப்பனந்தாளிலிருந்து கேதார ஓதுவா மூர்த்திகள் வந்துநின்றார். இதுவரை எங்களோடு ஓதுவாமூர்த்திகள் எவரும் வரவில்லை.பெரிய விழாவுக்குத் திருமுறை ஓதக் கேதாரமே வந்துவிட்டது. எல்லாம் எதிர்பாராத நிகழ்ச்சி. திருவருள் வாய்ப்பு. காலையில் வழக்கம் போலக் கங்கை நீராட்டும், கேதாரேசுவரர் வழிபாடும் நிகழ்ந்தன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் வழிபாட்டுக்குவரும். செய்தி தெரிந்த பண்டாக்கள் மனமகிழ்வோடு அனுமதி அளித்தார்கள் ஆனால், அதில் ஒன்று; சாது மகராஜ். படேமகந்த் அவர் ஒருவர் மாத்திரம் பெருமானைத்தொட்டு வழிபடலாம். மற்றையோர் கூடவந்த எவராயினும் உள்ளேவரக்கூடாது. இதைமாத்திரம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களிடம் தெரிவித்து உத்தரவு வாக்கிவிடுங்கள். நாங்களும் உடன் இருந்து எல்லா உதவிகளையும் செய்து கொடுக்கிறோம்' என்றார்கள். இதைப் பெருமானின் கருணைத்திரமென்று சொல்லாமல் வேறுஎப்படிச்சொல்வது? வேண்டியார் வேண்டியாங்கு அருள்வழங்கும் வள்ளலல்லவா அவர்!

911



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் பிரார்த்தனை திருச்செவியில் ஏறியது. அழைக்கிறார், சென்றோம்; வழிபட்டோம். கேதாரநாதர் ஆலயத்திலும் விசுவநாதர் ஆலயத்திலும் பெருங்கூட்டம். எல்லோரும் தரிசித்தார்கள் வழிபாடு முடிந்து குமாரசாமி மடத்தில் அடியார்களுக்கு அன்னம்பாலிப்பும் மாகேசுவர பூசையும் நிறைவெய்தின. இவ்வாறு ஆடம்பரமின்றி வைதிக நெறி சிறக்கப் பத்தாண்டு விழா கொண்டாடப் பெற்றது.

வழக்கம்போல் நாள்தோறும் கங்கை நீராட்டும் கேதார நாதர் வழிபாடும் நடைபெற்றன. சப்தரிஷிபூஜை, அர்த்தசாம தரிசனம் நிகழ்ந்தன.

மறுநாள் அலகாபாத் சென்றோம். கங்கைநீரைக் குடங்களில் அடைத்துக் கொண்டோம். பிரயாகையில் நீராடினோம்.

## கங்காபானியும் சாது மஹாராஜும்:

அலகாபாத்திலிருந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் உந்தூர்தியில் காசிக்கு வந்தார்கள். மற்றையோர் இரயில் மூலம் வந்தார்கள். மற்றவர்களோடு ஏராளமாக சுத்தகங்கை ஏந்திய குடங்களும் கொண்டுவரப் பெற்றன காசியிலிருந்து 20 கல்லுக்கப்பால் கவுரா ரோடு என்னும் நிலயத்தை விட்டு வண்டி புறப்படடது. நிலய எல்லை கடந்து வரும்பொழுது ஒருபெட்டி தடம்புரண்டது. காசிக்கு வரவேண்டிய வண்டி உரியகாலத்தில் வரவில்லை. எங்களுக்குப் பெருங்கவலை. காசி நிலயத்திற் கேட்டால் அரை குறைச்செய்தியைச் சொல்லுகிறார்கள். வீண் பீதி லயத்தவிக்க. பிறகு கொஞ்சநேரம் கழித்துத் தடம்புரண்ட பெட்டியைக் கழற்றிவிட்டு வண்டி வந்துகொண்டிருக்கிற செய்தியைச் சொன்னார்கள் ஆனால் ஏதோ சிலருக்கு அடிபட்டிருக்கிறதென்றும் அவர்களும் அந்த வண்டியில் வருவதாகவும் செய்தி கிடைத்தது. எங்களுக்கு மேலும் கவலை அதிகரித்தது. இரயிலடியிலேயே தங்கியிருந்தோம். குறித்த காலத்துக்கு மூன்றுமணி நேரம் கழித்து இரயிலும் வந்து சேர்ந்தது. காசியிலும் பெருங்கூட்டம். இறங்குவோரும் ஏறுவோருமாக அடித்துப் பிடித்துக்கொண்டு எல்லோரும் இறங்கினார்கள். கங்கைக்குடங்களும்இறக்கப் பட்டன. எல்லோரும் நலமாக வந்து சேர்ந்ததைக்கண்டதும் எங்களுக்குப் பெரும் ஆறுதலும் மகிழ்வும் உண்டாயின. நாங்கள் சொன்னோம் 'ஆண்டவன் நமக்குத் துணை நிற்கிறான்' என்று. ஆனால் அந்த இரயிலிலிருந்து வந்த எங்கள் கோஷ்டியாரில் ஒருவர் 'இந்த நாட்டு மக்களுக்கு இதைவிடப் பண்பாடு அதிகமாக இருக்கிறது; விபத்து நேர்ந்தஇடத்தில் நாங்கள் இருந்த அடுத்தவண்டி தடம்புரண்டது. அங்கே ஒரே அழுகையும் கூச்சலும். வெளிச்சமும் குறைவு. தடம் புரண்ட பெட்டியைக் கழற்றிவிட்டு அதிலிருந்து பிரயாணிகளை மற்ற வண்டிகளில் ஏற்றிக் கொண்டு வண்டியும் புறப்பட்டது. நாங்களிருந்த வண்டியில் இருந்த மற்றொரு பிரயாணி இரயில் தப்பியதற்கு இந்தப் பெட்டியிலே வந்திருக்கும் 'கங்காபானியும் சாதுமகாராஜும் தான் காரணம்'

912

இல்லாவிடில் ரயில் முழுதுமே கவிழ்ந்துவிட வேண்டியதாயிற்றே. கங்கா மாயிக்கு ஜே! என்று சொன்னர்.

ஆனந்தமாக விசுவநாதரைத் தரிசிக்கும் பெரும் பேறு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்களால் எங்களுக்கு இரண்டாவது முறையாகவும் கிடைத்தது; இது எங்களுக்கு ஒரு தனிப்பெருமை. புனிதமான ஸ்ரீ காசியிலே இருந்து கங்கைநீராடப் பெறும்வாய்ப்பு எல்லார்க்கும் கிடைக்குமா என்ன.

## கேதார யாத்திரை

### தந்திவந்தது :

காசியிலே சிலநாட்கள் தங்கியிருக்கும்பொழுது திருப்பனந்தாளிலிருந்து ஸ்ரீலஸ்ரீ காசி வாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தோடு கேதார யாத்திரை செல்லும் பெரு விருப்புடன் பனசையை விட்டுப் புறப்பட்டு வந்துகொண்டிருப்பதாகத் தந்தி வந்தது.

### சந்திப்பு :

24—4—55 ஞாயிறன்று காலை 11 மணிக்குக் குமாரசாமி மடத்துக்கு வந்து சேர்ந்தார்கள், வந்ததும் திருமஞ்சனம் வழிபாடுகளையெல்லாம் முடித்துக்கொண்டு குருமகாசந்நிதானத்தைத் தரிசிக்க இப்பகுதிக்கு வந்தார்கள். உரிய முறையில் குருவழிபாடு செய்து பொன்னுடை போர்த்தி வணங்கினர்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமும் ஆதீனத்துக் கண்மணியிற்சிறந்தநன்மணியான ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளுக்குப் பொன்னுடை போர்த்தி ஆசி அருளினர்கள். பக்கத்திலே அமரச் செய்து நீண்ட நேரம் அளவளாவிக்கொண்டிருந்தார்கள். கேதாரத்திற்குப் புறப்படும் நாள் குறித்தும் பேச்சு வந்தது. ஆதீன ஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்கலிங்கப் பெருமானுக்கு சோமவாரம் மிக உகந்தநாளல்லவா? மறுநாள் அந்த நன்னளாகவே, அன்றே கேதாரம் புறப்படுவதாக உறுதியாயிற்று.

### கூட்டுப்பிரார்த்தனை :

மாலையில் கேதாரகட்டத்தில் எழுந்தருளியுள்ள கேதாரேசுவரருக்குச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்தன. பெரிய அபிஷேக ஆராதனை. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் இருவருமே சேர்ந்து நிகழ்த்திய ஒரு பெரும் பூசை. எங்களுக்கும் அந்த வாய்ப்பு கிடைத்தது. இப்படியாக இது ஒரு பெரிய கூட்டுப் பிரார்த்தனையாக

அமைந்தது. ஓதுவாரும் திருமுறை பாடினர். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளவர்களும் மனமுருகத் திருமுறை இசைத்தார்கள். பயணத்திற்கு ஏற்பாடுகள் நடைபெற்றன.

## புறப்பட்டோம் :

சோமவாரம் வழக்கம்போல் காலை வழிபாடுகள் எல்லாம் முடிந்தன. 10 மணிக்குப் புறப்படுவதற்கான ஆயத்தங்கள் விரைந்து நடந்தன. யாத்திரைக்குத் தேவையான பொருள்களை எல்லாம் திரு. கல்யாண சுந்தரம் பிள்ளை ஏற்பாடு செய்து முடித்தார். புறப்படுவதற்கு முன்னுகக் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் சிலகருத்துரை புகன்றூர்கள்.

"யாத்திரையில் அஞ்சாது நடக்கும் திறமையை விட்டுவிடாதீர்கள். செல்வதோ மலைவழி. பனிநிறைந்தபாதை. தக்க உடல் உரமும், உள்ள உரமும்கொண்டு உலையாது நடக்கவேண்டும். யாத்திரையின் போது பிறர் உதவி தேவையாக இருக்குமென்றுல் யாரும் வருதல் அரிதே. ஏனெனில் அவரவர் நடையைத்தான் பார்க்க முடியுமே ஒழியப் பிறருக்கு உதவிசெய்யக்கூடிய நிலையில் ஒருவரும் இருக்க முடியாது. வழி புதுவழி. ஆகவே மன உறத்தோடு ஒவ்வொருவரும் நடக்க முன்வர வேண்டும். இன்னென்று, கோஷ்டி கோஷ்டியாகத்தான் செல்லவேண்டும். ஆங்காங்கு நான் தங்கிவருகிறேன் என்று யாரும் சொல்லக் கூடாது. எளிமைப்பண்பு இன்றியமையாது தேவை. நமது யாத்திரிகர்கள் அனைவருக்கும் இந்த மனப்பாங்கும் மனேதிடமும் இன்றி யமையாதவை. ஸ்ரீல்ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுடன் நாம் செல்வதால் நமக்கு ஊறு எதுவும் உண்டாகாது. இது உறுதி. ஜெய் 'கேதார்நாத்'" எங்களில் ஒவ்வொருவரையும் அழைத்து ஊக்கப் படுத்தினர்கள்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்களின் உரையும், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் அருளாசியும் நம்பக்கம் இருக்கும்போது இனி எதற்கும் 'அஞ்சுவதும் இல்லை; அஞ்சவருவதும் இல்லை' என்று உறுதியோடு புறப்பட்டோம். இரயிலடியில் அன்பர்களின் 'அரகர' முழக்கத்துடன், 'கேதார்நாத்கி ஜே' முழக்கத்தோடும் இரயில் சுமார் 11 மணிக்குப் புறப்பட்டது. அன்பர்கள் பலரும் இரயிலடியில் வந்து சிவ முழக்கம் செய்தார்கள். கேதார நாதரின் பாதார விந்தங்களில் சிந்தையைச் செலுத் தியவாறே இரயில் பிரயாணத்தைத் தொடங்கினேம். காசியைவிட்டுப் புறப்பட்டோம். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களும், ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களும் முதல் வகுப்பிலும், நாங்கள் மூன்ரும்வகுப்புப் பெட்டியிலுமாக இருந்தோம்.

## நாடிசக்கரம்

தஞ்சை சரஸ்வதிமகால் வெளியீடு எண் 68. பக்கங்கள் 150 பதிப்பாசிரியர் திரு. வாசுதேவ சாஸ்திரிகள் B. A., ஆராய்ச்சி ஆசிரியர். தஞ்சை சரஸ்வதிமகால், திரு. K. S. சுப்பிரமணிய சாஸ்திரிகள் சமஸ்கிருத பண்டிதர், தஞ்சை சரஸ்வதிமகால்.

நாடி சக்கரம் என்னும் இந் நூல் நாடிகளின் நிலையைக் கண்டு வியாதிகளையும் அவற்றின் மூல காரணங்களையும் தெரிந்துகொள்ள வழிகாட்டியாக விளங்குகிறது. ஆயுர்வேத முறையில் நாடியைப் பார்த்தும், நோயுள்ளவர்களிடம் வெளிப்படையாகத் தோன்றும் குறிகளைக் கண்டும், வாய்மொழியால் கேட்டும் வியாதியை நிச்சயம் செய்கின்றனர். இம்மூன்றில் நாடியைப் பார்த்து நோயைத் தீர்மானம் செய்வதே சிறந்தது. இதில் நாடியின் நடை வேற்றுமைகளும் அதற்குக் காரணமும் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. வடமொழியில் உள்ள இதை யாவர்க்கும் பயன்படும்படி தமிழிலும் மொழிபெயர்த்து எழுதியிருப்பது மிகவும் நன்று. மற்றைய வைத்திய நூல்களின் உதவிகொண்டு இதில் பெயரளவில் குறிக்கப்பட்ட நோய்களை அவற்றின் குணம், செயல் முதலியவைகளைத் தமிழில் சொல்லியிருப்பது சாலச்சிறந்த செயலாகும். சுமார் 300 சுலோகமுள்ள இந்நூல் இன்னும் தொடர்பாகச் சில பாகம் இருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது. மற்றய நூல்களில் காணப்படும் வேற்றுமைகளையும் ஆங்காங்குக் கூறியிருக்கிறது. நாடி பார்த்தல் அனுபவத்தினாலேயே அறியக்கூடியது. கூடினும் ஓரளவு அதைப்பற்றி நூல்களில் கூற வேண்டுவதும் அவசியமே. K. இராஜகோபால சாஸ்திரிகள்.

## திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தமே

ஆசிரியர், திரு. க. வச்சிரவேலு முதலியாரவர்கள் பி.ஏ., எல்.டி., காஞ்சிபுரம். பக்கங்கள் 134. விலை 1—12—0.

திருக்குறள் ஒரு தெளிவான பளிங்குநீர்ப்பொய்கை. அதில் எட்டிப்பார்ப்போர் முகமெல்லாம் நிழலாடும். அது குறளாசிரியர் செய்த விந்தை. திருக்குறளைச் சித்தாந்த சிகாமணி வச்சிரவேலு முதலியாரவர்கள் ஆராய்ந்து அதன் உட்கிடை சைவசித்தாந்தமே என்றுமுடிவுகாணுகிறார்கள். முடிவுகண்டிருக்கும்முறை போற்றற்குரியது. ஆராய்ச்சி தெளிவாக இருக்கிறது. நடை தெள்ளத் தெளிந்த தமிழ்நடை. மதுரைத் திருவருள் தவநெறி மன்றத்தார் வெளியிட்டிருப்பதன் மூலம் தக்கதொரு தமிழ்ப்பணி செய்திருக்கிறார்கள். இதனைத் தமிழகத்துக்கு அளித்த ஆசிரியரைப் பாராட்டுகிறோம். சொ. சிங்காரவேலன்.

மதிப்புரை

## இருபா இருபஃது விரிவுக் கட்டுரை

திருவாவடுதுறை ஆதீன வெளியீடு. பக்கங்கள் 310 இயற்றியோர்:- திருவாவடுதுறை ஆதீன வித்துவான், திரு. தே. ஆ. ஸ்ரீநிவாசாசாரியார் அவர்கள். சிதம்பரம் ஸ்ரீ ஆனந்த நடராஜப்பெருமானின் ஆவணி அபிஷேக விழாமலராக வெளியிடப்பெற்றது.

திருவாவடுதுறை ஆதீனம் 21 ஆவது குருமணியாகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் அவர்கள் தமிழிற்கும் சிறப்பாகச் சமயதிற்கும் தொண்டு செய்து வருவதைத் தமிழுலகம் நன்கறியும். அவர்கள் செய்யும் பல்வகைத் தொண்டுகளில் வெளியீட்டுப்பணியும் ஒன்று. இக்குரு மூர்த்திகள் சாத்திர தோத்திர நூல்களை நன்கு ஆராய்ந்து வெளியிட்டு வருகின்றார்கள். சிதம்பரம் ஸ்ரீ ஆனந்த நடராஜப்பெருமான் ஆவணி அபிஷேக விழாமலராக இந்நூல் வெளிவந்துள்ளது. இருபா இருபஃது பதினான்கு சாத்திர நூல்களுள் ஒன்று. இதை அருளியவர் ஸ்ரீ அருணந்தி சிவாசாரியார். இரண்டு வகைப்பாடல்களாலாகிய இருபது பாடல்களை உடையது. 10 வெண்பாக்களும், 10 அகவல்களும் விரவி வருகின்றன. பாசலஷணத்தைப்பற்றித் தடை எழுப்பி விடைசொல்லுகிறார்கள். பாசநீக்கமே சிவப்பேறு. ஆதலின் இந்நூல் பாசநீக்கம் பற்றி அறிவிப்பது. இது சிவஞானபோதத்திற்கு விளக்கநூலாக அமைவது. இந்நூலுக்கு துறைசையாதீனத்து அடியவர், ஸ்ரீ வேலப்ப தேசிகர் அவர்கள் விளக்கவுரை ஒன்று தந்தருளினர். ஏனையோர் எழுதிய பல உரைகளும் உள்ளன. எளிய இனிய தமிழில் இந்நூலை விரிவுக் கட்டுரையாக பொழிப்பு, கருத்து, விளக்கங்களோடு எழுதியவர் திரு. ஸ்ரீநிவாசாசாரியார் அவர்கள். சாத்திர நூல்களை இதுபோல வெளியிட்டு சைவம் வளர்க்கும் துறைசைக் குரு முதல்வர் வாழ்க! என்று வாழ்த்துவது தமிழர் கடமை.

கிடைக்குமிடம்:- கண்காணிப்பாளர், நூல் நிலையம், திருவாவடுதுறை ஆதீனம். முகவரிக்கு 14 அண அஞ்சற் பில்லைகள் அனுப்பிப்பெறலாம்.

வி. சா. குருசாமி